சிதைக்கப்பட முடியாதது மயிலிட்டி மக்களின் கனவு
பக்கம் 12

விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

34c - 27c
ஓரளவு மேக மூட்டம்

சுடர் 31 | கதிர் 191 | வள்ளுவர் ஆண்டு 2047 | வைகாசி 22, சனிக்கிழமை 04.06.2016

# வாக்காளர் பட்டியலில் மாற்றுத்திறனாளிகளையும்

## உள்வாங்குமாறு தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்து

கிளிநொச்சி, ஜூன் 4
மாற்றுத்திறனாளிகள் அனைவரும் வாக்காளர் பெயர்ப் பட்டியலில் உள்வாங்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம சேவையாளர்கள் முன்னெடுக்கவேண்டும். எவரும் தவறவிடப் படக்கூடாது.
இவ்வாறு குறித்த அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார் தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய.
கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற வாக்காளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளார்.
இதன்போது தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழில் உரையாற்ற முடியாததையிட்டு நான் அனை பக்.23



## சீனா வருமாறு மைத்திரிக்கு அழைப்பு

கொழும்பு, ஜூன் 4
இரு நாட்டு உறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு சீன ஜனாதிபதி ஜின்பிங் விஷேட அழைப்பு விடுத்துள்ளதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக பக்.23

## வாள்வெட்டு குழுவை காப்பாற்றுகின்றதா வட்டு. பொலிஸ்?

யாழ்ப்பாணம், ஜூன் 4
அராலியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில், வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர்களது உறவினர்கள், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பில் 7 தினங்களுக்குள் அறிக்கை பக்.23

# நல்லிணக்கம் பற்றி ஆராய வருகின்றார் ஐ.நா. நிபுணர்

## பல தரப்புக்களையும் சந்தித்துப் பேசுவதுடன் தனது அனுபவங்களையும் பகிர்ந்துகொள்வார்

கொழும்பு, ஜூன் 4
நல்லிணக்கப் பொறிமுறை தொடர்பான இலங்கை அரசின் செயற்பாடுகளை ஆராயவும், இலங்கையுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், உண்மை, நீதி, மீண்டும் பிரச்சினைகள் ஏற்படாததை உறுதிப்படுத்துவது தொடர்பான ஐ.நாவின் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீவ் அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 32 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 13 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது. இந்த அமர்வில் இலங்கை தொடர் பக்.23



# வலி. வடக்கு மக்களின் சகல காணிகளும் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும்

## நலன்புரி முகாம் மக்களின் காணிகளை மட்டும் விடுவித்தால் சிக்கல் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 4
வலி.வடக்கில் விடுவிக்கப்படாத எஞ்சியநிலங்களும்விடுவிக்கப்பட வேண்டும். நலன்புரி நிலைய மக்களின் காணிகளை மாத்திரம் அடையாளப்படுத்தி, நடவடிக்கை மேற்கொள்வது சிக்கலை ஏற்படுத்தும்.
இவ்வாறு யாழ்.மாவட்டச் செயலகத்தினால், ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டது.
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் கடந்த திங்கட்கிழமை மீள்குடியமர்வு தொடர்பிலான விசேட கலந்துரையாடல் இடம்பெற பக்.23

## புலிகள் மீதான தடையை நீடித்துள்ளது அமெரிக்கா

### நிதி வலையமைப்பு தொடர்ந்து இயங்குவதாகத் தெரிவித்து

கொழும்பு, ஜூன் 4
தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதி வலையமைப்பு, இயக்க நிலையிலேயே தொடர்ந்தும் காணப்படுகின்றது.
இதனால் விடுதலைப் புலிகள் அமைப்பு மீதான பக்.23

## வரி அதிகரிப்புக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

### முன்னெடுத்தது ஜே.வி.பி.

கொழும்பு, ஜூன் 4
நாட்டில் அதிகரிக்கப்பட்டுள்ள வரி விதிப்புக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நேற்று முன்னெடுத்திருந்தது.
கோட்டை ரயில் நிலை பக்.23



## மாங்குளம் விபத்தில் ஒருவர் சாவு

மாங்குளம், ஜூன் 4
மோட்டார் சைக்கிளொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதகுடன் மோதியதில், அந்த மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். பக்.23

## மண்சரிவு நடந்த இடத்திலிருந்து 1 கிலோ மீற்றர் தூரத்தில் சடலம்



கொழும்பு, ஜூன் 4
அரநாயக்க மண்சரிவில் புதையுண்ட சடலங்களை மீட்பதற்கான பணிகள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ள நிலையில், நேற்றையதினம் சடலம் ஒன்று மண்சரிவு நடைபெற்ற இடத்திலி பக்.23

ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு 11% கவர்ச்சிகர வருடாந்த வட்டி
(வ.தே.வ. 11%)
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
011 5 411 411
நிபந்தனைகளுக்குட்பட்டது.
011 5 411 411
சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி
Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ
art sense
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித் தேங்காயை தெருப் பிள்ளையாருக்கு அடிக்கும் வடமாகாண சபை உறுப்பினர்கள்

## முதலமைச்சர் விக்கினேஸ்வரன் சாடல்

முல்லைத்தீவு, ஜூன் 4

எமது மக்களின் மனம் அறியாது, நிலை அறியாது உறுப்பினர்கள் பலர் செயற்பட்டு வருகின்றார்கள். செய்யவேண்டிய வேலைகள் இருக்கும் போது, சிறுபிள்ளைத்தனமான பல நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றார்கள். இவர்கள் வழித் தேங்காயை எடுத்து தெருப் பிள்ளையாருக்கு அடித்து விட்டு அதனைப் போட்டோ பிடித்து புதினப் பத்திரிகைகளில் போடுவது மட்டும் நிறைவாகாது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு தேவிபுரம் பகுதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புதுவசந்தம் தையல் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கும்போது, நீண்ட காலப் போரின் விளைவாக இப்பகுதியில் பல பாதிப்புக்கள் ஏற்பட்டன. 2009 ஆம் ஆண்டு இந்தக் காலப்பகுதியில் உயிர்ச்சேதம், பொருள் சேதம் எனப் பல பாதிப்புக்களை மக்கள் அனுபவித்தார்கள். அனைத்தையும் இழந்து நிர்க்கதியாக வாழ்ந்து வந்த இந்த மக்களில், ஒரு சிலருக்கு வாழ்வில் ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்படுத்தக்கூடிய வகையிலேயே இன்று இந்தத் தையல் நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவுப் பகுதியில் புதுக்குடியிருப்பில் போரினால் மிகவும் பாதிப்படைந்து அல்லல்படுகின்ற மக்களின் அவல நிலையைப் போக்கும் நோக்குடன், 2015 ஆம் ஆண்டில் புதுக்குடியிருப்பில் இந்தப் "புதுவசந்தம் நிலையம்" ஆரம்பிக்கப்பட்டது.

இதுவரை சுமார் 37 இலட்சம் ரூபா வரை வடக்கு-கிழக்கில் வாழும் சுமார் 60 குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்கியிருக்கின்றார்கள். ஒவ்வொரு கிராமங்களிலும் அந்தந்த பகுதிகளில் காணப்படக்கூடிய பொருளாதார வசதிகளைக் கொண்டு சுயமான தொழில் முயற்சியில் ஈடுபட்டு வளமாக வாழ்ந்து வந்த குடும்பங்கள், இந்தக் கொடிய போரினால் வீடு, வாசல், சொத்து, சுகம், கணவன், மனைவி, மக்கள் என அனைத்தையும் இழந்து நடைப்பிணங்களாக மாற்றப்பட்டிருக்கின்ற காட்சி எமது மனங்களை புண்ணாக்கியுள்ளது.

இந்த மக்களுக்கு எப்படி உதவலாம், என்னென்ன வகையில் இவர்களுக்கான உதவிகளை நல்க முடியும் என்று அல்லும் பகலும் சிந்திக்க வைக்கின்றது. வெளிநாடுகளில் இருந்தும், உள்ளூர் கொடை வள்ளல்களிடமிருந்தும், நிறுவணங்களில் இருந்தும் கிடைக்கக் கூடிய சிறுசிறு உதவிகளைக் கொண்டு முடிந்தளவு உதவி செய்து வருகின்றோம்.

எமது அரசியலுக்கும் மேலாக இந்த மக்களை எப்படி சராசரி மனிதர்களாகச் சமுதாயத்தில் ஓர் அங்கமாக அவர்களை மாற்றலாம் என்றே பாடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். ஆனால் நாங்கள் எவரும், எல்லோரும் கொண்டு வரும் பொருளாதார முன்மொழிவுகளை உடனே ஏற்றுக்கொள்ளமாட்டோம். எமது கருத்துரையாளர்களின் கருத்தறிந்தே இதைச் செய்கின்றோம். இதனால் எம்மால் பல விதமான விமர்சனங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது.

எமது அமைச்சர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் ஏதாவது இருந்தால், எழுத்தில் ஆதாரத்துடன் தந்தால் உடனே உரிய நடவடிக்கைகள் எடுப்பேன் என்று கூறிய பின்னரும், சபையில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டுவரத் தயாராகின்றார்கள்.

ஒருவரின் குற்றங்கள் கையுயர்த்தி ஏற்கப்படும் விடயங்கள் அல்ல. தாருங்கள் நான் உரியவர்களைக் கொண்டு விசாரித்து நடவடிக்கை எடுக்கின்றேன் என்றால் எதையும் என்னிடம் கையளிக்காமல் சபையில் சாட விரும்புகின்றார்கள். அமைச்சர்களைப் பற்றி அவதூறுகளை எடுத்து விளம்பவே சபையைப் பாவிக்கப் பார்க்கின்றார்கள். பல நன்மைகளை எதிர் பார்த்து மக்கள் இருக்கின்றார்கள். அதற்காகப் பாடுபடாது எதிர்மறையான காரியங்களிலேயே சிலர் தமது காலத்தைக் கழிக்கின்றார்கள்.

நோர்வே நாட்டில், கடும் குளிரின் மத்தியிலும் இரவு பகலெனப் பாராது தமது உடலை வருத்தி உழைக்கின்ற சில அன்பு உள்ளங்கள், இவ்வாறான ஒரு அமைப்பை ஆரம்பித்து அதன் மூலமாக ஒருவருட காலத்துக்குள் சுமார் 37 இலட்சம் ரூபா வரையான பணத்தை அனுப்பி வைத்து இப்பகுதியில் உள்ள மாணவர்களுக்கான கல்வி அபிவிருத்தி, பின்தங்கிய வடக்கு - கிழக்கு மக்களுக்கான வாழ்வாதார உதவிகள், போரினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் விதவைகளுக்கான தையல் நிலையம் என இன்னோரன்ன உதவிகளை ஆற்ற முடியுமானால் நாம் எமது பங்குக்கு என்ன செய்திருக்கின்றோம் -என்றார். (த-ஜ-21)

# தமிழ் அரசுக் கட்சிக் கிளை அலுவலக ஓராண்டு பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூன் 4

இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைக்கிளை அலுவலகத்தின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வும், க.பொ.த. உயர்தர சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு வட்டுக்கோட்டை அத்தியடி பிள்ளையார் கோயில் முன்பாக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மீள்குடியமர்வு, பொருளாதார அபிவிருத்தித் துணைச் செயலாளரும், உதயன் குழும நிர்வாக இயக்குநரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தனும், சிறப்பு விருந்தினராக இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசாவும், கௌரவ விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட பீடாதிபதி பேராசிரியர் சி. ஸ்ரீசற்குணராஜாவும், யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட நோயியல் துறைத் தலைவர் மருத்துவர் எஸ். கண்ணதாசனும் கலந்து கொள்வர். (த-ஜ-ரி)

# வடக்கு ஆளுநர் அலுவலகம் முன் சுகாதாரத் தொண்டர் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். மாவட்டத்தில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் அலுவலகங்களில் தாம் கடமையாற்றியதாகத் தெரிவித்துள்ளதோடு, தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறும் கோரும் சுகாதாரத் தொண்டர்கள் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு, ஆளுநரைச் சந்திக்க விரும்பினர்.

ஆனால் ஆளுநரின் செயலாளரையே அவர்களால் சந்திக்க முடிந்தது. இதன்போது 820 பேரை நியமிக்குமாறு மத்திய சுகாதார அமைச்சு வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்குப் பணித்திருந்தது. ஆனால், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் 600 பேரை மேலதிகமாக எடுத்துள்ளதாக ஆளுநரின் செயலாளர் தம்மிடம் கூறியதாகப் போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

வேறு திணைக்களத்திலாவது வேலை வாய்ப்புத் தருமாறு அவர்கள் கோரியதற்கு, எந்தத் திணைக்களத்திலும் ஆளணிப் பற்றாக்குறை இல்லை என்றும், வடக்கு மாகாண ஆளுநர், தான் பதவி ஏற்று 3 மாதங்கள் தான் ஆகின்றன என்றும், வடமாகாண சுகாதார அமைச்சரையே சந்திக்குமாறு அவர் கூறியுள்ளார்.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் தனது செயலாளர் திருவாகரனை சந்திக்குமாறு கூறியுள்ளார். இதன்போது அவர்களின் பெயர்ப்பட்டியலைத் தருமாறு கூறப்பட்டுள்ளதாகப் போராட்டக்காரர்கள் கூறினர். (த-ஜ-4-106)

# மாணவி துஷ்பிரயோகம் கைதாகினார் முதியவர்

வவுனியா - நெடுங்கேணி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக வகுப்புக்குச் சென்று திரும்பும்போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பாடசாலைக்கு முன்பாகச் சாப்பாட்டுக்கடை வைத்திருக்கும் 54 வயதுடைய முதியவர் அந்தக் குற்றத்தைப் புரிந்துள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதனால் அவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச்சம்பவம் குறித்து கருத்துத் தெரிவித்த சிறுமியின் தாயார், பாடசாலைக்கு உடனடியாக வருமாறு எனக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அங்குசென்றபோதே சம்பவம் தெரிவிக்கப்பட்டது. மகளிடம் விடயத்தைக் கேட்டபோது அவர் பயத்தில் எதுவும் சொல்லாமல் இருந்தார். உண்மையைக் கூறினால் அப்பா, அம்மாவின் தலையை வெட்டி உங்கள் காணிக்குள் எறிந்துவிடுவேன் எனச் சந்தேக நபர் மிரட்டியதால் மகள் என்னிடம் உண்மையைக் கூற பயப்பட்டதாகவும் தனக்குத் தெரிவிக்கப்பட்டதாக தாயார் கூறினார்.

இதனால் 119 இலக்கத்துக்குத் தொடர்பு கொண்டு தகவலை பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியதையடுத்து பொலிஸார் சந்தேக நபரைக் கைது செய்ததுடன் மகளை வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் தாயார் மேலும் தெரிவித்தார்.

இதுதவிர, குறித்த சந்தேக நபர் தனது தேநீர் கடையில் போதைப் பொருள்களை விற்பனை செய்து வருவதாகவும் பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர். அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)

# ஆற்றுகை நிகழ்வு இன்று பல்கலையில்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வடக்கு, தெற்குப் பல்கலைக்கழக ஆங்கில இலக்கியத் துறையினரின் ஆற்றுகை நிகழ்வு இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளதாக துறைசார் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் களனி மற்றும் யாழ். பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய மாணவர்கள் பங்கேற்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (த-ரி)

# ஆஸ்திரேலியா செல்ல முயன்ற 33 இலங்கை அகதிகள் தடுப்பு

கொழும்பு, ஜூன் 4

தமிழ்நாடு, பழவேற்காடு, திருக்கழுகுன்றம் பகுதிகளில் இருந்து ஆஸ்திரேலியாவுக்குத் தப்ப முயன்ற 33 இலங்கை அகதிகளை பொலிஸார் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இலங்கை அகதிகள் முகாம்களைச் சேர்ந்த சிலர் ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்ல முயல்வதாக கியூப் பிரிவுப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது.

இதையடுத்து பொலிஸார் கடந்த புதன்கிழமை நள்ளிரவு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டனர்.

அப்போது அவ்வழியாக வந்த வானை மடக்கிச் சோதனையிட்டனர். அதில் 18 பேர் இருந்தனர். விசாரணையில் அவர்கள் அனைவரும் கும்மிடிப்பூண்டி, வேலூர், பவானிசாகர் பகுதிகளில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசிப்பவர்கள் எனத் தெரியவந்தது.

அனைவரும் பழவேற்காடு சென்று, அங்கிருந்து கப்பல் மூலம் ஆஸ்திரேலியாவுக்குச் செல்ல இருந்ததும் தெரியவந்தது. இதையடுத்து அகதிகளை ஏற்றிவந்த வானைப் பொலிஸார் பறிமுதல் செய்தனர். அகதிகளை பொலிஸ் நிலையம் அழைத்துச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இதேபோன்று சென்னை–கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் பொலிஸார் நடத்திய வாகனச் சோதனையில் ஒரு வானில் வேலூர், புழல் பகுதியைச் இலங்கை அகதிகள் 10 பேர் இருந்ததையடுத்து, அந்த வாகனம் பறிமுதல் செய்யப்பட்டது. அதில் இருந்த 10 பேரிடமும் சோழவரம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இலங்கை அகதிகள் தொடர்பாக மாமல்லபுரம் பொலிஸாருக்குப் பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து சதுரங்கப்பட்டினம் பொலிஸார் அங்கு சென்று சில வீடுகளை சோதனையிட்டனர். பொலிஸார் வருவதை அறிந்த 5 அகதிகள் தப்பினர். வேறு 5 பேர் மட்டும் பொலிஸாரிடம் சிக்கினர்.

விசாரணையில் இவர்கள் தமிழகத்தில் உள்ள பல்வேறு அகதிகள் முகாம்களில் இருந்து அங்கு அழைத்து வரப்பட்டிருந்தது தெரியவந்தது. இவர்களிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (த-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மாவட்டத்தில் நீர் சுத்திகரிப்புத் திட்டம்

## ஜூன் 12 இல் திறந்து வைப்பார் மைத்திரி

யாழ்ப்பாணம், ஜூன் 4
வடக்கு மாகாணத்தில், சிறுநீரக நோயால் பாதித்த மக்கள் அதிகமாக வாழும் வவுனியா மாவட்டத்தில் நீர் சுத்திகரிப்பு இயந்திரப் பொறிமுறை ஒன்றைத் திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 12 ஆம் திகதி வவுனியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.
இலங்கையில் அதிகரிக்கும் சிறுநீரக நோய்த் தாக்கம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம், வடக்கின் 5 மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் சிறுநீரக நோய்த் தாக்கம் அதிகளவில் உள்ளோர் முதலிடத்தில் வவுனியா மாவட்டமும் இரண்டாவது இடத்தில் முல்லைத்தீவு மாவட்டமும் விளங்குகின்றன.
இந்த நோய்த் தாக்கத்துக்கு முக்கிய காரணமான குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நோக்கில் வவுனியாவில் பெரியளவிலான நீர் சுத்திகரிப்பு இயந்திரப் பொறிமுறை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வவுனியாமாவட்டத்தின் பொபஸ்வேவா பகுதியில் பொருத்தப்பட்டுள்ள குறித்த சுத்திகரிப்பு இயந்திரத்தைத் திறந்து வைக்கும் நோக்கில், எதிர்வரும் 12 ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வடக்குக்கு வருகை தரவுள்ளார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.
இதேவேளை, வடக்கில் அதிக பாதிப்பை எதிர் கொண்டதில் இரண்டாவது மாவட்டமான முல்லைத்தீவு மாவட்டத்திலும் ஒரு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் பொருத்தப்படுகின்றது. இந்தச் சுத்திகரிப்பு இயந்திரம் மாவட்டத்தின் வெலி ஓயாப் பகுதியிலேயே பொருத்தப்படுகின்றதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
(த-வ-4-101)

## வடக்கு சுகாதார அமைச்சரை அச்சுறுத்திய நபர் கைதானார்

வவுனியா, ஜூன் 4
வடக்கு மாகாண சுகாதார அமைச்சருக்குத் தொலைபேசியில் கொலை அச்சுறுத்தல் விடுத்து கப்பம் கோரியதாகத் தெரிவிக்கப்படும் சந்தேக நபரொருவரை நேற்றுக் கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கைது செய்யப்பட்ட சந்தேக நபர் இராணுவப் புலனாய்வாளர் எனவும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து புனர்வாழ்வு பெற்று வந்தவர் என்றும் குறிப்பிட்டுப் பலரிடம் கப்பம் பெற்று வந்துள்ளதாக ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
கடந்த மாதம் 20ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க, குறித்த விடயம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இரண்டு குழுக்களை நியமித்திருந்தார்.
இந்தக் குழுக்கள் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பியசிறி பெர்ணான்டோவின் மேற்பார்வையில் வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனி தலைமையில் விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.
இதன்போது வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.பி.சி.எஸ்.கே சௌரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டு, கிளிநொச்சி- இரத்தினபுரத்தை பிறப்பிடமாகவும் தற்போது வவுனியா- புதுக்குளத்தில் வசித்து வரும் நபரொருவரை நேற்றுச் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.
அத்துடன், கைது செய்யப்பட்ட நபர் நேற்றையதினம் மாலை வவுனியா பொலிஸாரால் வவுனியா நீதிமன்றில் முன்னிலைபடுத்தியபோது, சந்தேகநபரை எதிர்வரும் 17ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
சந்தேகநபர் தன்னை இராணுவப் புலனாய்வாளர் எனவும், தான் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து புனர்வாழ்வு பெற்று வந்திருப்பதாகவும் தெரிவித்து பலரிடம் கப்பம் பெறும் முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார் என ஆரம்ப விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.
(த-வ-21)

## மயிலிட்டியை விடுவிப்பதற்கு ராணுவம் எதிர்ப்பில்லையாம்

கொழும்பு, ஜூன் 4
மயிலிட்டி பிரதேசக் காணிகளை விடுவிப்பது தொடர்பில், ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்கு இராணுவத் தளபதி அல்லது இராணுவம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என இராணுவத் தலைமையகம் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த பிரதேச காணிகளை விடுவிப்பதில் இராணுவம் எதிர்க்கவில்லை என இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் கே.ஜே.ஜயவீர குறிப்பிட்டுள்ளார். (த-வ)



**கோடிபதி**
016
2016-06-03
அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ.82,672,360/-
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
Z 12 13 20 42
தொ.பே: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 03.06.2016 | வெற்றி வாரம் 1986 | வர்ணம் சிவப்பு

வெற்றி இலக்கங்கள்
12 15 29 50
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 2,980,020/-
2016-06-05 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஊதா நிற டிக்கட்டுக்களாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB space LOT space LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919


**விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள வெள்ளை நிற மொறிஸ் ஒக்ஸ்போட் கார் (டீசல்) விற்பனைக்குண்டு.
தொடர்பு:
077 844 9687

**நியத்த ஜய**
வெற்றி வாரம் : 467
திகதி : 03-06-2016
வர்ணம் : நீலம்
12 13 40 42 J
எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஜக்பொட் பரிசுத்தொகை
ரூ. 10,000,000/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**Study in Latvia ( Europe)**
Schengen Visa( Valid for 25 Countries)

Why Study In Latvia?
* Bachelors / Master / Doctoral level
* அரச அங்கீகாரம் பெற்ற பல்கலைகழகம்
* IELTS அவசியமில்லை
* இலகு Visa நடைமுறைகள்
* குறைந்த பாடநெறி கட்டணம்
* குறைந்த வாழ்க்கைச்செலவு கட்டணம்
* 20 மணித்தியாலம் வேலை செய்ய அனுமதி
2016 க்கான இறுதி வாய்ப்பு
ICS Study Overseas
Admission Help line
076 7013060
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம்
107, B 1/1 Galle Road,Colombo - 06

**வேலையாள்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் பிரபல வர்த்தக நிறுவனத்துக்கு பொருள்கள் வழங்குநரும், சிட்டை எழுதுநரும் (யாழ்.நகரில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) தேவை.
021 492 3724
குறிப்பு: ஆண்கள் மட்டும்

**மருத்துவ உதவியாளர் பயிற்சிநெறி**
*உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உடனடி வேலைவாய்ப்பு.
*கவர்ச்சிகரமான சம்பளம்
*பகுதி நேரமாகப் படிக்கலாம்
*வயதெல்லை கிடையாது
LAVA HOSPITALS
120,Temple Road, Jaffna.
077 320 3137


தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவின்
ஓய்வு நிலை கிராம அலுவலர்
உயர்திரு. கந்தையா வாமதேவன்
அவர்களின் சேவை
நினைந்து போற்றும்
**மணி விழா** Selebrating 60Years
காலம் : 04.06.2016 (சனிக்கிழமை)
நேரம் : பிற்பகல் 3.00 மணி
இடம் : மட்டுவில் வளர்மதி சனசமூகநிலைய அரங்கு
தலைமை : திரு.சிவசம்பு மதியழகன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர்)


பிரதம விருந்தினர்
உயர்திரு.க. அருந்தவபாலன் அவர்கள்
(முன்னாள் அதிபர் யா/ சாவகச்சேரி டிறிபேக்கல்லூரி, தென்மராட்சி அமைப்பாளர், தமிழரசுக்கட்சி)

சிறப்பு விருந்தினர்கள்
திருமதி இரஞ்சினி இரகுநாதன் அவர்கள்
(பிரதி திட்டமிடல் பணிப்பாளர், பிரதேச செயலகம், தென்மராட்சி)
திரு.ச.லலீசன் அவர்கள்
(பிரதி அதிபர், ஆசிரியர் கலாசாலை-கோப்பாய்)
திரு.அ.மனோரஞ்சிதன் அவர்கள்
(உதவிக் கல்விப்பணிப்பாளர்-தென்மராட்சி)

கௌரவ விருந்தினர்
திரு.செ.பஞ்சலிங்கம் அவர்கள்
(தொழிலதிபர், முத்துமாரியம்மன் மரத் தொழிலகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
மட்டுவில் வாழ் மக்களும் கிராம அபிவிருத்திச் சங்கமும்.
விளம்பர அனுசரணை- திரு.செ.பஞ்சலிங்கம்
(தொழிலதிபர் முத்துமாரியம்மன் மரத் தொழிலகம்)

**பாராட்டி வாழ்த்துகிறோம்**


Best Wishes
திரு.நடேசு துரைராஜா J.P
(ஓய்வுநிலை எழுதுவினைஞர் விவாகப் பதிவாளர் வடமராட்சி)
திரு.நல்லையா கணேசலிங்கம் J.P
(ஓய்வுநிலை வங்கிச்சேவை முகாமையாளர்)
21.05.2016 அன்று தேசோதய விழாவில் சர்வோதய தலைவர் திரு. ... ஆரியரத்னா அவர்களால் தேசோதய தீபம் எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமைக்காக அவர்களை பாராட்டி வாழ்த்துகிறோம்.
கற்பகப்பிள்ளையார் வீதி, உரும்பிராய் வடக்கு.
Lion Dr. S.V. கணேசவேல் J.P குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரக் கணிப்பாளர்கள் தேவை

எமது 769 சிற்றூர்தி சேவை கம்பனிக்கு 40 வயதுக்கு மேற்பட்ட நன்கு படித்த நேரக்கணிப்பாளர்கள் (ஆண்கள்) தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். இன்றிலிருந்து நான்கு நாள்களுக்குள் நேரில் சமுகமளிக்கவும்.

நிர்வாகம்

கே.கே.எஸ்.வீதி,
மாவிட்டபுரம்

**021 300 4166**

## வவுனியாவில் விற்பனைக்கு

9 அடி உயரம், 10 அடி அகலம் கொண்ட இரண்டு சோடி சுருக்குகேற், கிறில் வகை, கதவு என்பன விற்பனைக்குள்ளன.

தொ.பே. 024 222 0129 / 024 222 2097

(வி.42) (13.16)

## தேவை

1. சைவக்குரு (மடப்பள்ளி)
2. மேசன்மார் 4 உதவியாள்கள் (கட்டட வேலைக்கு)

யாழ்நகரில் பிரபல்யமான ஆலயமொன்றுக்கு மேற்குறிப்பிட்டவர்கள் தேவைப்படுகின்றனர்.

தொ.பே. 076 635 0712 / 077 414 6223

## வேலைவாய்ப்பு

**ஹேசா இன்டஸ்றீஸ் நிறுவனத்தில் கிளிநொச்சி கிளைக்குப் பின்வரும் வேலை வெற்றிடங்கள் உள்ளன.**

1. டிமோ பட்டா, மகேந்திரா போன்ற வாகனங்களுடன் விற்பனை முகவர்கள்
2. பணம் அறவிடும் உத்தியோகத்தர்கள்

பெண்களும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு
முகாமையாளர் - T.P. செல்வம் - **077 020 0256**
அலுவலகம் - **021 492 7498**
ஹேசா இன்டஸ்றீஸ்,
A9 வீதி, கிளிநொச்சி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




காவேரி கலா மன்றத்தின் 13ஆம் வருடத்தை நோக்கி இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் சமூகக்காவலர் விருது 2016 பட்டம் பெறும் **வைத்தியர் திருமதி லீயோன் புஸ்பராணி** அவர்களை மேலும் பல விருதுகள் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்க வென வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்: வின்சன் குடும்பத்தினர்**
17,சோமசுந்தரம் வீதி, யாழ்ப்பாணம்.

(j/1848)
(11,17,18)

## பாராட்டுகின்றோம்




மட்டுவில் அமரர் Lion Dr.Phillips
அவர்களின் சிரேஷ்ட புத்திரி
**Dr.Pushparani Leon**
அவர்கள்
**இன்று (04.06.2016)**
சனிக்கிழமை வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவில் இவருக்கு
**சமூகக் காவலர் விருது 2016**
விருது வழங்குவதையிட்டு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

Lion M.Thavakumaran
-M/J/F
தலைவர், லயன்ஸ் கழகம்,
வட்டுக்கோட்டை.

Lion Lady
சிவந்தினி சிவரூபன்
லயன்ஸ் கழகம்
வட்டுக்கோட்டை.

(j/1849)

# வடக்கு- கிழக்கு இணைக்கப்பட்டால் சிங்கள -முஸ்லிம் மக்களுக்கு பாதிப்பு

## முன்னாள் அமைச்சர் கெஹலிய எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 4

மாகாண சபைகளுக்கு குறைந்தளவிலான பொலிஸ் அதிகாரங்களை வழங்கலாம். ஆனால் வடக்கையும், கிழக்கையும் இணைத்தால் கிழக்கு மாகாணத்தில் வாழும் சிங்கள-முஸ்லிம் மக்களின் நிலைமை கேள்விக்குறியாகிவிடும்.

-இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரம்புக்வெல இது தொடர்பில் மேலும் குறிப்பிடுகையில்,

இனப் பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமாக வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டுமாயின் அது மத்திய அரசின் தீர்மானமாக அமைய வேண்டும். ஆனால், அவ்வாறு மத்திய அரசு இதற்கான தீர்மானத்தை எடுத்தாலும், அது பெரிய பாதிப்புக்களை கொண்டு வருவதாகவே அமையும்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்தால் அதன் மூலம் கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களும், சிங்கள மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஒருவேளை கிழக்கு மாகாணத்தில் உள்ள முஸ்லிம் மக்களுக்காகத் தனி அலகை வழங்கினால் அந்த மாகாணத்தில் உள்ள சிங்கள மக்களுக்கு என்ன நடக்கும்? எனவே வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பது என்பது சாத்தியமற்றதாகும். அவ்வாறு செய்யவும் கூடாது.

மாகாண சபைகளுக்கு குறைந்தளவிலான பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை நான் முன்னரேயே கூறியிருக்கின்றேன். அதாவது மாகாண சபைகளுக்கு குறைந்தளவிலான பொலிஸ் அதிகாரங்களை வழங்கலாம். ஒரு முறைமையின் கீழ் இதனை முன்னெடுக்க வேண்டும். அதாவது போக்குவரத்துக் குற்றங்கள், போதைப்பொருள் குற்றங்கள் உள்ளிட்டவற்றில் மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியும்.

அதேவேளை, தற்போதைய நல்லாட்சி அரசின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. காரணம் 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு பிரதமர் ரணில் விக்ரமசிங்க முயற்சிக்கின்றார்.

எனவே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையில் மாற்றங்கள் கொண்டு வரப்படும் சாத்தியமில்லை - என்றார். (த-ஐ-5)

## வீட்டுடன் கூடிய 6½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு

இந்தக் காணி உடுவில் மகளிர் கல்லூரிக்கு மிக அருகில் உள்ளது. உடுவில் சிங்கம் ஒழுங்கை ஊடாகவும், மானிப்பாய் - உடுவில் வீதி ஊடாகவும் பாதைகள் உள்ளன.

**077 775 5175**

(கே/1818)
(11,18)

### விற்பனைக்கு

NPQB XXXX, NPYE XXXX
இலக்க இரு ஆட்டோக்கள்
விற்பனைக்குண்டு.

**021 791 5871**

### வாடகைக்கு

நல்லூரில் தனியறை, குளியலறை, சிறிய சமையலறை அரச உத்தியோகத்தர் சிறிய குடும்பத்துக்கு உகந்தது

**072 685 4215**

### வீடு வளவு விற்பனைக்கு

இராசபாதை, கரந்தன் சந்தியில் இருந்து மேற்குப் பக்கமாகப் போகும் றோட்டில் இரண்டாவது முடக்கில் கோயிலுக்கு வடக்கே சுற்று மதிலுடன் 3 பரப்புக்காணி புதிய வீட்டுடன் மின்சார வசதி, குழாய்க் கிணறு, பங்காக உரிய வெட்டுக்கிணறு வழிவாய்க்கால் பாவிப்பு உருத்துடன் விற்பனைக்குண்டு.

**077 978 3206**

### தவறிவிட்டது

42, அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய 552201493V எண் குறிப்பிட்ட முத்துக்குமார் மனோகர் எனும் பெயரிலான எனது அடையாள அட்டை 01.06.2016 கிளிநொச்சி ஜெயந்தி நகருக்கும் கிளிநகருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் **077 482 6794** என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உதவவும்.

(கே/1828)
(11,18)

### பொமனேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள்கள் நிரம்பிய பொமனேரியன் ஆண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
கலர் - பிறவுண்

(கே/1841) (13,18)　தொடர்பு **075 040 5734**

### நாய்க்குட்டி விற்பனைக்கு

7 மாதங்கள் நிரம்பிய பெண் German Shepherd நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

**077 321 1913**

## 1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ்.
# கலாலயா
பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- *கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,*
- *Hair Dressing & Styling* (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)
- *முக அழகுக் கலை* (Facials)
- **Pedicure, Manicure** (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகுபடுத்துதல்)
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

- பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். **(கிழமை நாட்களில் மட்டும்)**

கிழமைநாள் பிரிவுகள்: 10.06.2016 (வெள்ளி)
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்: 11.06.2016 (சனி)
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

ராஜீவ் காந்தி படுகொலை:

## 7 தண்டனைக் கைதிகளையும் விடுவிக்கக்கோரி போராட்டம்

சென்னை, ஜூன் 4

ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் குற்றம் சுமத்தப்பட்ட ஏழு பேரையும் விடுதலை செய்யக் கோரி எதிர்வரும் 11 ஆம் திகதி கவனவீர்ப்புப் பேரணி, தமிழகத்தின் வேலூரிலிருந்து கோட்டையை நோக்கி நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எதிர்வரும் 11 ஆம் திகதியுடன் இவர்கள் கைது செய்யப்பட்டு 25 வருடங்கள் நிறைவடைகின்றன.

இதனை முன்னிட்டே, ஏழுபேரினதும் விடுதலையை வலியுறுத்திப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.


11ஆம் திகதி வேலூரில் இருந்து கோட்டையை நோக்கி கோரிக்கைப் பேரணி நடத்த அரசிடம் அனுமதி கேட்டார் பேரறிவாளனின் தாய் அற்புதம்அம்மாள்.

அவரது கோரிக்கைக்கு அரசு செவிசாய்த்துள்ளதை மனித உரிமை ஆர்வலர்கள் வரவேற்கின்றனர்.

அரசியல் சார்பு இல்லாமல், மனித நேயம் உள்ளவர்கள் எல்லோரும் இதில் கலந்து கொள்ள வேண்டும். என்னுடைய கோரிக்கை மனுவை முதல்வர் வாங்கினாலே போதும். மனதளவில் திருப்தி அடைந்து விடுவேன், என்று அற்புதம் அம்மாள் உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

மனித நேயத்தோடு இந்தக் கோரிக்கைப் பேரணியில் பங்கேற்போம், என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் அறிக்கை வெளியிட்டுள்ளார். (த-வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வரணி அருள்மிகு சிட்டிவேரம் கண்ணகை அம்மன் ஆலயம் (சுட்டிபுரம்)

# தேர்த்திருவிழா சிறப்பிதழ் - 04.06.2016 -

## ஆலய வரலாறு

ஈழத்திரு நாட்டின் சிரசு என விளங்கும் யாழ்ப்பாணத்தில் நீண்டுயர்ந்த பனை, தென்னை, நெல்வயல்கள், களனிகள் தோட்டங்கள் என வளம் பல கொண்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் கொடிகாமத்திலிருந்து பருத்தித்துறை செல்லும் பிரதான வீதியில் ஏறத்தாள 05 கிலோ மீற்றர் தூரத்தில் வரணி எனும் பழமை பேணும் பழம்பெரும் கிராமத்தில் சோலைகள், வாவிகள் சூழ்ந்து காணப்படும் இடத்தில் வீதியின் மேற்குப் புறமாக இந்தச் சுட்டிபுரம் ஆலயம் அமைந்துள்ளது.

முற்காலத்தில் இப்பகுதியில் சித்தர்கள் பலர் வாழ்ந்து வேதித்த இடமாதலால் இந்த இடம் சிட்டிவேரம் எனப் பெயர்பெற்றது. சிட்டி+வேரம் என்பதே காலக் கிரமத்தில் மருவி சுட்டிபுரம் என வந்ததென அறியப்படுகின்றது.

இந்த ஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம், தலவிருட்சம் என்பன ஒருங்கே அமையப்பெற்ற சிறப்பைத் தருகின்றது.

மூர்த்தி. சிட்டிவேரம் கண்ணகை அம்பாள்
தலம் : வரணி சிட்டிவேரம் (சுட்டிபுரம்)
தீர்த்தம்: தும்புருவில்
தல விருட்சம்: பாலை

முன்னொரு காலத்தில் தும்புரு எனும் முனிவர் இத்தீர்த்தத்தில் நீராடி அம்பாளை பூசித்ததாகவும் அதனாலேயே இப்பெயர் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. மேலும் பல சித்தர்களும் யோகிகளும் இத் தீர்த்தத்தில் நீராடி அம்பாளை வழிபட்டதாகக் கூறப்படுகின்றது. இத்தீர்த்தத்தில் வெண்தாமரை, செந்தாமரை நீலோற்பலம், செங்கழுநீர் போன்றவற்றையும் பல மூலிகை அம்சங்களும் உள்ளன. ஈழத்திலே கண்ணகி வழிபாட்டுக்கு தனித்துவமான இடம் உண்டு. இவ்வழி பாடு தென்னிந்தியாவில் இருந்தே இலங்கைக்கு வந்ததென வரலாற்றுச் சான்றுகள் கூறுகின்றன. கண்ணகி பாண்டிய மன்னனிடம் நீதி கேட்டு சிலம்பை உடைத்து உண்மையை நிலைநாட்டி தாம் கொண்ட சினத்தால் மதுரையை எரித்து, சினம் தணிந்து, கடல் கடந்து இலங்கைக்கு வந்ததாகவும், இங்கு 10 இடங்களில் கோயில் கொண்டதாகவும் அவ்வாறாக கோயில் கொண்ட ஐந்தாவது இடமே சுட்டிபுரம் எனவும் கூறப்படுகின்றது.

இந்த ஆலயத்தில் புராதன காலம் தொடக்கம் கோவலன் கண்ணகி கதைபடிக்கப்பட்டு வருகின்றது. இதன் காப்புச் செய்யுள் கேட்கும்போது வடமராட்சி கிழக்கு குடாரப்பு எனும் கிராமத்தைச் சேர்ந்த கந்தர் வெற்றிவேல் என்பவரால் எழுதப்பட்ட ஏடாக கொள்ளப்படுகிறது.

இன்னும் பல சிறப்புக்களும் அற்புதங்களும் வாய்ந்த இவ்வாலயத்தில் கண்ணகித் தாயார் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றார். நாமும் கண்ணகித் தாயை வழிபாடு செய்து இஷ்டசித்திகளைப் பெற்று உய்திபெறுவோமாக.

ஆலய பரிபாலன சபை

V.T.MODERNS MART
கதிரை, மெத்தை, ஆலயப்பொருள்கள், அன்பளிப்பு பொருள்கள், சில்வர் பாத்திரங்கள் மற்றும் சகல விதமான பொருள்களுக்கும் நாடவேண்டிய இடம்
வீ.ரீ. மொடேர்ன்ஸ்மார்ட்
K.K.V: 077 315 1454
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.

உதயகுமார் களஞ்சியம்
சகலவிதமான பலசரக்கு பொருள்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சந்தை உட்புறம், கொடிகாமம்.

AVM ஸ்ருடியோ
பஸ் நிலையம் முன்பாக, கொடிகாமம்.

சிறி வெற்றிலைக்கடை
கோயில் அபிஷேகப் பொருள்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள், வாழைப்பழம், வெற்றிலைபாக்கு ஆகியன மொத்தமாகவும் சில்லறை யாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
சந்தை உட்புறம், கொடிகாமம்.
077 278 4730, 077 844 9736

பலசரக்குப் பொருள்கள், கட்டடப்பொருள்கள், என்பவற்றிற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்
மணியம் களஞ்சியம்
பல்பொருள் வாணிபம்
பழைய பஸ்நிலையத்தில் இயங்கிய ஸ்தாபனம் புதுப்பொலிவுடன் எதிர்ப்புறமாக இயங்கி வருகிறது.
கண்டி வீதி, கொடிகாமம்.

Shanthan Elecrician
உரிமையாளர்: இ.சாந்தநபன்
சாந்தன் எலக்ரீசியன்
வீட்டு மின் இணைப்பு உபகரணங்கள் திருத்துதல், Dish இணைத்தல், Dishcard செயற்படுத்துதல், நீர்க்குழாய் பொருத்துதல், மோட்டார் திருத்துதல் மற்றும் T.V பழுது பார்த்தல் போன்ற அனைத்து சேவைகளையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.
சந்தை வீதி, கொடிகாமம்.
077 844 8024, 021 205 0305

சகலவிதமான மளிகைப் பொருள்களையும் பெற்றுக் கொள்ளும் இடம்
இராஜேஸ்வரி
பலசரக்கு மளிகை
ஏ9 வீதி, கொடிகாமம்.

ஏ9 இல் இயங்கிய
அருண் ரெக்ஸ்ரைல்ஸ்
தற்போது கச்சாய் வீதியில் (பொலிஸ் நிலையம் அருகில்) புதுப்பொலிவுடன் இயங்குகின்றது என்பதை வாடிக்கையாளருக்கு அறியத்தருகின்றோம்.
சகலவிதமான ஆடைத்தெரிவுகளுக்கும்
அருண்ரெக்ஸ்ரைல்ஸ்
T.P: 021 205 0329

தேர்த்திருவிழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
ரூபி
நகைமாளிகை
கண்டி வீதி, கொடிகாமம்.
077 617 3046, 077 241 8473, 021 205 0378

கண்ணகை
சேர்விஸ் நிலையம்
உரிமையாளர்:S.சந்திரமோகன்
பருத்தித்துறை வீதி, கொடிகாமம்.
077 437 8950

நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்
வதனி நகை மாடம்
தங்க பவுண் நகை வியாபாரம்
22 கரட் தங்க நகைகள் ஓடருக்கு உத்தரவாதத்துடன் செய்துகொடுக்கப்படும்.
கண்டி வீதி, கொடிகாமம். தொ.பே. 077 800 2724

தரமே என்றும் நிரந்தரம், இராஜேஸ்
Raiese Tone
Tone Prodections
Video, Photo, பந்தல்சேவை, Sounds and light
மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.
077 7111 705, 077 1275 288

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நன்றி செலுத்தும் வழிபாடு

நல்ல போராட்டத்தைப் போராடினேன்
ஓட்டத்தை முடித்தேன் விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன் (தீமோதி 4: 7)



### திருமதி இரஞ்சிதம் குட்டித்தம்பி

அவர்களின் வாழ்க்கைக்காகவும் சேவைக்காகவும் இறைவனுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு எமது இல்லத்தில் 2016.06.04 சனிக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நடைபெறும். இந்த வழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

"கிருபை" கரணவாய் கிழக்கு,
கரவெட்டி. (C 21808) (14,17,18)

திரு.ம.குட்டித்தம்பி,
திரு.திருமதி அன்பழகன் போல்.


# மகிந்தவின் ஊடகப் பேச்சாளரை நாடு கடத்தியது சிங்கப்பூர் அரசு

கொழும்பு, ஜூன் 4

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஊடகப் பேச்சாளர் றொகான் வெலிவிட்டவை, சிங்கப்பூர் அரசு நாடு கடத்தியுள்ளது.

ஆசிய ஒலிபரப்புக் கண்காட்சியில் பங்கேற்பதற்காக, கடந்த திங்கட்கிழமை றொகான் வெலிவிட்ட சிங்கப் பூர் சென்றிருந்தார்.

சிங்கப்பூர் விமான நிலையத்தில், அவரை மூன்று மணி நேரம் தடுத்து வைத்து விசாரணை செய்த அந்த நாட்டின் குடிவரவு, குடியகல்வுத்துறை அதிகா ரிகள், இறுதியில் சிங்கப்பூருக்குள் நுழைய அனு மதி வழங்க முடியாது என்று கூறி, அவ ரைக் கொழும்புக் குத் திருப்பி அனுப் பியுள்ளனர்.

சி.எஸ்.என். தொலைக்காட்சியின் முன்னாள் தலைவரான றொகான் வெலிவிட்ட, அந்தத் தொலைக்காட்சியில் இடம்பெற்ற நிதி முறைகேடுகள் தொடர்பாக, மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வர் யோசித ராஜபக்சவுடன் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்.

வெளிநாடு செல்வதற்கு இவருக்குத் தடை விதித்தி ருந்த நீதிமன்றம், பின்னர் அந்தத் தடையை நீக்கியிருந்தது. இவ்வாறானதொரு நிலையிலேயே சிங்கப்பூருக்குள் நுழைய அவர் அனுமதிக்கப் படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். (த-ஜ-5)


## முதலாம் ஆண்டு நினைவலையில்..



அமரர் முருகேசு
### கிருஸ்ணநவரட்ணராசா
(மூனா)
(முன்னாள் பிரதேச சபைச் செயலாளர் - துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேசசபை)

மலர்வு 04.01.1959
உதிர்வு 14.06.2015

கண்முன்னே வாழ்ந்தகாலம் கனவாகிப் போனாலும் – எங்கள்
கண்ணாளனே உங்கள் முகம் கண்களிலே கருவுற்று கதைகள் பல கூறுவதினை
கணவரே நீர் அறிவீரோ!
மகனின் உயர்வுக்காய் மகத்தான பணி செய்தவரே மகன், மகன் என
மணிக்கணக்காய் அழைப்பவரே – இன்று மகனின் ஏக்கத்தை நீர் அறிவீரோ!

பசுமையான கதை கூறி – எம்மைப் பக்குவமாய் வழிநடத்தி பாரிலே புகழ் பெறவே எங்கள்
பாரதியாய் இருந்தவரே பாதியிலே விட்டு விட்டு பரன் அடி சேர்ந்ததினால் – இன்று
பரம்பரையே படும் பாட்டை எங்கள் பரனே நீர் அறிவீரோ!

279, பாரதிநகர்,
மல்லாவி. (கி/21805) (11,17,18)

குடும்பத்தினர்.
077 633 4951



## நினைவஞ்சலி

36ஆம் ஆண்டு | முதலாம் ஆண்டு





செல்லப்பா
பாலசுப்பிரமணியம்
தோற்றம் 02.11.1907 மறைவு 02.06.1980

கமலாம்பிகை
பாலசுப்பிரமணியம்
தோற்றம் 11.07.1922 மறைவு 04.06.2015

காலம் நம் துயரை ஆற்றிடும் என்றே காத்திருக்கின்றோம்
சீலமிகு வாழ்வு நாம் வாழ வழிகாட்டிய எம் ஒளித் தீபங்களே
ஞாலத்தில் நாம் வாழும்வரை என்றென்றும் உங்களை அஞ்சலித்திடுவோம்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

இளவாலை வடக்கு

அன்பு மகன், மருமகள்,
தர்மபாலா- சிவகாமி



## விழி நீர் சொரியும்
## 2 ஆம் ஆண்டு நினைவு நாள்



தோற்றம்
10
05
1955

மறைவு
28
05
2014

### நவமலர்(மலர்) இராஜகுலேந்திரம்

ஆண்டுகள் இரண்டு மறைந்தாலும்
உம்முடன் வாழ்ந்த காலங்கள்
என் நினைவை விட்டு அகலவில்லை

என்றும் பாசமிகு
கணவர்

மம்மி ஆண்டுகள் இரண்டு
ஓடி மறைந்தாலும் வாழ்க்கையில்
ஓர் பகுதியாய் எம்முடன் வாழ்கிறீர்
என்றும் உமது ஆத்மசாந்திக்காய்
இறைவனை வேண்டி நிற்கும்
உமது பிள்ளைகள்:

சு.இராஜகுலேந்திரம்
ஓய்வு பெற்ற மின் இணைப்பாளர்
கோப்பாய் வடக்கு

(J 1842) (14,17,18)

[illegible]
(லண்டன்)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
09
12
1930

மறைவு
05
05
2016

### அமரர் வின்சன்ற் அந்தோனிப்பிள்ளை

'ஆண்டவரே என் ஒளி அவரே என் மீட்பு யாருக்கு நான் அஞ்ச வேண்டும்"

கடந்த 05.05.2016 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டோருக்கும் பல்வேறு வழிகளில் உதவி செய்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக இன்று (04.06.2016) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு யாழ். தூய மரியன்னை பேராலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு இவரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.175, குருசோ வீதி,
யாழ்ப்பாணம். (J/1846) (11,17,18)

குடும்பத்தினர்.
077 370 5223


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக்குத்தில் முடிவடைந்த வாக்குவாதம்: ஒருவர் காயம்

பளை, ஜூன் 4

கடலோரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இருவருக்கிடையில் இடம்பெற்ற வாக்குவாதம் கத்திக் குத்தில் முடிந்தது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பால கடலோரியில் நடந்துள்ளது.

சகோதரிகளைச் திருமணம் செய்த சகலன் உறவு முறையைச் சேர்ந்த வடமராட்சி கிழக்கு வத்திராயன் வடக்கைச் சேர்ந்த இருவருக்கு. மருதங்கேணி கடலோரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்தவேளை வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அதன்போது அவர்களில் ஒருவர்தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் மற்றைய வரைக் குத்திக் காயப்படுத்தினார் எனத் தெரிவிக்கப்பட்டது

இது தொடர்பாக பளைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார், காயமடைந்தவரை மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.

வத்திராயன் வடக்கைச் சேர்ந்த அழகன் பிரபாகரன் (வயது 42 ) என்பவர் காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக அரசையா மோகனதாஸ் என்பவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (த-ற-ஐ-9)

# வலி.வடக்கில் மூடப்பட்ட பாடசாலைகள் திறக்கப்படும்

## வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

வலி.வடக்கு, ஜூன் 4

வலிகாமம் வடக்கில் தற்போது நடப்பது கல்விக்கான போராட்டமே. மீள்குடியேற்றப் பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளை மீள இயங்க வைப்பதே தற்போது எமது பெரும் முயற்சியாக உள்ளது. மூடப்படும் நிலைக்குச் சென்ற அனைத்துப் பாடசாலைகளும் மீள அவற்றின் சொந்த இடங்களில் இயங்க வைக்க நடவடிக்கைகள் மேற்காள்ளப்படும்.

- இவ்வாறு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தெரிவித்தார்.

புன்னாலைக் கட்டுவன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அண்மையில் மீள ஆரம்பிக்கப்பட்டது. வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே வலயக் கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும்தெரிவிக்கும்போது, உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள வலிகாமம் வடக்குப் பகுதி மீள விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதுதான் தெரிகின்றது வலிகாமத்திலேயே கூடுதலான நிலப்பரப்பையும், கூடுதலான பாடசாலைகளையும் கொண்ட பிரதேசம் வலி.வடக்கு என்று.

> வலிகாமம் வடக்குப் பகுதி மீள விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போதுதான் தெரிகின்றது, வலிகாமத்திலேயே கூடுதலான நிலப்பரப்பையும், கூடுதலான பாடசாலைகளையும் கொண்ட பிரதேசம் வலி.வடக்கு என்று.

நாம், தற்போது மக்கள் மீளக் குடியமர்ந்தார்களோ இல்லையோ, விடுவிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள பாடசாலைகளை மீள இயங்க வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். வலி.வடக்குப் பிரதேசத்தில் நாம் கல்விக்கான போராட்டத்தை நடத்தி வருகின்றோம்.

2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி இந்தப் பாடசாலை விடுவிக்கப்பட்டது. பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டே இந்தப் பாடசாலையை மீள உருவாக்கினோம். இந்தப் பிரதேசத்தில் 464 குடும்பங்கள் பதிவை மேற்கொண்டுள்ளன. 224 குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன. மீளக்குடியமர்ந்தவர்கள் தங்களது பிள்ளைகளை இந்தப் பாடசாலையில் சேர்க்க முன்வரவேண்டும். இந்தப் பிரதேசத்திலிருந்து நகர்ப்புறப் பாட சாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள், இந்தப் பாடசாலையில் கல்வி கற்பதற்கு முன்வர வேண்டும். நகர்ப்புறப் பாட சாலை அதிபர்களும் அதற்கு ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் - என்றார்.

வலி.வடக்கு உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் இன்னமும் 14 பாட சாலைகள் சொந்த இடங்களுக்குப் போகவேண்டிய நிலையில் உள்ளன என்பதும் குறப்பிடத் தக்கது.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வலி.வடக்கு பிரதேசசபை முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன், மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் ராதாகிருஷ்ணன், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர், அயல்பாடசாலை அதிபர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-ஐ-25)

# சூழல் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறையில் பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 4

உலக சுற்றுச் சூழல் தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் எதிர்வரும் திங்கட்கிழமை ஊர்காவற்றுறை பிரதேசத்தில் ஊர்வலம் இடம்பெறவுள்ளது. பிரதேசசபைச் செயலாளரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த ஊர்வலம் திங்கட்கிழமை முற்பகல் 9.15 மணியளவில் ஊர் காவற்றுறை ஆதார வைத்தியசாலையிலிருந்து புறப்பட்டு, பிரதான வீதி வழியாகச் சென்று நகர்ப்புறத்தை வந்தடையும். இந்தப் பேரணியில் அரச உத்தியோகத்தர்கள்,பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் ஆகி யோரைத் தவறாது கலந்து கொள்ளுமாறும் பிரதேச சபை செய லாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-115)

# இசை வேள்வி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

அகில இலங்கை கம்பன் கழகத்தால், ஸ்ரீ ராமநாம கானாமிர்தம் எனும் இசை வேள்வி நிகழ்வுகள் நாளை முதல் நடத்தப்படவுள்ளன. நல்லூர் கம்பன் கோட்ட மேல் மண்டபத்தில், ஈழத்தின் பிரபல கலைஞர்களும், இந்தியக் கலைஞர்களும் கலந்து கொள்ளும் தியாகராஜ சுவாமி இசை ஆராதனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதியில் இருந்து 10 ஆம் திகதி வரை, மாலை 5 மணிக்கு யாழ்ப் பாணம் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் பிரபல நாதஸ்வர, தவில் வித்வான்களின் கச்சேரிகளும், அதனைத் தொடர்ந்து தமிழகத்தில் இருந்து வருகை தந்த பிரபல இசைக் கலைஞர்களின் பாட்டுக் கச்சேரியும் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வுகளில், மல்லாடி சேகாதரர்கள், அபிஷேக்ர குராம், ஓ.எஸ்.தியாகராஜன், ரி.என்.சேகோபாலன், பம்பாய் ஜெயஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-ற-ஐ-ரி4)

# காற்றுச்செலுத்தும்இயந்திரத்தை புனரமைக்குமாறு கோரிக்கை

சாவகச்சேரி,ஜூன் 4

அண்மையில் மரம் முறிந்து வீழ்ந்ததில் சேதமடைந்த சாவகச்சேரி எரிபொருள் நிலையத்தின் காற்றுச் செலுத்தும் இயந்திரத்தை புனரமைக்குமாறு வாகனச் சாரதிகள், சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரைக் கோரியுள்ளனர்.

சங்கத்தின் எரிபொருள் நிலையத்தில் காற்றுச் செலுத்தும் இயந்திரம் பொருத்தப்பட்டிருந்த இடத்துக்குப் பக்கத்தில் காணப்பட்ட பெரிய மரம் முறிந்து வீழ்ந்ததில், வாகன ரயர்களுக்குக் காற்றுச் செலுத்தும் இயந்திரமும், அருகில் காணப்பட்ட மின்கம்பமும் முறிந்து சேதமடைந்தன.

ஏ- 9 வீதியூடாக வரும் பெருமளவான வாகனங்களும் , சாவகச்சேரி நகரப்பகுதி வாகனங்களும் எரிபொருள் நிலையத்தில் காணப்பட்ட காற்றுச் செலுத்தும் இயந்திரத்தில் தமது வாகன ரயர்களுக்கு காற்றை நிரப்பிச் செல்வது வழக்கம்.

இந்த நிலையில் மரம் முறிந்ததால் அந்தக் கருவி சேதமடைந்து ஒரு வாரமாகியும் திருத்தப்படாமல் உள்ளதால் அத னைப் புனரமைக்குமாறு சாரதிகள் கோரியுள்ளனர். (த-ஐ-9)

# சிவசிதம்பரத்தின் நினைவு தினம்

கரணவாய், ஜூன் 4

உடுப்பிட்டித் தொகுதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சிவசிதம்பரத்தின் 14 ஆவது நினைவு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கரணவாய் மூத்த விநாயகர் கல்யாண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உடுப்பிட்டித் தொகுதி தமிழரசுக்கட்சியின் உபதலைவர் க.இரத்தினம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் நினைவுப் பேருரைகளை எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், இலங்கைத் தமிழரசுக்கட்சித் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ சுமந்திரன், சி.சிறீதரன், ஈ.சரவணபவன் மற்றும் தமிழரசுக்கட்சியின் யாழ்.மாவட்டக் கிளைத் தலைவர் கனக சபாபதி ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வுக்கு முன்னதாக நெல்லியடிச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவச்சிலைக்கு மரியாதை செலுத்தும் நிகழ்வும், வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகனால் தந்தை செல்வா அறக் கட்டளை நிதியத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான வாழ்வாதார உதவிகளும் வழங்கப்படவுள்ளன. (த-ஐ-108)

# வெளிநாட்டிலிருந்து வருவோருக்கு குருதிப் பரிசோதனைகள் கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

வெளிநாடுகளில் இருந்து வருபவர்கள் மலேரியா தொடர்பான குருதிப் பரிசோதனைகளைக் கட்டாயமாகச் செய்யவேண்டும் என்று யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன் தெரிவித்தார்.

மலேரியா தடுப்புத் தினத்தை முன்னிட்டு, சுகாதாரத் திணைக்களத்தினரும், மலேரியாத் தடுப்பு இயக்கத்தினரும் ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளருக்கான செயலமர்வு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந்தச் செயலமர்வில் கலந்து கொண்டு உரையற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கும்போது,

தற்போது நுளம்பால் ஏற்படும் தாக்கங்கள் சவாலானதாக உணரப்பட்டுள்ளன. குறிப்பாக டெங்கு, மலேரியா போன்ற நோய்களை ஏற்படுத்தும் நுளம்புகளின் பரவலை குடாநாட்டில் அவதானிக்க முடிகின்றது.

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் குடியேற்றவாசிகள் சிலர் மலேரியா நோய்த் தாக்கத்துக்கு இலக்காகியிருக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது. குடாநாட்டைப் பொறுத்த வரை மலேரியா நோய் பெருமளவில் இனங்காணப்படாத போதிலும், அதனை ஏற்படுத்தும் நுளம்புகள் தாராளமாகவே குடாநாட்டில் உள்ளன.

இத்தகைய நிலைகளைத் தவிர்ப்பதற்காக மலேரியா நோயோடு வருபவர்களை இனங் காணவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த நோய் இலங்கையில் பரவாதபடி நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய அவசியமும் ஏற்பட்டிருக்கிறது.

எனவே இந்த விடயத்தில் கண்டிப்பாக அவதானமாக இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து வருகின்ற அனைவருக்கும் குருதிப் பரிசோதனை செய்து வருகின்றோம். எனவே இந்த விடயங்களில் பொது மக்களின் அவதானம் கட்டாயமானதாகத் தேவைப்படுகின்றது.

அத்துடன் இங்கிருந்து மலேரியா தாக்கக் கூடிய பிரதேசங்களுக்கு போக இருப்பவர்களும், மலேரியா தடுப்பு மருந்துகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதனால் அங்கு அவர்கள் தங்கியிருக்கும் காலங்களில் மலேரியாவில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். எனவே வெளிநாட்டிலிருந்து வருபவர்களும், இங்கிருந்து செல்பவர்களும் இந்த விடயங்களில் கவனம் செலுத்துங்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-ஐ-109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்டார் சைக்கிளின் பின்புறம் ஒருபக்கம் இருந்து செல்லத் தடை

கிளிநொச்சி, ஜூன் 4
கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளில் பின்புறம் ஒருபக்கமாக இருந்து பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணிக்கும் இருபாலாரும், இரண்டு பக்கங்களும் கால்களை வைத்தவாறே பயணிக்கவேண்டும் எனவும், மோட்டார் சைக்கிளில் ஒருபக்கமாக இருந்து பயணிப்பதால் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் கீழே விழுவதற்குச் சந்தர்ப்பம் உள்ளதாகவும், இதனாலேயே ஒருபக்கமாக இருந்து பயணிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருபக்கமாக இருந்து பயணிப்பதால், அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன. போக்குவரத்துச் சட்டத்தின் பிரகாரம் இந்தக் குற்றத்துக்குப் பொலிஸார் தண்டப்பணம் அறவிட முடியாது. அதனால் இவ்வாறான குற்றங்கள் நீதிமன்றத்துக்கே அனுப்பப்படும்.

எனவே அனைவருக்கும் முதற்றடவை மன்னிப்பு வழங்குவதாகவும், மீண்டும் இவ்வாறு நடக்கும் பட்சத்தில் நீதிமன்றத்துக்கு குற்றமிழைப்போர் அனுப்பப்படுவர் எனவும், மோட்டார் சைக்கிளில் ஒருபக்கமாக இருந்து பயணிக்கும் அனைவருக்கும் கிளிநொச்சிப் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(த-ஜ-21)

# கால்நடைகளைக் கடத்தும் மாபியாக்கள் முல்லையில்

## தடுத்து நிறுத்துமாறு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 4
முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாபியா கும்பல் ஒன்று, சட்ட விரோதமான முறையில் கால்நடைகளைக் கடத்தி வியாபாரம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதனைத் தடுக்கக் கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், முல்லை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவருமான சி.சிவமோகன் தெரிவித்தார்.

பசுக்களும் வகைதொகையின்றிக் காடுகள் ஊடாகக் கடத்தப்பட்டு வெளிமாவட்டங்களில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், கால் நடைகள் தொடர்பான ஆராய்வுகள் இடம்பெறும் போதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள மாபியாக் கும்பல் ஒன்று, சட்ட விரோதமான முறையில் கால்நடைகளைக் கடத்தி வியாபாரம் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது. இதனால் முல்லை மாவட்டத்தில் கால்நடை அபிவிருத்தி மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கும்பல் மாடுகளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள காடுகள் ஊடாகக் கடத்திச் சென்று, வவுனியா நகரத்துக்கு அப்பால் உள்ள இரட்டைப் பெரியகுளம் கிராமத்தின் காடுகள் ஊடாக வெளி மாவட்டங்களுக்குக் கடத்துகின்றது.

ஒரு வருடத்துக்கு ஆயிரம் மாடுகள் வெளிமாவட்டங்களுக்குச் கொண்டு செல்லலாம் எனவும், ஆயிரம் மாடுகளுக்கே அதற்கான அனுமதியை வழங்கவேண்டும் என்றும் சட்டம் உள்ளது. ஆனால் இங்கு வகைதொகையின்றி மாடுகள் கடத்தப்பட்டு வருகின்றன.

எனவே இதை நிறுத்த வேண்டும். இதற்குச் சரியான நடைமுறைகள் பின்பற்றப்படவேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார். அத்தோடு இது தொடர்பாக கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் வினவியிருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினரின் குற்றசாட்டுகளுக்குப் பதிலளித்த கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், நாங்கள் முறைப்படி 2015, 2016 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு 1000 மாடுகள் மட்டுமே கொண்டு செல்ல அனுமதிகள் வழங்கியிருந்தோம். இருந்தும் இவ்வாறு சட்டவிரோதமாகப் பெருந்தொகையான மாடுகள் கடத்தப்படுகின்றன. சமயங்கள் என்ன கூறினாலும், காளை மாடுகள் தான் இறைச்சிக்காக வெட்டப்பட வேண்டும், இதுதான் உண்மை. எனவேதான் காளை மாடுகளைக் கொண்டு செல்வதற்கான அனுமதிகளை வழங்கினோம்–என்றார்.

அவருடைய கருத்தை அடுத்து சட்டவிரோதமான முறையில் மாடுகளைக் கடத்தும் மாபியா கும்பல் தொடர்பாகச் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் பொலிஸ் மேலதிகாரியூடாக அறிவுறுத்தப்படுவதாகவும், இது தொடர்பாக மக்களின் முறைப்பாடுகள் கிடைக்கும் பட்சத்தில் உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனை அடுத்து மக்கள் தகவல் வழங்குவதற்கு அதற்கான தொலைபேசி இலக்கம் ஒன்றை அறிமுகம் செய்யுமாறு கூறிய வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன், பொதுமக்கள் மாடுகள் கடத்தல் விடயத்தில் கவனமெடுத்து, பொலிஸ் நிலையங்களுக்கு அறிவிக்குமாறும் தெரிவித்தார்.

(த-ஜ-21)


## மீள் கேள்வி அறிவித்தல்
## குறித்தொதுக்கப்பட்ட மாகாண அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் (PSDG) - 2016
## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம், வடமாகாணம்

திட்டத்தின் பெயர் -பண்ணாகம் மெய்கண்டான் வீதி புனரமைப்பு- NP/14/41(17)2/ PSDG-02/2016

1. தலைவர், உள்ளூர் ஆட்சிமன்ற பெறுகைக்குழு, **வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்,** தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறு வீதி. வேலைக்காக கோருகின்றார்.
2. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
3. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி **வீதி அமைப்புக்கான** பொருத்தமான தரத்தில் இக்ராட் (ICTAD)பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
4. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5**இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், **வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் (தொலைபேசி : 0212250144,** தொலைநகல் :**0212250144,** மின்னஞ்சல் : valiwestps@gmail.com)) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 13.00 மணி வரை 27.06.2016 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்** எனும் இடத்திலிருந்து 06.06.2016 ஆம் திகதியிலிருந்து **27.06..2016 ம் திகதி** வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 13.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/- (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
7. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனி கடித உறைகளில் இட்டு **செயலாளர்,வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்** எனும் முகவரிக்கு 27.06.2016ஆம் திகதி பி.ப 13.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது. கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று – 29.08.2016) நாள்கள் வரையும் செல்லுபடியாகும்.
9. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்விஎண் | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (மில்.ரு) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/41(17)2/ PSDG-02/2016 | பண்ணாகம் மெய்கண்டான் வீதி புனரமைப்பு | 2.637 | 03 மாதங்கள் | C 8 அல்லது அதற்குமேல் (வீதி) | 26,500.00 | 26.09.2016 |

11) கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் வலிகாமம் மேற்கு பிரதேசசபைக் கட்டடத்தில் 20.06.2016 அன்று மாலை 14.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்துகொள்ள முடியும்.

தலைவர், உள்ளூர் ஆட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் மேற்கு பிரதேச சபை,
சுழிபுரம்,
வடமாகாணம்.
03.06.2016






முல்லைக்கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு நேற்று முன்தினம் ஆரம்பமாகி, நேற்றுடன் நிறைவடைந்தது. இதில் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர்இ.ரவீந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்ததோடு, கண்காட்சிப் பிரிவையும் திறந்து வைத்தார். (த-ஜ-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகளை எதிர்கொள்ளும் பனை, தென்னை வளச் சங்கங்கள்

## யாழ். அரச அதிபரிடம் மனுக் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தச் சங்கங்களின் பிரதிநிதிகள் அண்மையில் யாழ். மாவட்ட செயலரைச் சந்தித்து எடுத்துக் கூறியதுடன், மனு ஒன்றையும் கையளித்துள்ளனர்.
பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் தற்போதைய நிலையில் பல்வேறுபட்ட நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதால் சங்கங்களின் அங்கத்தவர்கள், தொழிலாளர்கள் போன்றோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.
குறிப்பாகப் போத்தலில் அடைக்கப்பட்ட கள்ளுக்கான உற்பத்தி வரி அதிகரிக்கப்பட்டமையும் மற்றும் போத்தல் கள்ளை அடைக்கும் தொழிற்சாலைக்கான வருடாந்த புதுப்பித்தல் கட்டணம் அதிகரித்தமையாலும் சங்கங்கள் பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன.
போத்தலில் அடைப்பதற்கான இந்த உற்பத்தி வரியைக் குறைக்குமாறு பல தடவைகள் அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டும் இதுவரை எவ்வித ஆக்கபூர்வமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.
இந்த வரி அதிகரிப்புச் சுமையால் சங்கங்கள் பெரிய நிதி நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன.
அத்துடன் கள் விற்பனை நிலையங்களை அந்த இடங்களிலேயே நடத்துவதற்கும், நீண்டகால விற்பனை நிலையங்களின் வருடாந்த அனுமதிப் பத்திரத்தை நேரடியாகப் பிரதேச செயலகங்களில் வழங்குவதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொண்டு தருமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது.
போயா மற்றும் விசேட விடுமுறை நாள்களில் இறக்கப்படும் கள்ளைச் சேமித்து வைப்பதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தக் கள்ளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டும்.
அத்துடன் மீளக் குடியமர்ந்த பகுதியான தெல்லிப்பழை மற்றும் மருதங்கேணிப் பிரதேசங்களில் உள்ள சங்கங்களின் தலைமைக் காரியாலயங்களுக்கான கட்டட வசதியை அமைப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும்.
அதனை விட சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கு வாகன வசதிகளை வழங்கி உதவுவதற்கு முன்வர வேண்டும் என்றும் அரச அதிபருக்கு வழங்கப்பட்ட மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டது.
(த-ஜ-17)

## முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா

காரைநகர், ஜூன் 4
கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்ட காரைநகர் தங்கோடை கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக் கட்டடத் திறப்புவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
சங்கச் செயற்குழு உறுப்பினர் ஆ.பரஞ்சோதி தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக, சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், சிறப்பு விருந்தினராக யாழ்மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் ஆகியோர் கலந்து கொள்வர்.
(த-ஜ-250)

## மாடியில் இருந்து தவறி வீழ்ந்து தொழிலாளி காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
யாழ்.நகரப் பகுதியில் உள்ள விடுதி ஒன்றின் இரண்டாம் மாடியில் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த மேசன் தொழிலாளி தவறி வீழ்ந்து தலையில் பலத்த காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதி தீவிரசிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒருவரே படுகாயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
(த-ற-ஜ-107)

## இனந்தெரியாதோர் தாக்குதலினால் குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
கள்ளுத்தவறணைக்கு அருகில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் தலையிலும் முகத்திலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று அச்சுவேலிப் பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் அச்சுவேலி தோப்புப்பகுதியில் கடந்த 28 ஆம் திகதி இரவு நடந்துள்ளது. தனிப்பட்ட விரோதம் காரணமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.
(த-ற-ஜ-107)

## அடிக்கல் நடும் விழா

காரைநகர், ஜூன் 4
காரைநகர் மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் திரி தள ராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் விழா எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை காலை 8.40 மணி தொடக்கம் முற்பகல் 9.40 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.
காரைநகர் இடைப்பிட்டியைச் சேர்ந்த இராமநாதர் சிவசுப்பிரமணியம் குடும்பத்தின் உபயமாக, பல மில்லியன் ரூபா செலவில் இந்தத் திரி தள இராஜ கோபுரம் கருங்கல்லினால் அமைக்கப்படவுள்ளது.
(த-ஜ-250)

## இரு மாதிரிக் கிராமங்களுக்காக வவுனியாவில் அடிக்கல் நடுகை



வவுனியா, ஜூன் 4
வவுனியாவில் இரண்டு மாதிரிக் கிராமங்களை உருவாக்குவதற்கு முதற்கட்டமாக 50 வீட்டுத் திட்டங்களை அமைக்கும் நோக்கில், அதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
வவுனியா ஈரப்பெரியகுளம் பகுதியில் 25 வீடுகளை உள்ளடக்கிய மாதிரிக் கிராமத்துக்கான அடிக்கல்லும், குடாக்கச்சக்கொடிப் பகுதியில் 25 வீடுகளுக்கான அடிக்கல்லும் நேற்று முன்தினம் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிஷாத் பதியூதீன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஜெயதிலக ஆகியோரால் உத்தியோக பூர்வமாக நட்டு வைக்கப்பட்டது.
வீடமைப்பு அதிகார சபையின் அமைச்சர் சஜித் பிரேமதாசாவின் அனைவருக்கும் நிழல் எனும் தொனிப்பொருளிலான மாதிரிக் கிராமத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வே இடம்பெற்றது.
இடம்பெயர்ந்து வீடுகள், காணிகள் அற்ற குடும்பங்களைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபா மானிய அடிப்படையிலும், மூன்று இலட்சம் ரூபா கடனடிப்படையிலும் நிதி வழங்கி இந்தத் திட்டம் இடம்பெற்று வருகின்றது.
நிகழ்வில் வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக்கட்சியின் அமைப்பாளர் பி.ஏ.கருணதாசா, வவுனியா மாவட்ட செயலாளர் எம்.பி. ரோகண புஸ்பகுமார, வன்னி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக இணைப்பாளர் சிவலிங்கம் மற்றும் வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரிகள், அப்பகுதி கிராம உத்தியோகத்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.
(த-ஜ-21)

## பெரியகிராமம் மக்கள் மின்சாரமின்றிச் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 4
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அரியாலை தென்கிழக்கு பெரியகிராமம் மின்சாரம் இன்றி இருளில் மூழ்கிக் காணப்படுவதாக அந்தப் பிரதேச மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.
அரியாலை தென்கிழக்கு ஜே/89 கிராம அலுவலர் பிரிவில் 50 இற்கும் அதிகமான குடும்பங்கள் வசித்து வருகின்றது. இந்தப் பகுதியில் அநேகமான குடும்பங்கள் மின்சாரம் இன்றிய நிலையிலேயே இன்றுவரை வாழ்ந்து வருகின்றன.
இந்தப் பகுதியானது, கடற்கரையை அண்டிய பகுதியாக இருப்பதால் விஷ ஜந்துக்களின் நடமாட்டம் இரவில் அதிகமாகக் காணப்படுகின்றன. குழந்தைகள், சிறுவர்கள் இரவுப்பொழுதைக் கழிப்பதில் பெரும் சிரமத்துக்குள்ளாகின்றனர்.
பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் இன்னமும் குப்பிவிளக்கில் கல்விகற்கும் நிலையிலேயே உள்ளார்கள். மண்ணெண்ணெய் வாங்குதாயினும் கொழும்புத்துறை அல்லது பாசையூர் ஆகிய இடங்களுக்குச் சென்றே பெறவேண்டிய நிலை உள்ளது.
தற்போது பலத்த காற்று வீசுவதால் கட்டப்பட்ட தற்காலிக தகரக் கொட்டில்கள் காற்றினால் அள்ளுண்டு போகும் நிலையில், குப்பி விளக்குப் பாவனையில் உள்ளவர்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் தமது வாழ்நாளைக் கழிக்க வேண்டி உள்ளது எனப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.
இந்த கிராமத்தின் நிலையைக் கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் இதில் தலையிட்டு இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
(த-ஜ-ரி)

## அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 4
சிறுபிள்ளைகள் மத்தியில் அருகி வரும் இந்து சமய அறிவையும், பழக்க வழக்க பண்பாட்டையும் விருத்தி செய்யும் நோக்குடனும், குருகுல மாணவர்கள் சமஸ்கிருத மொழியில் புலமை பெற வசதியாக அறநெறிப் பாடசாலை மற்றும், சிவாசாரிய பயிற்சி நெறிக்கான குருகுலம் என்பவற்றின் அங்குரார்ப்பண நிகழ்வு சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய கல்யாண அன்னதான மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் ஆலயத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், கௌரவ விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், யாழ்.பல்கலைக்கழக ஆங்கில மொழிபெயர்ப்புப் பிரிவு இணைப்பாளர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி யசோதா உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்வர்.
சர்வதேச இந்துமத பீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள் ஆசியுரையையும், நல்லை ஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் அருளுரையையும் நிகழ்த்துவார்கள்.
இங்கு தினமும் காலை 6 மணியிலிருந்து 7 மணிவரை குருகுல மாணவர்களுக்கான வகுப்புகளும், ஞாயிற்றுக்கிழமைகள் தோறும் முற்பகல் 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணிவரை அறநெறி வகுப்புகளும் நடைபெறவுள்ளன என்றும் அறிவிக்

## காவேரி கலாமன்றத்தின் விருது வழங்கல் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜூன் 4
காவேரி கலாமன்றத்தினால் இந்த வருடத்துக்கான சமூகக் காவலர் விருது வழங்கல் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
காவேரி கலாமன்றத்தின் தலைவர் கே.மதனகோபாலகிருஸ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும், பேராயர் எஸ்.ஜெபநேசனும், வாழ்நாள் பேராசிரியர் பி.பாலசுந்தரம்பிள்ளையும், வீணாகான குரு பீட அமைப்பாளர் சிவஸ்ரீ சபா வாசுதேவக் குருக்களும், வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள இயக்குநர் திருமதி வனஜா செல்வரட்ணமும் கலந்து கொள்வர்.
இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்தில் 5 பேரும், கிளிநொச்சியில் 2 பேரும், வவுனியாவில் ஒருவரும், மன்னாரில் ஒருவரும், முல்லைத்தீவில் ஒருவரும், பளையில் 2 பேரும் சமூகக் காவலர் விருதைப் பெறவுள்ளனர்.
(த-ஜ-ரி)

## விழிப்புணர்வுச் செயலமர்வு

அருங்கலைகள் பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்டம் கைப்பணியாளர்களுக்கான வருடாந்த விழிப்புணர்வுச் செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 9 மணிக்கு யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடத்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.
(த-ஜ-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிச் சின்னத்துடன் தொப்பி; இருவருக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஜூன் 4
தமிழீழ விடுதலைப் புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட ஒரு தொகைத் தொப்பிகளைத் தம்வசம் வைத்திருந்த சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட முன்னாள் போராளிகள் இருவருக்கும் விளக்கமறியல் காலம் நீடிக்கப்பட்டுள்ளது. மகாதேவன், ஜேசுதாசன் ஆகிய சந்தேகநபர்கள் இருவரும் வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களது விளக்கமறியலை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்க கொழும்பு மாவட்ட நீதிவான் அருணி ஆட்டிகல உத்தரவிட்டுள்ளார். சந்தேக நபர்களிடமிருந்து நீதிமன்றின் அனுமதியுடன் வாக்குமூலம் பெறுவதற்கு இரண்டு தடவைகள் முயற்சித்த போதும், இதன் பிரதான சந்தேகநபர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை என்று பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்திருந்தனர்.
(த-ஐ-5)

# ஐ.நாவில் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்றாமல் தப்பிவிடமுடியாது

## அதனைச் செய்யாமல் அரசால் அடுத்த கட்டத்துக்கு நகரமுடியாது என்கிறார் பாக்கியசோதி சரவணமுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 4
ஜனாதிபதியோ, பிரதமரோ அல்லது அமைச்சர்களோ, ஐ.நாவில் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் குறித்து மாறுப்பட்ட கோணத்தில் திரிவுபடுத்தி எதனைக் கூறினாலும், மனித உரிமைகள் சபையில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும். இதனைச் செய்யாமல் அடுத்த கட்டத்துக்கு அரசு நகர முடியாது. -இவ்வாறு தெரிவித்தார் மாற்றுக் கொள்கைக்கான மத்திய நிலையத்தின் பணிப்பாளரும், நல்லிணக்கம் தொடர்பான விசேட செயலணியின் செயலாளருமான கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
எதிர்வரும் 29 ஆம் திகதி இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹூசைன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிக்கவுள்ளார். அத்துடன், வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவும், உள்ளகப் பொறிமுறை தொடர்பில் இலங்கை அரசு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பில் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் உரையாற்றவுள்ளார். காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை நிறுவுவதற்கான நட வடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மாற்றியமைக்கும் செயற்பாடும் நடைபெறுகின்றது. ஏனைய விடயங்கள் தொடர்பில் பேச்சுக்கள் மாத்திரமே நடைபெற்றுள்ளன.
ஐ.நாவில் இலங்கை அரசு கொடுத்துள்ள வாக்குறுதிகளை ஒருபோதும் நிறைவேற்றாது முன்னோக்கி நகர முடியாது. இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் கொண்டு வரப்பட்ட அந்தத் தீர்மானத்தில் உள்ள அனைத்து விடயங்களையும் அரசு நிறைவேற்றியே ஆக வேண்டும். பலர் இது தொடர்பில் மாறுப்பட்ட கருத்துக்களைக் கூறலாம். ஆனால், அது சாத்தியப்படக்கூடிய விடயம் அல்ல. சர்வதேச நாடுகள் இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளுக்கே ஆதரவு வழங்கி வருகின்றன. எனவே, மனித உரிமை விவகாரத்தில் இலங்கை ஆக்கபூர்வமான நகர்வுகளை நோக்கிப் பயணிப்பது கட்டாயமாகும். மாறாக அதனை நிராகரித்துச் செயற்பட முடியாது - என்றார். (த-வ-5)


## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்

## விலைமனு கேள்விக்கான அழைப்பு

### சமைத்த உணவு வழங்கல், அழுக்குத்துணி சலவைச் சேவை, மின்சார மற்றும் நீர் விநியோகப் பொருள்களுக்கான பெறுகைகள் - 2016/2017

யாழ்ப்பாணம் பிராந்திய பெறுகைகள் குழு தகுதியான, தகைமை வாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து கீழ்வரும் வழங்கல் சேவைகளுக்கு முத்திரையிடப்பட்ட பெறுகைகளினைப் பின்வருமாறு கோருகின்றது.

**1. பிரதேச வைத்தியசாலைகளுக்கான சமைத்த உணவு விநியோகம்**

| பெறுகை இல | வைத்தியசாலைகள் | பெறுகை இல | வைத்தியசாலைகள் |
|---|---|---|---|
| DH/CM/2016/01 | பி.வை.அனலைதீவு | DH/CM/2016/09 | பி.வை.வரணி |
| DH/CM/2016/02 | பி.வை.காரைநகர் | DH/CM/2016/10 | பி.வை.கொடிகாமம் |
| DH/CM/2016/03 | பி.வை.நயினாதீவு | DH/CM/2016/11 | பி.வை.குருநகர் |
| DH/CM/2016/04 | பி.வை.வேலணை | DH/CM/2016/12 | பி.வை.மானிப்பாய் |
| DH/CM/2016/05 | பி.வை.வட்டுக்கோட்டை | DH/CM/2016/13 | பி.வை.கோண்டாவில் |
| DH/CM/2016/06 | பி.வை.மருதங்கேணி | DH/CM/2016/14 | பி.வை.அளவெட்டி |
| DH/CM/2016/07 | பி.வை.பண்டத்தரிப்பு | DH/CM/2016/15 | பி.வை.புங்குடுதீவு |
| DH/CM/2016/08 | பி.வை.கரவெட்டி | DH/CM/2016/16 | பி.வை.அம்பன் |
| | | DH/CM/2016/17 | பி.வை.இளவாலை |

ஒவ்வொரு வைத்தியசாலைகளுக்கும் மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 500/= ம், பாதுகாப்பு பணமாக ரூபா 10,000/= பணமாக செலுத்தப்பட வேண்டும்.

**1. வைத்தியசாலைகளுக்கான அழுக்குத் துணிச்சலவை சேவை**

| பெறுகை இல.(01) | பிரிவு ரீதியாக வைத்தியசாலைகள் (02) |
|---|---|
| H/LS/2016/01 | **பருத்தித்துறை** (அ) ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை (பகுதி 1), பிரதேச வைத்தியசாலைகள் வல்வெட்டித்துறை, மருதங்கேணி, அம்பன், கரவெட்டி,ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், பருத்தித்துறை, முள்ளியான். |
| H/LS/2016/02 | **பருத்தித்துறை (ஆ)** ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை (பகுதி 11) |
| H/LS/2016/03 | **சாவகச்சேரி** ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி, பிரதேச வைத்தியசாலைகள் வரணி, கொடிகாமம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் கைதடி. |
| H/LS/2016/04 | **ஊர்காவற்றுறை** ஆதார வைத்தியசாலை ஊர்காவற்றுறை, பிரதேச வைத்தியசாலைகள் அனலைதீவு, காரைநகர், ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், எழுவை தீவு |
| H/LS/2016/05 | **தெல்லிப்பழை** ஆதார வைத்தியசாலை தெல்லிப்பழை, பிரதேச வைத்தியசாலைகள் அளவெட்டி, இளவாலை, குரும்பச்சிட்டி |
| H/LS/2016/06 | **கோப்பாய்** பிரதேச வைத்தியசாலைகள் கோப்பாய், அச்சுவேலி, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் புத்தூர்,ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் உரும்பிராய். |
| H/LS/2016/07 | **சங்கானை** பிரதேச வைத்தியசாலைகள் சங்கானை, வட்டுக்கோட்டை, ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம், வட்டுக்கோட்டை, தொல்புரம் |
| H/LS/2016/08 | **சண்டிலிப்பாய்** பிரதேச வைத்தியசாலைகள் பண்டத்தரிப்பு, மானிப்பாய் |
| H/LS/2016/09 | **வேலணை** பிரதேச வைத்தியசாலைகள் வேலணை, புங்குடுதீவு, நெடுந்தீவு, மண்டைதீவு, நயினாதீவு |
| H/LS/2016/10 | **நல்லூர் யாழ்ப்பாணம் மற்றும் உடுவில்** பிரதேச வைத்தியசாலைகள் கோண்டாவில், குருநகர், ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையங்கள், திருநெல்வேலி, கொக்குவில், சுன்னாகம், இணுவில், புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம், உடுவில், ஏழாலை மற்றும் மார்பு நோய் சிகிச்சை நிலையம் பண்ணை. |

ஒவ்வொரு பிரிவுக்கும் மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 300/= ம், பாதுகாப்பு வைப்புப் பணம் ரூபா 3,000/= பணமாக செலுத்தப்பட வேண்டும்.

**3. மின்சார மற்றும் நீர் விநியோகப் பொருள்கள் வழங்கல்கள்**

| பெறுகை இல | பெறுகை விவரம் |
|---|---|
| RDHS/SEP/2016/01 | மின்சார மற்றும் நீர்விநியோகப் பொருள்கள் வழங்கல்கள் |

ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் மீளளிக்க முடியாத கேள்விப்பத்திர பணம் ரூபா 500/= ம், பாதுகாப்பு வைப்புப் பணமாக ரூபா 5,000/= பணமாக செலுத்தப்பட வேண்டும்.

1. விலைக்கேள்விதாரர் மேற்படி சேவைகளுக்கான ஒருநபராக அல்லது தனிப்பட்ட நிறுவனமாக வியாபார பதிவினையுடையதாக இருத்தல் வேண்டும்.
2. பெறுகைகளின் பிணைப்பொறுப்பு ஒவ்வொரு பெறுகைக்கும் மேலே காட்டப்பட்டுள்ள தொகை செலுத்தப்பட்டு தனித்தனியாக பெறுகைகளுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தகுதி வாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் மேலதிக விவரங்களினை அலுவலக நேரங்களில் இல. 572/3 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அல்லது தொலைபேசி இலக்கம் 021 222 2278 / 6253 Ext 20) மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
3. நாட்டமுள்ள விலைக்கேள்விதாரர்கள் இப் பணிமனையில் கிடைக்கும் 'Application for Bid Documents' என்ற படிவத்தினைப் பூர்த்தி செய்து மேற்காட்டிய ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக மேலே குறிப்பிட்ட தொகையை காசாகச் செலுத்தி பெறுகைப்பத்திரங்களை அலுவலக நாள்களில் 06.06.2016 தொடக்கம் 17.06.2016 வரையான காலப்பகுதியில் காலை 9 மணி தொடக்கம் 15 மணிவரை (12.30 தொடக்கம் 13.00 மணி தவிர்ந்த) நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைக்கேள்விகள் 20.06.2016 ஆம் திகதி காலை 10 மணிக்கு முன்பதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ மேலதிக பிரதிப் பணிப்பாளர் (நிதி) அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. கிடைக்கப்பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக்கேள்வியில் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப்பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக்கேள்வியாளருக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து [illegible] பெறுகைகள் குழுவின் தலைவருக்கு அதிகாரமுள்ளது.

**வைத்தியகலாநிதி க.நந்தகுமாரன், தலைவர்,**
**பிராந்திய பெறுகைகள் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.**
(C/21399)
(11,18)


## அமைச்சர் கிரியெல்லவுக்கு 56 ஆலோசகர்கள் நியமனம்

கொழும்பு, ஜூன் 4
உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தமக்கென 94 இணைப்புச் செயலாளர்களையும், 56 ஆலோசகர்களையும் நியமித்துள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.
எனினும் 56 ஆலோசகர்களும் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதோடு, இவர்கள் அனைவரும் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் என்றும் அநுரகுமார திசாநாயக்க சுட்டிக் காட்டியுள்ளார்.
அத்துடன் சட்டத்தரணியான லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறானவர்களை ஆலோசகர்களாக நியமித்துள்ளமை கேலிக்குரிய விடயமாகவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
அமைச்சர் ஒருவரின் சாதாரண அலுவலகப் பணியாளர்களுக்கு அப்பால் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அநுரகுமார. திசாநாயக்க தெரிவித்துள்ளார். (த-ஐ-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு உடனடி நட்ட ஈடு வழங்கவேண்டும்

## ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 4

உறவுகளை இழந்துள்ள குடும்பங்களுக்கு ஒரே தடவையில் 5 லட்சம் ரூபாவுக்கும் அதிகமான நட்டஈட்டை அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

-இவ்வாறு காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமற்போனவர்களின் உறவினர்களைச் சந்தித்துப் பேசியதிலிருந்து ஒருவிடயத்தைப்புரிந்து கொண்டேன். பாதிக்கப்பட்ட மக்கள் தரப்பில் அரசு முன்னெடுக்க வேண்டிய உடனடித் தேவைகள் சில காணப்படுகின்றன.

பாதிக்கப்பட்ட மற்றும் உறவுகளை இழந்துள்ள மக்களை உடனடியாக இனம்கண்டு, அவர்களுக்கு அரசு 5 லட்சத்துக்கும் அதிகமான நட்ட ஈட்டை ஒரே தடவையில் வழங்கவேண்டும். இது உடனடியாக அரசால் மேற்கொள்ளப்படவேண்டிய செயற்பாடாகும்.

அந்தப் பணத்தை அவர்கள் உரிய முறையில் தமது வாழ்வாதாரத்துக்காகப் பயன்படுத்துகின்றனரா? என்பதையும் கண்காணிக்க வேண்டும்.

காணாமற்போனவர்கள் ஒரு வேளை கிடைப்பார்கள். அல்லது கிடைக்காமலும் போகலாம். ஆனால் அவர்களின் உறவுகள் காணாமற் போனவர்களையே நினைத்துக் கொண்டு கவலையில் வாழ்கின்றனர். எனவே அவர்களுக்கு உளவள ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமது பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வாழ்வாதார உதவிகளைச் செய்வதற்கு அரசு உடனடியாக ஒரு பொறிமுறையைத் தயார் செய்ய வேண்டும் - என்றார்.

(த-ஐ-5)

# சட்டமா அதிபர் பணிப்புரைக்காக வழக்குகளின் கோப்புகள் தேக்கம்

## முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

கொழும்பு,ஜூன் 4

சட்டமா அதிபரின் பணிப்புரைக்காக அனுப்பப்பட்ட குற்றவியல் மற்றும் சிவில் வழக்குகள் சம்பந்தப்பட்ட 8 ஆயிரம் வரையிலான கோப்புகள் தேக்கமடைந்துள்ளன என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதம செயலாளரான முன்னாள் அமைச்சர் டியூ.குணசேகர தெரிவித்துள்ளார்.

இது அடிப்படை மனித உரிமைகளை முழுமையாகவே மீறும் செயலொன்றைப் போன்றே, நீதியை நிலை நாட்டும் செயற்பாட்டின்போது சட்டத்தின் பொறுப்புக் கூறலைக் கைவிடுவதுமாகும் என்றும் குணசேகர தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் சுயாதீனத் தன்மையினுள் மறைந்து கொண்டு, மக்களின் பிரச்சினைகள் மறைத்து விடப்படுவது இதன் மூலம் நிகழ்ந்திருப்பதோடு, இது அரசுக்கு ஏற்பட்டுள்ள மாறாத நோயொன்றேயாகும் என்றும் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்தத் தாமதங்களுக்குக் காரணமாகியிருப்பது சட்டமா அதிபர் திணைக்களத்தில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையே எனக் கூறுவதை ஏற்க இயலாது எனவும், சிறை செல்ல வேண்டி நேரலாம் என்ற பீதியால் இந்த விடயங்களை ஊடகங்கள் கூட வெளிப்படுத்துவதற்குப் பயப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(த-ற-ஐ-22)

# கடற்படை விருந்தில் கிழக்கு முதலமைச்சர்

## முடிவுக்கு வருகின்றது முரண்பாடு

கொழும்பு, ஜூன் 4

திருகோணமலைக் கடற்படைத் தளத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற மதியபோசன விருந்தில், கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட் கலந்துகொண்டார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சிங்கப்பூர் வர்த்தக அமைச்சர் ஈஸ்வரன், சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவுடன் திருகோணமலை சென்றிருந்தார்.



அங்கு பல்வேறு நிகழ்வுகளிலும் பங்குகொண்ட அவர்களுக்கு திருகோணமலைக் கடற்படைத் தலைமையகத்தில் மதியபோசன விருந்து அளிக்கப்பட்டது.

இந்த விருந்துபசாரத்துக்குக் கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அகமட்டும் அழைக்கப்பட்டிருந்தார்.

சம்பூர் மகா வித்தியாலயத்தில், கடந்த மாதம் 20 ஆம் திகதி நடந்த நிகழ்வில் கடற்படை அதிகாரியை இழிவுபடுத்தியதற்காக, கிழக்கு மாகாண முதலமைச்சரை தமது முகாம்களுக்குள் அனுமதிப்பதில்லை என்றும், அவர் பங்கேற்கும் நிகழ்வுகளைப் புறக்கணிப்பது என்றும் முப்படைகளும் கடந்த 26 ஆம் திகதி முடிவெடுத்திருந்தன.

எனினும், கடந்த மாதம் 30 ஆம் திகதி இந்த முடிவுகளை முப்படைகளும் மாற்றியிருப்பதாக அறிவித்திருந்த நிலையிலேயே, கடற்படையினர், கிழக்கு முதலமைச்சரை விருந்துக்கு அழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


(த-ஐ-5)

# மரண அறிவித்தல்

## வேலன் (இலட்சுமணன்) ஐயாத்துரை

**பிறப்பு**
**18.07.1937**

**இறப்பு**
**02.06.2016**



காரைநகர், அல்லின் வீதியைப் பிறப்பிடமாகவும், வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் (இலட்சுமணன்) ஐயாத்துரை 02.06.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன் (இலட்சுமணன்) - நாகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - தங்கச்சியம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும்,சிவபாக்கியத்தின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் சிவக்கொழுந்து, காலஞ்சென்ற முருகேசு மற்றும் உருக்குமணி, சதாசிவம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான கந்தையா,இலட்சுமணன்,மீனாம்பிகை மற்றும் பரஞ்சோதி, இராஜேஸ்வரி, சறோஜினி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,புஸ்பமாலா, மேகலா தேவி, ரவீந்திரன், காலஞ்சென்றவர்களான பத்மலோஜினி,மனோகரன் மற்றும் சிவாகரன், சறோஜினிதேவி, பத்மாவதி,கெங்காதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும்,சிவராசா, சத்தியராஜ், ரேணுகா, பாலகிருஸ்ணன், றிபா, உருத்திரன், சண்முகப்பிரியா ஆகியோரின் அன்பு மாமனாரும், சுமலதா, மயூரன், பபிதா, மயூரி, நிவேதன், நிலோஜினி, சானுகா, பானுகா, ஜெருஷா, ஜொஜல், ஜெய்டன், சரிஸ்னா, சபரிஸ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வட்டு தெற்கு,**
**வட்டுக்கோட்டை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தொ.பே - 021 225 1157**

(c/21053)
(11,18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை அரசு மேடையேற்றும் மற்றொரு புதிய நாடகம்...!

**சோ**ழியன் குடுமி, சும்மா ஆடாது; ஏதோ உள்ளார்ந்த நோக்கத்துடன் மட்டும்தான் அது அசைக்கப்படும்.

ஐக்கிய நாடுகள் சபையின் முப்பத்தி இரண்டாவது கூட்டத் தொடர் எதிர்வரும் பதின் மூன்றாம் திகதி ஆரம்பமாக உள்ளது. ஜூலை மாதம் முதலாம் நாள் வரை அது நீண்டு செல்லும். அந்தக் கூட்ட அமர்வில் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைன், இலங்கை தொடர்பான வாய்மொழி அறிக்கையை இந்த மாதம் இருபத்தொன்பதாம் திகதியன்று வழங்க ஏற்பாடாகி உள்ளது.

அதற்கு முன்பதாக, இலங்கை அரசு, மனித உரிமைகள் விடயத்தில் பல முன்னேற்றங்களைக் காண்பிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளது; நிர்ப்பந்தத்தில் உள்ளது.

அதனை நிறைவேற்றும் வகையில், அதன் முதற்கட்டமாக-தொடக்கமாக-கலகலத்துக் காட்டுவதற்கு--

சில கண் துடைப்புக் காரியங்களை, தமாசாக்களை, கட்டவிழ்த்துவிட, அது மிகு முனைப்புடன் செயற்படத் தொடங்கி உள்ளது.

அந்தச் சூட்சுமத்தின் ஆரம்ப அலகுதான், காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரியை பழைய இடத்திலேயே, இருபத்தாறு ஆண்டுகளுக்குப் பின்னர் திறந்து வைத்த கபடம் மிகுந்த நிகழ்வு. அது என்ன பொருத்தம் உடைத்து என்று காரண காரியங்கள் வெளிப்படுத்தப்பட இல்லை!

விடுவிக்கப்பட்டதாக அரசு புளுகித் தள்ளும் அளவுக்கு, முந்தைய ஆண்டுகள்போல் அல்லாமல், இராணுவ முகாம்களின் முற்றுகைக்கு உட்பட்டதாகவே, நடேஸ்வரக் கல்லூரி, இயங்கப் போகிறது.

மறுபுறத்தில், நடேஸ்வராவின் கனிஷ்ட வித்தியாலயம், முழுமையாக விடுவிக்கப்படவில்லை! அதன் ஒரு பக்கத்தை ஊடறுத்து முட்கம்பி வேலி, உயரமாக அமைக்கப்பட்டுள்ளது!!

நடேஸ்வரக் கல்லூரியைச் சுற்றி இருந்த வீடுகள், பொதுமக்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் என்பவை தொடர்ந்தும் இராணுவத் தரப்பின் பாவனையில் உள்ளன.

அந்தப் பகுதிக்குச் சொந்தமான மக்கள் மீளக்குடி அமர்வதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை!!

அதனால், மாணவர்கள் மல்லாகம், தெல்லிப்பழை, மாவிட்டபுரம் பகுதிகளில் தங்கி இருந்தே, அரசால் திறந்து விடப்பட்ட, நடேஸ்வரக் கல்லூரிக்குச் செல்ல வேண்டி உள்ளது. அது எவ்வகை வேதனை தருமொன்று என்பதை எவராலும் உய்த்து உணர முடியும்!

கல்லூரியின் திறப்பு விழா வைபவத்தின் போது, தமது சொந்த வீடுகளைப் பார்க்கலாம் என்ற ஆவலோடு சென்ற மக்கள், தூர நின்று எட்டிப்பார்த்துக் கண்ணீர் வடித்தனர் என்பது, பச்சாதாபப்படத்தக்க தகவல்.

இந்தத் திருகுதாளங்கள், ஜெனிவாவின் கண்களுக்கு நிச்சயம் மறைக்கப்பட்டு விடும். அதனூடு, "பழைய குருடி கதவைத் திறவடி" என்ற பாணியில், ஓர்மத்துடனான நல்லாட்சி லேபல் அரசு காலத்தைக் கடத்தி விடும்; அவ்வளவுதான்...!

# சிதைக்கப்பட முடியாதது மயிலிட்டி மக்களின் கனவு

சேரலாதன்



**வ**லிகாமம் வடக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள மயிலிட்டிக் கிராமத்தைப் பொது மக்களது பயன்பாட்டுக்கு விடுவிக்க முடியாதென இராணுவத் தளபதி தெரிவித்ததாக வெளிவந்த செய்திகள் அந்தக்கிராமத்திலிருந்து கால் நூற்றாண்டாக இடம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களைப் பெரும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

போர் காரணமாக இடம்பெயர்ந்து அவல வாழ்க்கை வாழ்கின்ற மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பாக இடம்பெற்ற கூட்டத்திலேயே இராணுவத் தளபதியின் இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் நல்லாட்சி நிலவுவதாகக் கூறப்படுகின்றது. அமைதியான சூழலும் காணப்படுகின்றது. இதனால் ஆயுத மோதல்களுக்கும் இங்கு இடமில்லை. இந்த நிலையிலும் பலாலி விமான நிலையத்தின் பாதுகாப்புக் காரணங்களைக் கூறி மயிலிட்டியைத் தொடர்ந்தும் படையினர் ஆக்கிரமித்து நிற்பதை எந்த வகையிலும் நியாயப்படுத்த முடியாது. மாறாக இடம்பெயர்ந்த மக்களுக்கு ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற முடியாத ஒரு செயல் நிலையாகவே இதை நோக்க முடிகின்றது.

முன்னாள் ஜனாதிபதிக்கும் தற்போதைய ஜனாதிபதிக்குமிடையே பரந்தளவிலான வேறுபாடுகள் காணப்படுகின்றன. மக்களின் உணர்வுகளை மதிக்காது ஒரு சர்வாதிகாரியைப் போன்று, முன்னாள் ஜனாதிபதி நடந்து கொண்டார். ஜனநாயக விழுமியங்களை அவர் சிறிதும் மதிக்கவில்லை. நீதித்துறையைக்கூட சுதந்திரமாக இயங்குவதற்கு அவர் அனுமதிக்கவில்லை. முப்படையினரும், காவல்துறையினரும் அவரது காலடியில் கட்டுண்டு கிடந்தனர். நீதி நியாயங்கள் மக்களைச் சென்றடையவில்லை. இங்கு இடம்பெற்ற ஆயுத மோதல்களைத் தமக்குச் சாதகமாக்கிக் கொண்ட முன்னாள் ஜனாதிபதி தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டார். இவரது ஆட்சியில் சிறுபான்மையினரான தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்கள் மிகக் கடுமையானவை. இதில் இடம் பெயர்ந்த மக்களின் நிலைதான் மிகவும் பரிதாபகரமானது. கால் நூற்றாண்டு காலம் தமது சொந்த இடங்களை விட்டுப் பிரிந்து, அகதி முகாம்களிலும் தமக்குத் தொடர்பில்லாத இடங்களிலும் அவலவாழ்வு வாழ்வதென்பது மிகக் கொடுமையானது. ஆனால், இந்தக் கொடுமையைத்தான் இவர்கள் இன்னமும் அனுபவித்து வருகின்றனர். இவர்களின் வாழ்விடங்களை ஆக்கிரமித்து நிற்கும் படையினர் நிரந்தரமான கட்டமைப்பு வசதிகளை அங்கே ஏற்படுத்தியுள்ளனர். இவற்றை விட்டுப் பிரிவதற்கு இவர்களுக்கு இலகுவில் மனம்வருமா? வரவேமாட்டாது.

யாழ்.குடாநாட்டின் வலி.வடக்குப் பிரதேசம் வளம் மிக்கதொரு பகுதியாகும். நிலவளமும், நீர் வளமும், கடல் வளமும் மிக்கது. பொன் விளையும் பூமி எனவும் இதை அழைப்பார்கள். மிகவும் பிரசித்திபெற்ற ஆலயங்கள் பல இந்த மண்ணுக்குப் பல்வேறு வகையிலும் பெருமை தந்து கொண்டிருக்கின்றன. ஆனால் போர் தந்த வடுக்கள் அங்கு இன்னமும் முற்றாக மறையவில்லை. காங்கேசன்துறையில் இயங்கி வந்த சிமெந்து ஆலை முடமாக்கப்பட்ட நிலையில் முடங்கிக் கிடக்கின்றது. எந்த நேரமும் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த துறைமுகமும் ஓய்ந்துபோய்க் கிடக்கின்றது. மயிலிட்டிக்கடல்மீன்வளத்துக்குப் பெயர் போனது. அந்தக் காலத்தில் பாலூட்டும் தாய்மார்களுக்கு விசேடமாக வழங்கும் பொருட்டு மயிலிட்டிக்குச் சென்று சுறா வாங்கிய அனுபவம் நெஞ்சில் நிழலாடுகின்றது. இப்போது அவையெல்லாம் கனவுகளாகக் கரைந்து போய்விட்டன.

பொதுமக்களின் காணிகள் எவற்றையும் படையினர் ஆக்கிரமித்து வைத்திருக்க முடியாதென ஜனாதிபதி தெரிவிக்கின்றார். ஆனால், நாட்டின் இராணுவத் தளபதியோ மயிலிட்டிப் பகுதியில் உள்ள மக்களின் காணிகளை விடுவிக்க முடியாதென ஆணித்தரமாகக் கூறுகின்றார். முப்படைகளின் தளபதியாகிய ஜனாதிபதி நினைத்தால் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்களின் காணிகளை விடுவிக்க முடியும்.

இதேவேளை – மயிலிட்டி விடுவிக்கப்படாவிட்டால் போராட்டம் நடத்தப்படுமென தமிழரசுக் கட்சித் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா எச்சரிக்கை விடுத்துள்ளமை இங்கு நோக்கத்தக்கது. தமிழ் மக்கள் கொடிய ஆயுதப் போர் ஒன்றுக்கு முகம் கொடுத்துக் களைத்துப்போன நிலையில் காணப்படுகினறனர். போராட்டம் என்ற வார்த்தையை உச்சரிப்பதற்குக்கூட அஞ்சுகின்ற நிலைதான் அவர்களிடம் காணப்படுகின்றது. ஆனால், பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டுஎன்பதைஎவருமேமறந்துவிட முடியாது. போரை மறந்து வெறுத்து ஒதுக்குகின்ற மக்களை மீண்டும் போராடுவதற்குத் தூண்டுவதை இந்த அரசு விரும்புகிறதா? என்பதை முதலில் தெளிவுபடுத்த வேண்டும். போராட்டங்கள் மீண்டும் வெடித்தால் அதற்கான முழுப் பொறுப்பையும் அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். தமது சொந்த மண்ணுக்கு திரும்புவதற்குத் துடித்துக்கொண் டிருக்கும் மயிலிட்டி மக்களின் கனவு சிதைந்து விடக் கூடாது. அது நனவாக வேண்டும். ஜனாதிபதி தாம் முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றியே தீர வேண்டும். அவரை ஜனாதிபதிப் பதவியில் அமர்த்துவதில் தமிழர்கள் ஆற்றிய அளப்பரிய பங்களிப்பை அவர் உதாசீனம் செய்ய மாட்டாரென நம்புவோம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இவர்களுக்கு உதவுவதற்கு சமுதாயம் என்ன செய்யப் போகின்றது?

ந.லோகதயாளன்

கிளிநொச்சி மாவட்டத்தின் தற்கொலை வீதம் மீண்டும் சடுதியாக அதிகரித்து வருவது தொடர்பில் உளநல மருத்துவப் பிரிவினரும், தொண்டு நிறுவனங்களும் அதிக கவனம் செலுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

இதன் அடிப்படையில்கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் போருக்கு பின்பு 2010 முதல் 2013 வரையும் தற்கொலைக்கான முயற்சிகளுக்கான வைத்தியசாலை அனுமதிகள் அதிகரித்திருந்தன. இருப்பினும் 2014 , 2015 ஆகிய ஆண்டுகளில் சற்றுக் குறைவடைந்திருந்தன.

இவ்வாறு குறைவடைந்திருந்த தற்கொலை முயற்சியின் எண்ணிக்கை இந்த ஆண்டில் மீண்டும் அச்ச நிலைக்குச் செல்வதுடன், இதனைக் கட்டுப்படுத்த ஒரு விசேட வேலைத்திட்டத்தை உரிய திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் , உள நல வைத்தியர்கள் உடன் கவனத்தில் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கை எழுகின்றது.

இவ்வாறு தற்கொலைக்கு முயன்று, வைத்தியசாலையின் முயற்சியினால் உயிர் காக்கப்பட்ட விசுவமடுவைச் சேர்ந்த 63 வயது மூதாட்டியை அணுகி அவரின் தற்கொலைக்கான காரணத்தை அறிய அவரின் இல்லத்தைத் தேடிச் சென்றேன்.

அவரின் பெயரையும் வைத்தியசாலையில் அறிந்த முகவரியின் உதவியுடனும் கிராமசேவகர் ஊடாக ஒருவாறு மூதாட்டியின் இல்லத்தை முற்பகல் 11.40 மணி அளவில் அடைந்தேன். அருகில் இருந்த மற்றுமோர் மூதாட்டியே இவரை இனம் காட்டினார்.

அங்கு சென்ற சமயம் நான் கண்ட காட்சிஎந்தக்கல்நெஞ்சத்தையும் உருக்கும் வகையில் அமைந்திருந்தது. அதாவது அதனை வீடு என்பதா? அல்லது மாட்டுத் தொழுவம் என்பதா? என்பதே சற்றுச் சந்தேகமான விடயமாக இருந்தது. அதனுள் மூதாட்டியைத் தேடினேன். அருகில் நின்ற ஓர் ஆட் டுக் குட்டிக்கு தீனி வைத்தவாறு நின்றார். குரல் கொடுத்து அழைத்தேன்.

எனது அருகில் வந்த மூதாட்டி நான் சென்றதன் காரணத்தை கேட்டபோது , அருகில் இருந்த ஓர் மரக்குற்றியைக் காண்பித்து அதில் அமருமாறு கூறினார். அதில் இருந்தவாறு அவருடன் கதைத்தேன். தனது குடும்ப நிலைமையை முதலில் கூறத் தொடங்கினார். திருமணம் ஆகி நான்குபிள்ளைகளுடன் வாழ்ந்த வேளையிலேயே 1997இல் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் அவரது கணவர் உயிரிழந்தார். அந்தவேளை மூத்தபிள்ளைக்கு 13 வயது, கடைசிப் பிள்ளைக்கு 4 வயது, எனக்கு41வயது. இந்தச் சூழலில் எனது நான்கு பிள்ளைகளையும் வளர்க்க பலரிடமும் கையேந்தி இறுதியில் ஓர் பிள்ளையைப் பாரதி இல்லத்திலும், மற்றொரு பிள்ளையை குருகுலத்திலும் விட்டுக் கற்பித்ததோடு, வழங்கல் பகுதியின் சமையல்கூடத்தில் 2000ஆம் ஆண்டு முதல்2007ஆம்ஆண்டுவரைக்கும் நான் சமையல் வேலைக்குச் சென்றேன். இதனால் எனக்கு ஆரம்பத்தில் 7 ஆயிரத்து 500 ரூபா கிடைத்தது. பின்னர் கடைசியில் 10 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைத்தது.

இதன்மூலம் எனது குடும் பத்தைக் கொண்டு சென்றேன். இந்தக் காலத்தில், எனது மூத்த மகன் இயக்கத்தில் இணைந்து விட்டான். இதன் பிறகு இறுதிப் போர் காரணமாக இடம் பெயர்ந்து ஓடிஓடிக் களைத்து, இறுதியில் மாத்தளன் பகுதியில் கப்பல்றோட்டில் தறப்பால் கொட்டிலில் இருந்தோம். சித்திரை மாதம் 13 ஆம் திகதி என நினைக்கின்றேன் . எங்கிருந்தோ வந்து வீழ்ந்த ஷெல் ஒன்று என்னைக் காயப்படுத்தியதோடு எனது கடைசிப் பிள்ளைகள் இரண்டுபேரின் உயிர்களையும் எடுத்துக் கொண்டது.

இதனால் நான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டேன். எனது இரண்டாவது பிள்ளையான மகளே என்கூட நின்றாள்.

மூத்தமகன் போராளியாக இருந்து சித்திரை மாதம் 19 ஆம் திகதி என்னை வந்து பார்த்து அம்மா நீங்கள் தங்கச்சியை அழைத்துக் கொண்டு பாதுகாப்பாகச் செல்லுங்கள்; நான் எப்படியும் வருவேன் அம்மா என்றான். அடுத்த நாள் காலையில் 6 மணியளவில் இராணுவம் வைத்தியசாலைப் பிரதேசம்மீது தாக்குதல் நடத்தி, தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. அந்த நேரம் நானும் காயப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் எனது மகளுடன் வந்தேன்.

இவ்வாறு வந்த நான் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மீண்டும் முகாமில் மகளுடன் விடப்பட்டேன். இருப்பினும் எனது மகன் வரவே இல்லை. இராணுவப் பிரதேசத்துக்குள் வரும்போது கண்டதாக பலரும் கூறிய போதும், எனது மகனை இன்று வரை காணவேஇல்லை. இந்த நிலையில் கடந்த 2012ஆம் ஆண்டு எனது மகள் திருமணம் செய்து கொண்டாள். கணவர் சந்தையில் மரக்கறி விற்பனை செய்பவர். தற்போது அவளுக்கு இரு குழந்தைகள் உள்ளனர். அவளின் கணவரோ குடிகாரன். என்னால் அவர்கள் குடும்பத்தில் சண்டைகளும் சச்சரவுகளும் எழவே, நான் மீண்டும் இங்கே வந்துவிட்டேன். எனக்கு விதானையார் தந்த காசும், இந்த இரண்டு ஆடுகளுமே சொந்தம். தனி ஆளுக்கு வீடு இல்லை என்று கூறிவிட்டனர். இதனால். தெரிந்தவர்களிடம் ஏதாவது வேலை செய்தால் சாப்பாடு அல்லது எங்காவது கோயில் , குளத்திலதான் நல்ல சாப்பாட்டைத் தேட வேண்டியுள்ளது – என்றார்.

இதற்கு மேல் அவரது நிலையை அறிய விரும்பாத நான், அந்த மூதாட்டியிடம் சிறு பணத்தைக் கொடுத்தபோது, அந்த மூதாட்டி கூறிய விடயம் என்னை தலை குனிய வைத்தது. இன்று ஆயிரம் ரூபாவை நீ தருவாய். பிறகு நான் எவர் கையைப் பார்ப்பது. இரவில் படுத்தால் நித்திரையில் எனது பிள்ளைகள் வந்து அழுது கூப்பிடுவது போன்றே உள்ளது. இதனாலேயே போவோம் என மருந்தைக் குடித்தேன் .அதில்கூட நான் தோற்று விட்டேன்– என்றார்.

எனவே இவ்வாறு தனிமையின் கொடுமை உள்ளிட்ட காரணங்களால் சாவைத் தேடி ஓடுபவர்களுக்கு இந்தச் சமுதாயம் என்ன செய்யப்போகின்றது என்பதுதான் இன்றுள்ள கேள்வி.

## ஏன் இந்தப் பாகுபாடு?

சாவகச்சேரி பிரதேச சபையின் பிரிவுக்குட்பட்ட கச்சாய் வீதியில் (கொடிகாமம் தொடங்கி கடற்கரை செல்லும் வரை) பல சிறு சிறு உள்வீதிகளும், முன்பள்ளிகள் செல்லும் வீதிகளும், தேவாலயம் செல்லும் வீதிகளும், படுமோசமான நிலையில் குண்டும் குழியுமாகவும் மணல் வீதிகளாகவும் காணப்படுகின்றன. இதனால் சிறுவர்கள் முதல் முதியவர்கள் வரை குழிக்குள் விழுந்தும், மண்ணில் புதையுண்டும் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இந்த வீதிகள் கவனிப்பாரற்றுக் காணப்படுகின்றன. இதைத் திருத்த முன்வராத சாவகச்சேரி பிரதேச சபையினர் தங்களின் அலுவலகத் திறப்பை வைத்து எடுக்கும் வீடு அமைந்துள்ள வீதியை (உள் வீதியை) திருத்த முன்வந்துள்ளனர். கா்ரணம், திறப்பு எடுத்து வரும் பணியாள் மண்ணுக்குள் புதையுண்டு விழுகின்றாராம் என்று ஊரிலுள்ள சனங்கள் கதைக்கின்றனர். ஏன் முன்பள்ளி மாணவர்கள், சிறுவர்கள் செல்லும் (கொடிகாமம் மத்தி முன்பள்ளி கிளைவீதிகள்) வீதியும் இந்த வீதியை விட மிக மோசமான நிலையில் காணப்படும்போது, அந்த வீதியைத் திருத்தமாட்டார்களா? மிக முக்கியமான வீதிகளையும் திருத்தம் செய்து தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில்

## அதிகாரிகள் மறந்து விட்டார்களா?

முறிகண்டி கோயிலடி அமைந்துள்ள ஏ–9 வீதியில், கோயிலுக்கு முன்பாக உள்ள வளைவு பல விபத்துக்களைச் சந்தித்து வருகிறது. இந்த வளைவில் சாரதிகள் பஸ், லொறி மற்றும் வாகனங்களை நிறுத்துவதால் தான் விபத்துக்கள் இடம் பெறுகின் றன.

எனவே, அந்த இடத்தில் கட்டாயம் ஒரு வேகத்தடை இரு பகுதிக்கும் தேவை என்பதை அதிகாரிகள் மறந்துள்ளார்கள் என்பது தான் கவலைக்குரிய விடயம்.

ராயூ,
ஐயங்கன்குளம் துணுக்காய்

## சூரியகாந்தியை தனிப்பகுதியாகத் தருவீர்களா?

ஆரம்பத்தில் உதயன் ஞாயிறு இதழோடு தனியாக (தனிப்பக்கங்களாக) வந்த சூரியகாந்தி இதழ்; உதயனோடு சேர்ந்து 1 தொடக்கம் 56 பக்கமாக வருவதால்தனியாக சூரியகாந்தியை ஒருவரும், உதயனை வேறொருவருமாகப் பார்க்க முடியவில்லை. அத்துடன் பாரமாகவும், கையில் வைத்து எல்லாப் பக்கங்களையும் பார்ப்பதால் தாழ்கள் கசங்கி அடுத்தவர் பார்க்க முடியாமல் போய்விடுகின்றது. அதனால் சூரியகாந்தி இதழை தனிப்பிரிவாகத் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

எல்லோரின் விருப்பமும் அதுவே

புலோலியூரான்

## காசி நோக்கிய பயணம் ஓர் அனுபவப்பகிர்வு

கடந்த சில தினங்களாக உதயன் பத்திரிகையின் 17 ஆம் பக்கத்தில் தொடர்ந்து வெளிவந்த காசி நோக்கிய ஒரு பயணம் அனுபவப்பகிர்வு என்னும் கட்டுரை மிகவும் நன்றாக இருந்தது. ஒரு யாத்திரையின் அனுபவத்தை மிகவும் விளக்கமாகவும், ரசனையாகவும் எழுதப்பட்டதனால் அதனை வாசிக்கும்போது நேரடியாக காசிக்குப் போய் வந்தமை போன்று இருந்தது. அதனை எழுதியிருந்த லிங்கபுத்திரன் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பிரசுரித்த உதயன் பத்திரிகைக்கு நன்றியையும் தெரிவித்துக் கொள்ளகின்றேன்.

அ.செல்வரூபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழ் அரசுக் கட்சி வட்டு

## ஓராண்டு பூர்

### வட்டுக்கோட்டைக்குட்பட்ட பாடசாலைகளில் க.பொ.த.உயர்த



**ம. மாதினி**
கலைப்பிரிவு மா.நீ. 15
யாழ்ப்பாணக் கல்லூரி



**சோ.விதுஷா**
கலைப்பிரிவு மா.நி. 131
யா/ இராமநாதன் கல்லூரி



**கி.டிலாஜினி**
கலைப்பிரிவு மா.நி. 108
யா/வட்டுக் இந்துக் கல்லூரி



**சி.குகதாசன்**
கலை மா.நி. 29
யா/வட்டுக் இந்துக் கல்லூரி



**பார்த்தீபன்**
வணிகத்துறை மா.நி. 29
யா/ விக்ரோரியாக் கல்லூரி



**க.அபர்ணா**
வணிகத்துறை
யா/ வட்டு இந்துக் கல்லூரி



**தமிழினி**
வணிகத்துறை மா.நி. 6
யா/ வட்டு இந்துக் கல்லூரி



**ம.கஜன்**
விஞ்ஞான தொழில் நுட்பத்துறை மா.நி. 80
யா/ வட்டு இந்துக் கல்லூரி



**எஸ். கவிசாந்**
மா.நி. 180
யா/ வட்டு இந்துக் கல்லூரி



**வீ.அன்னலட்சுமி**
கலைப் பிரிவுமா.நி. 204
யா/ அராலி சரஸ்வதி ம. வி



**அ.ஜீவராசா**
வர்த்தகப்பிரிவு மா.நி 45
யா/பரி.ஹென்றியரசர் கல்லூரி



**சி. சிந்துஜா**
விஞ்ஞானப் பிரிவு மா.நி. 82
யா/ வட்டு இந்துக் கல்லூரி



**பீ. டினோஜா**
விஞ்ஞானப் பிரிவு மா.நி. 93
யா/ இளவாலை கன்னியர் மடம்



**ஜெ.சுதாகரன்**
தொழில்நுட்பத்துறை மா.நி. 44
யா/ வட்டு இந்து கல்லூரி



**இ.கிரிசாந்தி**
வணிகத்துறை மா.நி. 116
யாழ்ப்பாக் கல்லூரி



**ச.திவியா**
வணிகத்துறை மா.நி 04
யாழ்ப்பாணக் கல்லூரி



**ம. சங்கவி**
வணிகத்துறை மா.நி. 8
யா/ வட்டு இந்துக் கல்லூரி





**க. அஜித்**
கலைப்பிரிவு மா.நி 238
யாழ்ப்பாணக் கல்லூரி



**ம.மாதவி**
தொழில்நுட்பத்துறை மா.நி. 91
யா/ வட்டு இந்துக் கல்லூரி

**க. யசோதா**
கலைப் பிரிவு மா.நி. 64
யா/ யாழ்ரன் கல்லூரி.

**இ. கிரிசாந்**
வணிகத்துறை மா.நி. 116
யாழ்ப்பாணக் கல்லூரி

**தே. றோஜனா**
வணிகத்துறை மா.நி. 168
யாழ்ப்பாணக் கல்லூரி

**இ. சர்மினி**
வர்த்தகத்துறை மா.நி. 91
யாழ்ப்பாணக் கல்லூரி

**க.**
வணிக
யா/ விக்



**து. யமுனாமலர்**
கலைப் பிரிவு மா.நி. 64
யாழ்ப்பாணக் கல்லூரி

**அ. துஸ்யந்தினி**
கலைப் பிரிவு மா.நி. 122
யா/ காரை இந்துக் கல்லூரி

**காலம் : இன்று (04.06.2016) சன**

**இடம் : இலங்கை தமிழ் அரசுக்கட்சி அ**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டுக்கோட்டை கிளை அலுவலகத்தின்

## ர்த்தி நிகழ்வும்

### ர்தர சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும்


**சு.கிரிசா**
கலைப் பிரிவு மா.நி. 170
யா/வட்டுக் இந்துக் கல்லூரி


**எஸ். றமேஸ்வரன்**
கணிதப் பிரிவு மா.நி. 171
யா/வட்டுக் இந்துக் கல்லூரி


**அ.சசிகலா**
கணிதப் பிரிவுமா.நி. 235
யா/வட்டுக் இந்துக் கல்லூரி


**பா. ரூபிணி**
வணிகத்துறைமா.நி. 92
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**அ.அனுதாஸ்**
தொழில்நுட்பத்துறை மா.நி. 62
யா/வட்டுக் இந்துக் கல்லூரி


**ரீ.மிதுசா**
கலைப் பிரிவுமா.நி. 255
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**எஸ். கௌசி**
விஞ்ஞானப் பிரிவுமா.நி. 215
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**பீ. டிலக்சனா**
கணிதப்பிரிவுமா.நி. 130
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**தி.ஜனனி**
கலைப் பிரிவுமா.நி. 165
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**இ.அனோஜனா**
விஞ்ஞான பிரிவு மா.நி. 214
யா/ வட்டு இந்து கல்லூரி


**யோ. கிருஷ்னவேணி**
வணிகத்துறை மா.நி. 43
யா/ விக்ரோறியாக் கல்லூரி


**சொ.ஆசா டிவினியா**
கலைப்பிரிவு மா.நி. 86
யாழ்ப்பாணக் கல்லூரி


**ந.றொசாயினி**
கலைப்பிரிவு மா.நி. 70
யா/ வட்டு மத்திய கல்லூரி


**ம. தேவகரன்**
தொழில்நுட்பத்துறை மா.நி. 23
யா/ வட்டு இந்துக் கல்லூரி


**ஸ்ரீ.ஸ்ரீசாளினி**
கலைப்பிரிவு மா.நி. 231
யா/ விக்றோரியா கல்லூரி


**ரீ.மிதுசா**
விஞ்ஞானப் பிரிவு மா.நி. 255
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**மா. நாகதீபிகா**
கலைப்பிரிவு மா.நி. 89
யாழ்ப்பாணக் கல்லூரி


**யே.றொசான்**
கணிதப்பிரிவுமா.நி. 88
யா/ வட்டு இந்துக் கல்லூரி


**இ.சிவராம்**
கணிதப் பிரிவு மா.நி. 34
யா/ விக்ரோரியாக் கல்லூரி


**இ.நிரோஜன்**
கலைப் பிரிவு மா.நி. 78
யா/ விக்ரோரியாக் கல்லூரி

**க.பிரதீபன்**
வணிகத்துறை மா.நி. 88
யா/ விக்ரோறியாக் கல்லூரி

**ஜெ. நேசகுமரன்**
வணிகத்துறை மா.நி. 34
யா/சுழிபுரம் விக்றோரியா கல்லூரி

**அ. டிசாந்தன்**
தொழில்நுட்ப பிரிவு மா.நி. 47
யா/ வட்டு இந்துக் கல்லூரி

**சு. பிரியதர்சன்**
கணிதப் பிரிவு மா.நி. 50
யா/ விக்றோரியாக் கல்லூரி

**எஸ். விதுசனா**
வர்த்தகப் பிரிவு மா.நி. 53
யா/ இளவாலை கன்னியர் மடம்

**ச. தினேஸ்**
கணிதப் பிரிவு மா.நி. 81
யா/ பரி.ஹென்றியரசர் கல்லூரி

## னிக்கிழமை    நேரம் : மாலை 5.00 மணி

## அலுவலகம், அத்தியடிப்பிள்ளையார் கோயில் முன்பாக, வட்டுக்கோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிறப்பு முதல் இறப்பு வரை

# பிறந்த எண்ணின் பலன்கள்




(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் நேற்றைய உதயனில் வெளியான பிறந்த எண் 3 க்கான கட்டுரையின் தொடர்ச்சி இது.)

பழமைவாதிகள் எனச் சொல்லத் தக்க இவர்களது பேச்சு உரையாடல்களில் இறைவன், விதி, நியாயம் போன்ற வார்த்தைகள் அதிகம் காணப்படும். குறுக்கு வழியில் வாழ்க்கையை உயர்த்திக் கொள்ளத் தயங்குவார்கள்.

தங்களது விடாமுயற்சியாலும், சலியாத உழைப்பினாலும் எப்படியும் முன் னேறி விடுவார்கள். தங்களுடைய இயல்புக்கும், தகுதிக்கும் அப்பாற்பட்ட பதவியை அடைய விரும்ப மாட்டார்கள். அந்தஸ்து, கௌரவம் பார்ப்பதால், மற்றவர்களுக்குக் கடின மனத்தினர்கள் போல் தோன்றுவார்கள். இவர்களுக்குச் சமூகத்தில் நல்லவர், வல்லவர் என்ற பெயர் கிடைக்கும். அதனால் பண விடயங்களில் இலாபத்தை எதிர்பார்க்கமாட்டார்கள். பொதுவாகப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிப்பில் 3 ஆம் எண்காரர்கள் சிறந்து விளங்குவார்கள்.

3 ஆம் எண்ணின்வலிமை குறைந்தால் தன்னம்பிக்கை குறையும். இதனால் தங்கள் ஆற்றலை வெளிப்படுத்தி, முன் னேற வகை யறியாது பலர் முடங்கிக் கிடப் பார்கள். இந்த எண்களில் பிறந்த பல திறமைசாலிகள் வாழ்க்கையில் முன்னேறாததற்கு இதுதான் காரணம். கடன்கள், எதிரிகளால் பாதிப்பு எண்ணின்பலம் குறைந்தால் நிச்சயம் ஏற்படும். இந்தத் திறமைசாலிகளைச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டு, தங்களின் திறமை என விளம்பரப்படுத்திக் கொண்டு, புகழ்பெறுவது சில தந்திரசாலிகளின் நடைமுறையாகும்.

எனவே, குருவின் (3), ஆதிக்க நிலை உணர்ந்து, எண்ணின் பலத்தை அதிகரித்துக் கொண்டால், பொருளாதாரத்தில் முன்னேற்றம், அரச ஆதரவு, தொழில் முன்னேற்றம் நிச்சயம் ஏற்படும். இவர்களுக்குப் பெரிய சிரமங்களும், துன்பங்களும் வராது. அப்படி வந்தாலும், வெகு நாள்கள் இருக்காது. வந்த சுகதுக்கங்கள் அனைத்தையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வார்கள். 3 ஆம் திகதியில் பிறந்த பலர் புகழ்மிக்க எழுத்தாளர்களாகவும், கலைஞர்களாகவும் விளங்குகிறார்கள்.

காதல் விவகாரங்கள் இவர்களுக்கு வெற்றியைத் தருவது இல்லை. தங்களது கலாசாரத்தை விட்டு வெளியே வரத் தயங்குவார்கள். நல்ல மனைவி இயற்கையாகவே அமைந்து விடுவாள். 3, 9, 1 ஆகிய திகதிகளில் பிறந்தவர்களை மணந்தால், நல்ல குடும்ப வாழ்க்கை அமையும். வீண் செலவுகள் அதிகமாகச் செய்வார்கள்.

எண் 6 இற்குப் பகையாக இருப்பதால், 3 ஆம் எண்காரர்கள் தங்களது பெயரில் (தனியாக) அசையாச் சொத்துக்களை வாங்கக் கூடாது. அனுபவத்தில் பல பிரச்சினைகளைக் கொடுக்கும். தனது மனைவி பெயரிலோ அல்லது இருவரின் கூட்டுப் பெயரிலோ வாங்கலாம். மற்றவர்களை ஏமாற்றி, அதன் மூலம் வருமானம் பெற விரும்பமாட்டார்கள். சட்டத் தொழில் செய்பவர்கள், நீதிபதிகள், வக்கீல்கள், ஆன்மிகத் தலைவர்கள் இந்த எண்காரர்களே. வங்கி, காப்புறுதி போன்ற அரசு உத்தியோகங்களை அடையலாம். ஜோதிடம், ஆன்மிகம், மாந்திரிகம் போன்றவற்றில் ஈடுபாடு மிக உண்டு.

இவர்களை நம்பிக் காரியங்களை ஒப்படைத்தால், தங்களின் உயிரைக் கொடுத்தாவது அவற்றைச் செய்து முடித்துவிடுவார்கள். நாணயஸ்தர்கள்.

**உடல் அமைப்பு**

நடுத்தரமான உயரமுடையவர்கள். முகமானது சற்று நீண்டிருக்கும். புருவங்கள் அடர்ந்தும் நீண்டும் இருக்கும். பெரிய உதடுகள் அமையும். பல் வரிசையாக இருக்கும். தலைமுடி நரைத்தல், வழுக்கை விழுதல் இளமையிலேயே ஏற்படும். கம்பீரமான உடல் அமைப்பு உண்டு.

**அதிர்ஷ்ட நாள்கள்**

ஒவ்வொரு மாதத்திலும் 3, 9, 12, 18, 21, 27, 30 திகதிகள் மிகவும் அதிர்ஷ்டத்தைக் கொடுக்கும். அதேபோன்று கூட்டு எண் 3 அல்லது 9 வரும் எண்களும் பயன்களைத் தரும். ஒவ்வொரு மாதத்திலும் 6, 8, 15, 17, 24, 26 ஆகிய திகதிகளிலும், கூட்டு எண் 6 அல்லது 8 வரும் திகதிகளிலும் புதிய முயற்சிகளைத் தவிர்த்து விட வேண்டும்.

இப்போது 3 எண் குறிக்கும் நாளில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள் பற்றிப் பார்ப்போம்.

**3 ஆம் திகதி பிறந்தவர்கள்**

சிறந்த சிந்தனையாளர்கள். தங்களுடைய ஆற்றலை ஆக்கரீதியாகப் பயன்படுத்தி வெற்றி காண்பார்கள்.


(தொடரும்)

# சத்தியம், ஆன்மா, நித்தியம் உய்வோம்...

சாம் ரமேஸ்குமார்

தாகமுள்ளவன் பாக்கியவான் என்கிறார் இயேசு கிறிஸ்து. இங்கு எதன் மீது தாகமுள்ளவன் பாக்கியவான் என்பதை நாம் முதலில் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மதுவின் மீதும், மாதுவின் மீதும், வன்முறையின் மீதும் ஏன்...? உலக ஆசைகளின் மீதும் தாகமுள்ளவனா பாக்கியவான்? நிச்சயமாக இல்லை. தன் ஆன்மாவின் மீது எல்லையற்ற தாகமுள்ளவனே பெரும் பாக்கியவான் ஆவான். அவனே நிரந்தரமான தாகத்தை உடையவன். உலக ஆசைகள் உள்ளவரெல்லாம் தற்காலிகமான தாகத்தை உடையவர்களே.

ஆன்ம தாகமானது, ஒரு மனிதனிடம் ஞானத்தை மலரச் செய்து அதன் ஊடாக அவன் சுயத்தை அடைய வழி காட்டுகின்றது. ஒரு சிறு மின்னல் கீற்றாய் ஞானம் ஒருவனுக்குள் மின்னிவிட்டால், அந்த ஒளியினாலே முழுப்பரம்பொருளையும் அனுபவிக்கும் உள்ளுணர்வு இயற்கையாகவே வந்து வாய்க்கின்றது. இந்த உணர்வைத்தான் மகான்களும், ஞானிகளும் ஆத்மானந்தம் அல்லது பிரமானத்தமென்று அழைக்கின்றார்கள்.



மனதில் ஞானத்தைப் பற்ற வைக்காமல் இன்று தெருக்களிலும், சந்திகளிலும், வன்முறையைப் பற்ற வைக்கும் நாளைய ஈழத்தின் சக்திமிக்க இன்றைய இளைஞர்களே, உங்களுக்கு எப்போது உங்கள் ஆன்மாவின் மீது அதீத தாகம் ஏற்படப் போகின்றது. காலத்தை வீணாக்காமல் இந்தப் பிறவியிலேயே அந்தத் தாகத்தை [illegible] கள். இன்றே [illegible] டியே ஆன்ம தாகத்துக்காக இறைவனை நோக்கிப் பிரார்த்தியுங்கள். இறைபிரார்த்தனையானது மலையையும் அசைக்க வல்லது என்பதை ஒருபோதும் மறவாதீர்கள்.

நீங்கள் பாக்கியவான்களாக மாறி சாவை வெல்வதும், நீங்கள் பாவிகளாக மாறி சாவை எதிர்கொள்வதும், உங்கள் மன விருப்பில்தான் என்றுமே தங்கியுள்ளது. மனதானது [illegible] பட்டதுதான். ஆனால் [illegible] ஆன்மாவோ இயற்கைக்கு அப்பாற்பட்டது, பவித்திரமானது.

மொத்தப் பிரபஞ்சத்தையும் தனக்குள் அடக்கியாள்வது. அதன் சக்தி மின்சாரத்தைவிட வேகமானது. அந்தச் சக்தியில் அடிபட்டவர் களைத் தான் நாம் சித்தர்கள், யோகிகள், ஞானிகள் என்று குறிப்பிடுகின்றோம்.

எமது ஈழ மகான் தவத்திரு யோகர் சுவாமிகள் தமது நற்சிந்தனைப் பாடலில் 'தத்துவம் யாவும் சடமென அறிவோம். சத்தியம் ஆன்மா நித்தியம் உய்வோம்' என்று ஞான இடியாய் ஈழ இளைஞர்கள் அனைவருக்குமாய் சேர்த்து முழங்குகின்றார். அந்த முழக்க மானது எமது நாடி, நரம்பு, புத்தி, சித்த மெல்லாம் என்று முழங்குகின்றதோ அன்றே எங்களது ஆன்மா எம்மை ஆட் கொண்டு விட்டதாக உணர முடியும். ஆன்மாவின் பரிபூரணத் தன்மையை அறிய வேண்டுமானால் கீதையின் இரண்டாம் அதிகாரமான ஸாங்கிய யோகத்தைப் படியுங்கள். உங்கள் சொந்த ஆன்மாவின் மீதான அதிக ஆர்வம் உங்களுக்கு வெளிப்படும். சரீரத்தின் மீதிருக்கும் பற்று அறவே அற்றுப்போகும். யம பயம் நீங்கும். ஆன்ம பலம் பெருகும். எமது ஈழமெங்கும் கங்கை போன்று ஆத்மானந்தம் இனி சிவமாய் ஓடட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதா! நீ மாறிவிடு

மல்லாவி கஜன்

**அறிமுகம்:**
சூரியக் குடும்பத்திலே மூன்றாவதாக உள்ளதும் விட்டம், நிறை, அடர்த்தியுடன் ஒப்பிடுகையில் மிகப் பெரிய உள்கிரகமாகவும் புவி விளங்குகின்றது. இற்றைக்கு 4:6 பில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் தோற்றம் பெற்றதாகக் கருதப்படும் புவியில், முதன் முதலாக அல்கா வகை உயிரினமே நீர்ப்பரப்பில் தோன்றியதாக தேளிஸ் எனும் விஞ்ஞானி எடுத்துக் கூறுகின்றார். சூரியக் குடும்பத்திலுள்ள கோள்களில் மனித நடவடிக்கைக்கு ஏற்ற சூழல் செவ்வாய்க் கிரகத்தில் இருப்பதான முடிவுகள் எடுக்கப்பட்டாலும், மனிதன் குடியேறி வாழ்க்கையை நடத்தும் வரை, மனிதன் முதலான உயிர்கள் வாழக்கூடிய கிரகமாக புவியே விளங்குகின்றது.
நீளக்கோளென வர்ணிக்கப்படும் புவியில் உயிர்களது நிலைப்புக்கு ஏதுவான சூழல் நிறைவாக உள்ளபோதும், அண்மைக்காலமாக புவி மாசடைதலுக்கு உட்பட்டு பெரும் சவாலை புவிச்சூழல் எதிர்நோக்கி வருவது கண்கூடு.

**சூழற்கூறுகள்:**
நிலம், நீர், வளி என்பனவே புவியின் மிகப் பிரதான கூறுகளாகக் கொள்ளப்படுகின்றன. மொத்த நிலப்பரப்பில் ஏறத்தாழ 71 வீதம் நீர்ப்பரப்பாகவும், ஏனைய 29 வீதம் நிலப்பரப்பாகவும் காணப்படுகின்றது. இந்த வகையில் மேற்கூறிய மூன்று சூழற் கூறுகளிலும் மாசடைதலானது, மிகவும் துரிதமாக நிகழ்ந்து வருவதை அவதானிக்கலாம். சூழலின் தூய்மை இழக்கப்படுதலுக்கு பௌதீகக் காரணிகளை விடவும், மானிட ரீதியான செயற்பாடுகளே பெரும் பங்காற்றுகின்றன. இதன் விளைவாக உயிர்ச் சமநிலைக்குன்று பல்வேறு பாதிப்புகள் உண்டாக நிலைக்களன் ஆகின்றது.

**நீர்மாசு:**
புவியில் வாழும் உயரினங்களினது நிலைப்புக்கு, நீர்க்கோலம் இன்றியமையாதது ஆகும். திண்மம், திரவம், வாயு எனும் மூன்று நிலைகளில் பரம்பிக் காணப்படும் நீரானது, இன்று தூய்மை இழந்து செல்கின்றமை பெரியதொரு பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. சமுத்திரம், கடல், ஆறு, குளம், ஏரி, முதலான மேற்பரப்பு நீரும், தரைக்கீழ் நீர் வளமும் வேகமாக மாசடைவுக்கு உட்பட்டுச் செல்கின்றது. மனித தொழிற்சாலைக் கழிவுகள் நீர் நிலைகளில் கொட்டப்படுதல், கடற்பகுதிகளில் ஏற்படும் எண்ணெய்க் கப்பல் விபத்துக்கள், கடல்நிலை போர் நடவடிக்கை, அதிகரித்த வெப்பம் மற்றும் காலநிலை மாற்றம் முதலானவையால் நீர் மாசடைகிறது. உலகிலே நைல், நைகர்; இந்து, குவாங்கோ நதிகள் பெரிதும் மாசடைந்து வருவதுடன் கொழும்பு நகரத்தின் கழிவுகள் களனி கங்கையில் கலப்பதால் குறித்த நதியும் பெரிதும் மாசடைதலுக்கு உட்பட்டுள்ளது. அணுவாயுத பரிசோதனைகள், கழிவு நீரின் உட்பொசிவு என்பவற்றால் நிலத்தடி நீர் பெரும் மாசடைதலுக்கு உள்ளாகியிருப்பதுடன் இந்தத் தன்மையை யாழ்.குடாநாட்டில் அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் நீர்த்தட்டுப்பாடு என்பது எம்மையெல்லாம் படிப்படியாக ஆட்கொள்ளத் தொடங்கிவிட்டது. மூன்றாம் உலகப் போர் நீர்த்தட்டுப்பாடு காரணமாகவே ஏற்படும் என உலக ஆய்வுகள் தெரிவிக்கின்றமையும் இங்கு நோக்குதற்குரியது.

**நிலமாசு:**
நிலப்பரப்பிலும் சூழல் மாசின் அளவு உயர்வாகவே உள்ளது. புவித்தகடுகளின் அசைவுகளால் உண்டாகவல்ல எரிமலை, சுனாமி, நிலநடுக்கம் முதலான இடர்கள், சூழலின் வடிவத்தில் பல்வகை மாற்றங்களை இயற்கையாக உண்டுபண்ணுவதுடன் மாசடைதலையும் தூண்டிவிடுகின்றன. பயிர்ச் செய்கை நடவடிக்கையில் அதிகரித்துவரும் இரசாயன வளமாக்கி, கிருமி நாசினிகளது பயன்பாடு, கனரக இயந்திர சாதனங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் அகழ்வுச் செயற்பாடுகள், கழிவுகளைச் சரியான முறையில் அகற்றாமை என பல்வேறு வகைகளிலும் நிலச்சூழல் மாசுற்றுச் செல்கிறது. இதற்கும் மேலாக காடழிப்பு மிக முக்கிய சூழல் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. உலகில் மொத்த நிலப்பரப்பில் 31 வீதமாகக் காணப்பட்ட காட்டுவளம் வெகுவேகமாக வீழ்ச்சியுற்று வருகிறது. இதனால் மழை வீழ்ச்சி குறைவுற்று பல்வேறு காலநிலை மாற்றங்கள் உண்டாகவும் ஏதுவாகிவிடு கிறது.



**வளிமாசு:**
மனிதன் பிரதானமாக மூன்று வழிமுறைகளில் வளி மண்டலத்தை மாசடையச் செய்கின்றான் எனக் குறிப்பிடப்படுகிறது. வளிமண்டலத்தில் சாதாரணமாக காண முடியாத திண்மப் பொருள்களையும், வாயுப்பொருள்களையும் சேர்த்தல், வளி மண்டலத்திலுள்ள இயற்கையான வாயுக்களின் வீதத்தை மாற்றுதல், புவி மேற்பரப்பை மாற்றியமைப்பதன் மூலம் வளிமண்டலத்தை பாதிப்படையச் செய்தல் என்பவையே அவையாகும். வளி மண் டலத்தில் நாம் சுவாசிக்கும் பிராண வாயுவான ஒட்சிசன் 20.94 வீதமாகக் காணப்படுகின்றது. இதிலும் தூய ஒசிசனை சுவாசிக்க இயலாத நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டு வருகின்றோம். வளிமண்டல கட்டமைப்பில் படைமண்டல பகுதியில் 25வது கி.மீ பகுதியில் அமைந்து காணப்படவல்ல ஓசோன் (O3) படையினை நாம் செய்யும் பாதக நடவடிக்கைகளின் மூலம் மேலும் மேலும் சிதைத்து வருவதுடன், இதன் தாக்கத்தை அனுபவிக்கவும் தவறவில்லை. குறிப்பாக போக்குவரத்து நடவடிக்கை காரணமாக வளிச்சூழல் வேகமாக தூய்மையிழக்க நேரிடுகின்றது. இலங்கையின் கொழும்பு நகர்ப்பகுதிக்கு நாளாந்தம் 250000 வாகனங்கள் வருகை தருவதுடன் லொஸ்ஏஞ்சலில் 3 பில்லியன் வாகனங்கள் பாவனையில் உள்ளதாகவும் அறியப்பட்டுள்ளது. எரிபொருள் கழிவுகளாக வெளியேறும் வாயுக்கள் வளிச்சூழலை மாசடையச் செய்கின்றன. மேலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயு நிலைக் கழிவுகளும் வளிமண்டலத்தின் தூய்மையை பாதிக்கச் செய்கின்றது. ஜப்பான், இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் கைத்தொழில் நிலையங்களிலிருந்து வெளியேறும் வாயுக்கள் பெரிதும் சூழலை பாதிப்பதாய் அமைகின்றன. குறிப்பாக கந்தகம், கந்தகவீரொட்சைட், குளோரோபுளோரோ காபன், ஹெசுஷ புளோரைட் காபன் முதலானவே பெரும் அச்சுறுத்தலாக காணப்படுகின்றன. விண்வெளி ஆராய்ச்சித்துறையின் விருத்தி காரணமாகவும் வளி வேகமாக மாசாகிறது. ரஷ்யா, ஐக்கிய இராச்சியம் அமெரிக்க உள்ளிட்ட நாடுகளில் இத்தகைய பிரச்சினை எதிர்நோக்கப்படுகிறது.

**பாதுகாப்பு வழிமுறைகள்:**
சூழலின் பிரதான கூறுகளின் மாசாக்கத்தை கட்டுப்படுத்தாது, தொடர்ச்சியாக கவனிப்பின்றியும் பாதுகாப்பு ஏதுக்களை கையாளாமலும் தவிர்ப்போமாயின் அதன் விளைவுகளை அனுபவிக்க வேண்டிய நிலைக்கும் நாமே உள்ளாக வேண்டியேற்படும். சுற்றுச் சூழல் மாசடைதலானது 18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியை அடுத்து வேகமாகப் பரவத் தொடங்கியது. இதனைக் கருத்திற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் ஜூன் 5 ஆம் நாளை சர்வதேச சூழல் தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்து, கடந்த 1974 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருவதுடன், ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தொனிப் பொருள்களை முதன்மைப்படுத்திவருவதையும் காணமுடிகிறது. சூழல் தினக் கொண்டாட்டங்களுக்கு பொறுப்பாக ஐக்கிய நாடுகள் சூழல்திட்டம் (UNEP) செயற்பட்டும் வருகிறது. இயற்கை வளங்களான நீர் நிலைகள், காடுகள், வன ஜீவராசிகள், வளிமண்டலம், பறவைகள், சோலைகள், கடல் வாழ் உயிரினங்கள் போன்றவற்றின் நலவாழ்வு சூழலின் சமநிலையிலேயே தங்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்க தாகும். சுற்றுச்சூழலை பேணிப்பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து செயற்படத் தவறிய தன் விளைவை மனித குலம் இப்போது தாராளமாக அனுபவிக்கத் தொடங்கி விட்டது. கடந்த மாதத்தில் இலங்கையின் பல பகுதி களையும் தாக்கிய கடும் மழை அதன் முன்னரான மிக உயர்ந்த வறட்சி, இலங்கையின் மலையகப் பகுதிகள், கேகாலையின் அரநாயக்க உள்ளிட்ட பகுதிகளில் உண்டான மண்சரிவின் விளைவால் இழப்புக்கள் யாவும் சூழலை மனிதன் முறையாகப் பேணத் தவறிய தன் விளைவுகளே.
தென்னாசியா ஒத்துழைப்புச் சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் (SACEP) ஐக்கிய நாடுகள் சூழல் மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு (UNCED) ஐக்கிய நாட்டுச் சூழல் நிகழ்ச்சித் திட்டம் காலநிலை மாற்றம் தொடர்பான அரசுகளுக்கு இடையேயான குழு (IPCC), தேசிய நீர்வள ஆராய்ச்சி நிறுவனம்,மத்திய சுற்றாடல் அதிகார சபை, சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனம் என ஏகப்பட்ட சர்வதேச பிராந்திய அமைப்புகள் செயற்பட்டு பல்வேறு நடவடிக்கைகளை முதன்மைப் படுத்தும் போதிலும், சூழலை மீறிச் செயற்படும் மனிதனது அக்கிரமச் செயலை கட்டுப்படுத்த இயலவில்லை. காலத்துக்குக்காலம் பல்வேறு சூழல் மாநாடுகள் கூட்டப்படும். ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் அதன் பலாபயன்களை மனிதன் அனுபவிக்கத்தவறுகின்றான். ஓசோன்படைப் பாதுகாப்புத் தொடர்பாக மொன்றியல் ஒப்பந்தம், பச்சை வீட்டு வாயுக்களை கட்டுப்படுத்தல் தொடர்பான கியோட்டோ ஒப்பந்தம் என யாவும் பயனற்ற செயற்பாடுகளாய்ப் போய்விட்டன. பல்வேறு தேவைகளுக்காகவும் இயற்கைக் காடுகளை அழிக்கும் மனிதன் ஆண்டுக்கு ஒரு மரத்தையேனும் புதிதாக நட்டுவைக்க தவறி விடுகிறான்.
1972 இல் முதலாவது புவிச்சூழல் மாநாடு ஸ்ரொக்கம் நகரில் கூட்டப்பட்டது. அது முதல் இன்றுவரை கூட்டிய மாநாடுகளின் தீர்மானங்களை புறந்தள்ளி மானிட ஆதிக்கவாதமே நிலை பெற்று வருகிறது. இந்த நிலை தொடருமாயின், அழிவின் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் மனித குலத்தின் முடிவு வெகு தொலைவில் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூனை நிமிர்த்திய ஓவியம்



அந்த நாட்டின் அரசர் மிகச் சிறந்த வீரர். எதிரிகளுக்கு சிங்கம் போன்றவர். அதனால், அண்டை நாட்டு மன்னர்கள் அவரிடம் எப்போதும் வால் ஆட்டுவது இல்லை. நாட்டு மக்களுக்கு எல்லா நல்ல விடயங்களையும் செய்து, மிகச் சிறந்த அரசர் என்ற பெயரையும் பெற்றவர். அவருக்கு ஒரே மகன். அவன் அழகான முகம் உடையவன். ஆனால், அவனது முதுகோ கூன் விழுந்ததாக இருந்தது. எப்போதும் குனிந்தே நடந்து திரிந்தான். அவனை நினைத்து அரசருக்கு மிகுந்த கவலை. வருங்காலத்தில் நாட் டை ஆளப் போகும் தனது ஒரே மகன் இப்படி இருக்கிறானே என்று வருந்தினார்.

புகழ்பெற்ற பல மருத்துவர்களை வரவழைத்து, இளவரசனுக்குச் சிகிச்சை செய்தார். ஆனால், எந்தப் பயனும் இல்லை.

இறுதியாக, வயதான ஒரு மருத்துவர் பற்றிக் கேள்விப்பட்ட அரசர், அவரை வரவழைத்து ஆலோசனை கேட்டார்.

"உங்கள் மகனுக்கு மருந்து அவரிடமே தான் இருக்கிறது. இளவரசன் கம்பீரமாக நிமிர்ந்து நடந்து செல்வதுபோல ஓவியம் ஒன்றை வரைவதற்கு ஏற்பாடு செய்யுங்கள். அந்த ஓவியத்தை இளவரசனின் அறையில் வையுங்கள். அந்த ஓவியம், அடிக்கடி அவர் கண்களில் தென்படட்டும்" என்றார் மருத்துவர்.

அதன்படி இளவரசனின் ஆளுயர ஓவியம் வரையப்பட்டது. அதைப் பார்த்தபடியே செய்தான் இளவரசன். சில ஆண்டுகளில் அவனது கூன் முதுகு கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்ந்து சரியானது. மிக நன்றாக நிமிர்ந்து நடக்க ஆரம்பித்தான்.



மன்னருக்கு மிக்க மகிழ்ச்சி. அந்த மருத்துவரை அழைத்து, பொற்காசுகளை அள்ளிக் கொடுத்தார். "மன்னா, முன்பே சொன்னதுபோல உங்கள் மகனுக்கான மருந்து அவரிடமே இருந்தது. நான் எதுவும் செய்யவில்லை. ஓவியத்தை தினமும் பார்த்த இளவரசன், அதில் உள்ள படியே தானும் மாறி விடமுடியும் என்ற எண்ணத்தை ஆழ் மனதில் வளர்த்துக் கொண்டார். அந்த நம்பிகை தான் அவரை நிமிர்த்தியது" என்றார் மருத்துவர்.

## விடுகதை

1) உச்சியிலே கிரீடம், உடம்பெல்லாம் கண் - அது என்ன?

2) எப்போதும் கிடைக்காத மதி, எல்லோரும் விரும்பும் மதி அது என்ன?

3) இரவெல்லாம் பூக்காடு, பகலெல்லாம் வெறுங்காடு அது என்ன?

4) உச்சிக் குடுமிக்காரன், கொள்ளிவச்சா வெடிப்பான் அது என்ன?

**விடைகள்:**

1) அன்னாசிப்பழம்
2) நிம்மதி
3) வானம்
4) பட்டாசு

# வர்ணம் தீட்டுவோம் வாங்க....






# வரலாற்றில் இன்றைய தினம்

1919 – பெண்களுக்கு வாக்குரிமை வழங்கும் 19 ஆவது அரசமைப்புச் சீர்திருத்தத்தை அமெரிக்க காங்கிரஸ் அனுமதித்து, அதனை மாநிலங்களின் அங்கீகாரத்துக்கு அனுப்பி வைத்தது.

1920 – பாரிஸில் ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட்டதன் மூலம் ஹங்கேரி தனது நிலப்பிரப்பில் 71 வீதத்தையும், சனத்தொகையில் 63 வீதத்தையும் இழந்தது.

1928 – சீனக் குடியரசின் ஜனாதிபதி ஷாங் ஷீ ஒலின் ஜப்பானிய முகவரால் படுகொலை செய்யப்பட்டார்.

1944 – இரண்டாம் உலக மகாயுத்தம். அமெரிக்கக் கடற்படையினரால் ஜேர்மன் நீர்மூழ்கிக் கப்பல் u–505 கைப்பற்றப்பட்டது.

1970 – பிரித்தானியாவிடமிருந்து டொங்கா நாடு சுதந்திரம் பெற்றது.

1998 – ஒக்லோகம நகர் குண்டுவெடிப்பில் சம்பந்தப்பட்டமைக்காக ரெஜி நிக்லோஸ்க்கு ஆயுள்கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

2001 – அரச மாளிகையில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தையடுத்து நேபாளத்தில் கடைசி மன்னர் ஞானேந்திரா முடிதுறந்தார்.

2003 – ஸ்பெயினில் இரண்டு ரயில்கள் நேருக்கு நேர் மோதுண்டதில் 19 பேர் சாவு.

2003 – ஆர்ப்பாட்டத்தில் இடம்பெற்ற கலவரத்தில் ஆங்ஷாங் சூகி காயமடைந்தார்.

2012 – இரண்டாம் எலிசபெத் மகாராணியின் வைர விழாவையொட்டி லண்டன் பங்கிங்காம் அரண்மனைக்கு வெளியே இசை நிகழ்ச்சி இடம்பெற்றது.

# திருக்குறள் பற்றித் தெரிந்து கொள்வோம்!

01. திருக்குறள் உலகப் புகழ் பெற்ற தமிழ் இலக்கியம் ஆகும்.
02. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் ஆவார்.
03. திருக்குறளின் முதற் பெயர் முப்பால் ஆகும். அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்று பால்களும் கொண்டதால் முப்பால் எனப் பெயர் பெற்றது.
04. திருக்குறளில் மொத்தம் 1330 குறள்கள் உள்ளன.
05. திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை.
06. திருக்குறளின் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து 'ஔ' ஆகும்.
07. திருக்குறளில் தமிழ் மொழியின் முதல் எழுத்துக்குரிய 'அ'வில் முதல் குறளை ஆரம்பித்து, 1330ஆம் குறளில் தமிழ் எழுத்தாகிய 'ன்' னுடன் முடித்திருக்கிறார்.
08. திருக்குறளை உலகப் பொதுமறை என்றும் அழைப்பர்.
09. திருக்குறள் இது வரை 80 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
10. திருவள்ளுவருக்கு தெய்வப்புலவர், நாயனார், முதற் பாவலர், பொய்யாமொழிப் புலவர், நான்முகனார் எனப் பல சிறப்புப் பெயர்கள் உண்டு.

அ.மிஷேல்

(சிங்கப்பூர் தமிழ்முரசு பத்திரிகையில் இருந்து தகவல்கள் பெறப்பட்டன.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன உறுதி வேண்டும்...!

உயிரே போகும் நிலை வந்தாலும் தைரியத்தை விடாதே..!
நீ சாதிக்க பிறந்தவன் துணிந்து நில்,எதையும் வெல்..!

என சுவாமி விவேகானந்தர் மன உறுதி தொடர்பில் சொல்லியிருக்கின்றார்.தமிழர்களாகிய நாங்களும் நிகழ்காலத்தின் பாதை வழி மன உறுதி கொண்டு செயல்முனைப்பு பெற வேண்டியவர்களாக,அதன் வழி செயற்பட வேண்டியவர்களாக இருக்கிறோம்.இதுவே யதார்த்தம். எல்லோரும் உணர்ந்து கொள்ள வேண்டியது. உணர மறந்திருக்க முடியாதது.

சுவாமி விவேகானந்தர் லண்டன் மாநகருக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார். அங்கே அவருடைய நண்பரின் வீட்டில் தங்கியிருந்தார். அதுவோர் பண்ணைவீடு. அந்தப் பண்ணை வீடு இயற்கை வனப்பு மிகுந்த, சூழ்ந்த மிகப் பரந்த நிலப்பரப்பில் அமையப் பெற்றிருந் தது. அங்கே கால்நடைகள் (மாடுகள் )வளர்க்கப்பட்டன.

ஒரு நாள் மாலை, பண்ணை மைதானத்தில் விவேகானந்தர் நடந்து சென்று கொண்டிருக்கிறார்.அவருடன் கூடவே அவருடைய நண்பரும், நண்பரின் மனைவியும் ஆசுவாசமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். அந்த சமயத்தில் சற்றும் எதிர்பாராதவிதமாக காளை ஒன்று அவர்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்துகொண்டிருந்தது.

இந்தச் சந்தர்ப்பத்திலே, அந்தக் காளையின் மூர்க்கத்தனமான ஓட்டத்தைப் பார்த்த நண்பரின் மனைவி பயத்தினால் மயங்கி நிலத்தில் சாய்ந்தார். நண்பர் மனைவியைத் தூக்க முயன்ற சமயம் காளை அவர்களை நெருங்கிவிட்டிருந்தது. நண்பருக்குக் கையும் ஓடவில்லை. காலும் ஓடவில்லை. இன்னும் சில நொடிகள் அங்கே நின்றிருந்தால் காளையின் கொம்புகளின் தாக்கத்துக்கு இரையாக நேரிடும் என்பதை உணர்ந்து கொண்ட நண்பர், தன் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள முனைகிறார். எழுந்து வேறு திசையை நோக்கி ஓடுகிறார்.

ஆனாலும், விவேகானந்தர் தன்னைத் தற்காத்துக் கொள்ள முயற்சிக்கவில்லை. எந்தவித அசைவியக்கமுமின்றி ஆடாமல் அசையாமல் ஆணி அடித்தது போல் அந்த இடத்திலேயே நின்றுகொண்டிருந்தார். மூர்க்கத்தனமாக ஓடிவந்த காளையும் நிலத்திலே சாய்ந்து வீழ்ந்து கிடந்த நண்பரின் மனைவியையும் விவேகானந்தரையும் ஏதும் செய்யாமல் விட்டு விட்டு, ஓடிக்கொண்டிருந்த நண்பரை நோக்கி தன் கவனத்தைச் செலுத்தி ஓடியது. அவரது வேகத்துக்கு ஈடுகொடுத்து துரத்தியது. அதிர்ஷ்டவசமாக ஒரு கட்டடத்துக்குள் புகுந்து கொண்டதால் தப்பித்துக் கொண்டார் அந்த நண்பர்.

இத்தனை சம்பவங்களும் நிறைவடைந்ததன் பின்னர் தான் பண்ணை ஊழியர்கள் சம்பவ இடத்துக்கு ஓடி வருகின்றனர். களையைப் பிடித்துக் கட்டியும் போட்டனர்.இந்த நிலையிலேதான் விவேகானந்தர் தன்னுடைய அசைவற்ற நிலையிலிருந்து இயல்பான நிலைக்கு மீண்டு கொண்டு அந்த இடத்தை விட்டு அசைகின்றார். நண்பரின் மனைவியும் மயக்கம் தெளிந்து எழுந்துவிட்டார். தன்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டு விவேகானந்தர் அருகே வந்து சேர்ந்த நண்பருக்கோ ஒரே வியப்பு. சிறிது கூட பயமே இல்லாமல் அந்த ஆபத்தான நேரத்திலும் ஒரே இடத்திலேயே உறுதியோடு உங்களால் எப்படி நிற்க முடிந்தது? என்று வினவுகிறார் நண்பர். அதைக் கேட்டுவிட்டு மெல்லப் புன்னகைத்த விவேகானந்தர், நான் வித்தியாசமாக எதனையும் செய்து விடவில்லை. வருவது வரட்டும்; சமாளிப்போம் என்ற ஒரு வித மன உறுதியுடன்,தைரியத்துடன் நின்றுவிட்டேன். எப்போதும் ஓடுபவரைக் கண்டால் துரத்திச் செல்வது என்பது மிருகங்களுக்கே உரித்தான குணம். ஆகையால்தான் காளை என்னை விட்டுவிட்டு, ஓடிக்கொண்டிருக்கும் உங்களைத் துரத்தியது என்று சொல்லி முடித்தார்.

உயிருக்கு ஆபத்து நேருகின்ற சந்தர்ப்பத்தில்கூட, அதைக் கண்டு கொண்டு பயந்து ஓடாமல்,எந்த சலனமும் இன்றி வருவது வரட்டும் என்ற மன உறுதி பெற்றிருந்த சுவாமி விவேகானந்தரைப் பார்த்துப் பெரிதும் வியந்தார் நண்பர்.

உண்மையில் தற்போதும் தமிழர்களாகிய எங்களைச் சூழ்ந்து நகர்ந்து கொண்டிருப்பது,ஓடி வந்து கொண்டிருப்பது நல்லாட்சி என்ற கொம்பின் மீது பழைய இனவாதம்,அடிமைத்தனம் என்ற வர்ணங்களை பூசிக் கொண்டும் சமத்துவம் என்ற கொம்பு சீவலை செய்து கொண்டும் சீறிப் பாய்ந்து வருகின்ற மூர்க்கத்தனமான அரச மாடுகள் தான். இப்போது தமிழர்களாக, தமிழர் தலைமைத்துவங்களாக விவேகானந்தரைப்போல் புரிதல் உள்ளவர்களாக சாதுரியமாக நடந்து கொள்ள வேண்டும்.

பக்தி எழுத்து

நல்லாட்சியின் அ(ப)ங்கமானவர்களும் கொம்பு சீவலோடு பாய்கின்றனர்.தனிப்பட்ட ரீதியிலே தமிழக முதல்வரை சந்திப்பதாக இருந்தால் சந்திக்கலாம்.அதைவிடுத்து மத்திய அரசின் ஆதரவு இன்றி இராஜ தந்திர சந்திப்பை மேற்கொள்ளல் பயனற்றது என்பதாகவும் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் தன்னிச்சையாக செயற்பட முடியாது என்றும்- ஜனாதிபதியின் அனுமதி தேவையென்றும்- இரைமீட்டியிருக்கின்றனர். இதற்கு மேலும் சென்று வடக்கு-கிழக்கு பிரிப்புக்கு இவ்வாறான தனிப்பட்ட இந்திய சந்திப்பும் உறவு நிலையும் தான் காரணமென்றும் தங்கள் இனவாத சூளையில் இருந்தான கருத்தையும் கக்கி இருக்கின்றனர்.

ஆக, வருவது வரட்டும்; சமாளிப்போம் என்ற ஒரு வித மன உறுதியுடன்,தைரியத்துடன்; நடை பயில வேண்டும்.விவேகானந்தரையும் துணைக்க அழைத்திருக்க வேண்டும். அவர் தந்த வாசகங்களை மனதிருத்தி முன் நகர வேண்டும்.

எனது துணிவுடைய இளைஞர்களே! நீங்கள் பெரும் பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். குட்டி நாய்களின் குரைப்பைக் கண்டு நடுங்காதீர்கள்; வானத்தில் முழங்கும் இடி யோசைக்கும் அஞ்ச வேண்டாம்; நிமிர்ந்து நின்று வேலையைச் செய்யுங்கள்...!



# இல்லக விளக்கது இருள் கெடுப்பது

புலோலியூர் வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா

ஒவ்வொருவரும் முற்பிறவியில் செய்த நல்வினை, தீவினை களுக்கேற்ப உலகில் அவரவர்களுக்கு சுகதுக்கங்கள் ஏற்படுகின்றன. விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான். ஐயன் அடித் தாமரைக்கு முன்பு செய்யும் தவம் உடையார்க்குளவாகிய சின்னங்களாவன:-
தேர்க்குதிரை, யானை, உயர்ந்த மணி முடிகள், பல்லக் குகள், கொட்டும் பொன் உயர்ந்த முத்துமாலைகள் என அபிராமி அந்தாதியின் ஐந்தாம் பாடல்வாழ்வுச் செல்வங்களை தெளிவு படுத்துகின்றது. உடம்பே இறைவன் வசிக்கும் கோயில். ஆத்மாவே இறை சந்நிதானம், எல்லாம் இறைவனே. எல்லாம் இறைபடைப்பு. மனித வாழ்வில் மகிழ்ச்சியுடன் வாழ வீடு என்ற அமைப்பு. ஆன்மிகத்தின் உச்சக்கட்டமும் வீடுபேறுதான். வீட்டு அமைப்பில் அறைகளை அமைத்துப் பிரிக்க எங்கெங்கு நல்ல சக்திகள் பரவி, மக்கள் நலனுக்கு விளக்கேற்றுகின்றன என்பதை ஆராய்வோம். வீட்டுக்குக் குளியல் அறை, சமையல் அறை, படுக்கை அறை, சாப்பிடும் அறை, வரவேற்பு அறை, பூசை அறை ஆகியவை உரிய உரிய முறையில் அமைவதே மனைப் பொருத்தம். இதன் நிமித்தம் சூரிய ஒளி, காற்றுவசதி என்பவற்றுக்கு ஏற்ப அறைகள் அமைந்து விடும். சமயலறை தென் கிழக்கு, படுக்கை அறை தெற்கு, துணிமாற்றும் அறை தென்மேற்கு, சாப்பிடும் அறை மேற்கு, பசு மாட்டுக் கொட்டகை வடமேற்கு, பணம், நகைகள் வைக்குமிடம் வடக்கு, பூசை அறை வடகிழக்கு, சூரியஒளி உஷ்ணம் காற்று வேகம் சமாளிக்கக் கூடியதாக மேற்கு தெற்கு சுவர்கள் உறுதியானதாக இருத்தல் அவசியம். தெற்கு மேற்கு பகுதிகளில் செடி, கொடிகள், மரங்கள் ஆகிய வற்றை நடலாம். கிணறுகள் வடகிழக்கு. கிணற்றை எப்படி வெட்டினாலும் மேலே கைப் பிடிச் சுவர் வட்டமாக அமைதல் நன்று. பூசை அறையில் வணங்கும் தெய்வீகப் படங்கள் திரு உருவங்களை மேற்குப்பக்கம் பார்த்து வைப்பது தான் சிறப்பு. அப்போது கிழக்கு முகமாக வணங்குவது நன்று. தெற்கு மேற்குப் பக்கம் பார்த்து வணங்குவது கெடுதல். வீட்டில் மாடி இருந்தால் கீழ்த் தளத்திலே பூசை அறை அமைத்தல் நலம். தலையை வடக்குத் திசையில் வைத்துக் கொண்டு காலைத் தெற்கே நீட்டிப் படுக்கவே கூடாது. பூமியின் காந்தத்துருவங்கள் வடதென் அச்சு. வடதுருவத்தால் மனித சரீரத்தின் இரும்புச் சத்து பாதிப்படைகின்றது. தென்பகுதி உடம்புக்கு இதத்தையும், ஓய்வை யும், நல்ல தூக்கத்தையும் தருகிறது. மாணவர்கள் கிழக்கு மேற்காகப் படுக்கலாம். இதனால் அவர்களுக்கு நல்ல ஞாபக சக்தி உண்டாகிப் படிப்பது மனதில் தங்கும். சமயலறை வடகிழக்கில் இருக்கவே கூடாது. சமையல் செய்பவர் கிழக்குப் பார்த்தே சமையல் செய்வதே முதல் தரம். வீட்டுக்கு வெளியில்கூட வடகிழக்கில் சமையலறை வைக்கக் கூடாது. கிழக்குப் பகுதியில் வைக்கலாம். அன்றேல் பணக்கஷ்டம் பல பிரச்சினைகள் ஏற்படும். வடமேற்கு நன்று. மேல்நிலை தண்ணீர்த் தொட்டி தென்மேற்கில் அமைவது நன்று. மாடியில் வடகிழக்கில் கட்டக்கூடாது. முக்கிய வீட்டுவாசல் கதவு வைக்க சாதகமான இடங்கள் வடக்கு, வடகிழக்கு, கிழக்கு, கிழக்கு, வடகிழக்கு, மேற்கு, வடமேற்கு. வீட்டுக்கு உள்ளே போகக் கூடிய பிரதான வாசல் இரண்டு இருக்கலாம். ஆக வீடு கட்ட வரை படம் அமைக்கும் போதே உரிய முறையில் எமது கலா சாரத்துக்கு ஏற்ப அமைத்துக் கொண்டால் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வத்தையும் அடைந்து சுகமான வாழ்வு வாழலாம்.

பூசை அறையில் வணங்கும் தெய்வீகப் படங்கள் திரு உருவங்களை மேற்குப்பக்கம் பார்த்து வைப்பது தான் சிறப்பு. அப்போது கிழக்கு முகமாக வணங்குவது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** லட்சிய நோக்கில் செயற்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும். இஷ்ட தெய்வ அருள் துணை நிற்கும். நிலுவைப் பணம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலைக்கும்.

**இடபம்:** எளிதான பணியும் சுமை போலத் தோன்றும். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட இலக்கு நிறைவேறுவதில் தாமதம் ஏற்படும். பெண்கள் ஆடம்பரமாக செலவழிப்பர். வாகனப் பயணத்தில் கவனம் தேவை.

**மிதுனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு சிலர் வியப்படைவர். தொழில், வியாபாரத்தில், திட்டமிட்ட வளர்ச்சி எளிதில் பூர்த்தியாகும். தாராள வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கடகம்:** அன்பான பேச்சால் அனைவரையும் ஆதரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில், வியத்தகு வளர்ச்சி ஏற்படும். வருமானம் அமோகமாக கிடைக்கும். நீண்ட நாள் விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தினர் அன்பு கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில், பொறுப்புணர்வுடன் செயற்படுவீர்கள். மிதமான வருமானம் கிடைக்கும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**கன்னி:** ஆடம்பரத்தைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வளர்ச்சிக்கு, நண்பரின் ஆலோசனை பெரிதும் உதவும். பணவரவில் இருந்த மந்த நிலை மாறும். அரசு சார்ந்த உதவி கிடைக்க வாய்ப்புண்டு.

**துலாம்:** மனதில் நேர்மை எண்ணம் அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**விருச்சிகம்:** அணுகுமுறையில் புதிய மாறுதல் உண்டாகும். தொழில், வியாபாரத்தில், அதிக உழைப்பால் வளர்ச்சி பெறுவீர்கள். ஆதாயம் உயரும். உடல் ஆரோக்கியம் பலம் பெறும்.

**தனுசு:** அடுத்தவர் பிரச்சினையில் கருத்துச் சொல்ல வேண்டாம். தொழிலில், நிலுவைப் பணியை நிறைவேற்றுவது நல்லது. மிதமான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்ல நேரிடும்.

**மகரம்:** எதிலும் விழிப்புடன் செயற்படுவீர்கள். தொழிலில், உற்பத்தி, விற்பனை, சராசரி அளவில் இருக்கும். உறவினர்கள் வகையில் செலவு ஏற்படலாம். வாகனப் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும்.

**கும்பம்:** மனதில் பக்தி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், கடின உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். வருமானம் திருப்தியளிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்..


**மீனம்:** நண்பரின் செயற்பாடு மனதைச் சஞ்சலப்படுத்தும். தொழில், வியாபாரத்தில், சுமாரான ஆதாயம் கிடைக்கும். உடல் நலனில் அக்கறை கொள்வீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் தரும்.

இசைமொழி♣ @Isai_mozhi 52m

அற்ப விடயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்; நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்

4 2

# அனிருத்தின் கூட்டணி!



'போடா போடி' படத்தின் மூலம் இயக்குநராக அறிமுகமான விக்னேஷ் சிவன், அந்தப் படத்தில் 3 பாடல்களையும் எழுதி தன்னை ஒரு பாடலாசிரியராகவும் நிரூபித்தார். அதனைத் தொடர்ந்து 'வணக்கம் சென்னை' படத்தில் முதல் முறையாக அனிருத்துடன் கூட்டணி அமைத்தார் விக்னேஷ் சிவன். இந்தப் படத்தில் சூப்பர் ஹிட்டான 'எங்கடி பொறந்த' பாடலை எழுதியவர் விக்னேஷ் தான். அனிருத்துடன் அப்போது ஆரம்பித்த கூட்டணி இப்போது சிவகார்த்தி கேயனின் 'ரெமோ' வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது.

'நானும் ரௌடிதான்' படத்தில் அனிருத் இசையமைப்பில் உருவான மொத்தப் பாடல்களையும் விக்னேஷ் சிவன்தான் எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமில்லாமல், அனிருத்தின் 'சான்ஸே இல்லை...', 'அவளுக்கென்ன' போன்ற மியூசிக் வீடியோக்களை இயக்கியதும் இயக்குநர் விக்னேஷ் சிவன் என்பது குறிப்பிடத்தக்கது.



கணவன் என்பவன்
குடும்பத்தில் தலை மாதிரி.
மனைவி என்பவள்
கழுத்து மாதிரி.
கழுத்து தான்
தலை. எந்த பக்கம்
பார்க்க முடியும் என்று
முடிவு செய்யும்.

facebook








நர்ஸ்: ஏன் டாக்டர் சோகமா இருக்கீங்க?

டாக்டர்: இன்னிக்கு மதியம் நான் ஆபரேன் பண்ண நோயாளி இறந்திட்டாரு.

நர்ஸ்: டாக்டர், இன்னைக்கு மதியம் நீங்க பண்ணது ஆபரேன் இல்ல அது போஸ்ட்மார்ட்டம்.

டாக்டர்: அப்போ காலைல நான் யாருக்கு போஸ்ட்மார்ட்டம் பண்ணேன்?.

நர்ஸ்: ???

படித்ததில் பிடித்தது

# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | 6 | | 2 | 9 | 5 | | |
| | 4 | | | | 1 | | | 7 |
| | 2 | | | | | | | |
| | 9 | 4 | | | 2 | | | |
| | | 3 | 6 | | 8 | 1 | | |
| | | | 9 | | | 4 | 6 | |
| | | | | | | | 7 | |
| 7 | | | 2 | | | | 5 | |
| | | 1 | 3 | 6 | | 2 | | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 9 | 7 | 3 | 1 | 6 | 8 | 2 |
| 8 | 7 | 3 | 2 | 6 | 4 | 5 | 9 | 1 |
| 1 | 6 | 2 | 8 | 5 | 9 | 7 | 4 | 3 |
| 3 | 2 | 7 | 5 | 9 | 6 | 4 | 1 | 8 |
| 4 | 1 | 8 | 3 | 2 | 7 | 9 | 6 | 5 |
| 9 | 5 | 6 | 4 | 1 | 8 | 2 | 3 | 7 |
| 7 | 9 | 5 | 6 | 8 | 3 | 1 | 2 | 4 |
| 6 | 8 | 4 | 1 | 7 | 2 | 3 | 5 | 9 |
| 2 | 3 | 1 | 9 | 4 | 5 | 8 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலினும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 120 | 160 | 100 | – | 40 | 70 |
| கத்தரி | 300 | 140 | 150 | 280 | 240 | 250 | 100 | 200 |
| கரட் | 180 | – | 160–300 | 180 | 120–220 | 240 | 100 | 200 |
| மரவள்ளி | 160 | 60 | 60 | 60 | 60 | 60 | 40 | 45 |
| பயிற்றை | 200 | 240 | 260 | 250 | 160 | 220 | 150 | 240 |
| பாகல் | 180 | 220 | 250 | 220 | 160 | 200 | 120 | 140 |
| கருணைக்கிழங்கு | 120 | 100 | 120 | 160 | 100 | – | 60 | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 80 | 80–100 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 140 | 160 | 140 | 200 | 100 | 130 |
| பூசணி | 50 | 60 | 80 | 60 | 80 | 80 | 15 | 40 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 200 | 200 | 140 | 160 |
| வாழைக்காய் | 150 | 50 | 50 | 60 | 40 | 60 | 35 | 40 |
| கீரை | 40 | 50 | 60 | 15 | 40 | 50 | 25 | 60 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 40 | 30 | 30 | 40 | 20 | 12 |
| பச்சை மிளகாய் | 500 | 500 | 400 | 600 | 300 | 400 | 400 | 400 |
| புடோல் | 120 | 120 | 120 | 120 | 100 | 120 | 30 | 100 |
| கோவா | 160 | 160 | 200 | 160 | 160 | 200 | 90 | 140 |
| வெண்டி | 150 | 140 | 140 | 140 | 140 | 120 | 50 | 80 |
| போஞ்சி | 290 | 140 | 240 | 280 | 180 | 200 | – | 200 |
| லீக்ஸ் | 200 | 220 | 120–200 | 220 | 200 | 200 | 100 | 190 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–40 | 30 | 30 | 15–30 | 30 |
| உருளைக்கிழங்கு | 120 | 110 | 120 | 120 | 100 | 110 | 75 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 300 | 200 | 200 | 300 | 350 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 200 | 120 | 200 | 140 | 300 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 160 | 150 | 160 | 180 | – | 110 | 130 |
| முருங்கைக்காய் | 150 | 150 | 180 | 160 | 200 | 200 | 150 | 160 |

# பட்டுச் சேலை பராமரிப்பு!

1. விலை அதிகம் கொடுத்து வாங்கும் பட்டுச் சேலையை தரமாகப் பராமரிக்க வேண்டும். விசேட வைபவங்களுக்குச் சென்று வந்தவுடன் பட்டுச் சேலையை களைந்து உடனே மடித்து வைக்கக்கூடாது.

2. நிழலில் காற்றாட 2, 3 மணி நேரம் உலர விட வேண்டும். அல்லது கையால் அழுத்தித் தேய்த்து மடித்து வைக்கவும்.

3. எந்தக்காரணம் கொண்டும் பட்டுச்சேலையை சூரிய ஒளியில் வைக்கக்கூடாது, சோப்போ அல்லது சோப் பவுடரோ உபயோகித்து துவைக்கக்கூடாது. வெறும் தண்ணீர் விட்டு அலசினாலே போதுமானது.

4. ஏதாவது கறைபட்டு விட்டால் உடனே தண்ணீர் விட்டு அலச வேண்டும். எண்ணெய்க் கறையாக இருந்தால், அந்த இடத்தில் மட்டும் விபூதியைத் தடவி 5,10 நிமிடங்கள் வைத்திருந்து பின்பு தண்ணீர் விட்டு அலச வேண்டும்.

**நாளை**
**வைகாசி-23**
ஞாயிற்றுக்கிழமை - 05.06.2016
திதி: அமாவாசை மு.ப.09.17 வரை
நட்சத்திரம்: ரோகினி
பி.ப.01.46 வரை
ராகுகாலம்: 04.22-05.52 வரை
சுபநேரம்: 08.52-10.22 வரை

## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 800 | 800 | 1000 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 450 | 120 | 200 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 600 | 700 | – |
| பாரை | 550 | 700 | 500 | 600 | 500 | 600 | 450 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 800 | 600 | – |
| சீலா | 300 | 500 | 400 | 500 | 450 | 500 | – |
| விளை | 650 | 550 | 400 | 500 | 500 | 300 | 400 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 350 | 300 | 450 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 450 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | – | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | – | 350 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 200 | 300 | 350 |
| நகரை | 250 | 300 | – | 250 | 300 | – | 350 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 250 | 100 | – | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | 100 | 200 |
| மதனம் | 150 | 300 | 180 | 300 | 300 | – | 250 |
| கொய் | 100 | 200 | 60 | 80 | 80 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 350 | 500 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 300 | – | – |

# இதைத் தெரிந்து கொள்ளுங்கள்




1. பெண்கள் தொழில், படிப்பு போன்ற காரணங்களுக்காக வெளியூர்களில் தனியாக வசிக்க நேரிடலாம். அந்த மாதிரியான வேளைகளில் தனியாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். அப்படி இருப்பதால் மனரீதியாக தைரியம் கிடைக்கும்.

2. பெண்கள் பணத்தைச் சம்பாதிப்பதை விடவும், அதைச் சேமிப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும். சரியான நிறுவனங்களை தேர்ந்தெடுத்து முதலீடு செய்ய வேண்டும். நுறு ரூபா என்றாலும் ஒன்றுக்கு பலமுறை யோசித்தே முதலீடு செய்ய வேண்டும்.

3. திடீரென உங்கள் வீட்டுக்கு உறவினர்கள் பலர் எதிர்பாராத விதத்தில் வந்தால், உங்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். அந்த நேரங்களில் பதற்றப்படாமல் இன்முகத்தோடு வேலையைப் பாருங்கள். உங்கள் முகத்தில் தோன்றும் புன்னகையே விருந்தாளிகளின் பாதிப் பசியைப் போக்கிவிடும்.

# அச்சு முறுக்கு



### தேவையானவை

பச்சரிசி மா - 1,200 கிராம்
மிளகாய்த்தூள் - 6 கரண்டி
தேங்காய் - ஒரு மூடி
எள் - ஒரு கரண்டி
உப்பு, எண்ணெய்
தேவையான அளவு

### செய்முறை

அரிசியைக் கழுவி ஒரு மணி நேரம் ஊற வைத்து, நீ
வடித்து விட்டு மிக்ஸியில் அல்லது உரலில் இடித்
அரித்தெடுத்து, உப்பு, மிளகாய்த் தூள், பொரித்த
ஆகியவற்றைச் சேர்த்துக்கலந்து கொள்ளவும். தே
காயைத் துருவி பால் எடுத்து அதில் ஊற்றி, தோசை ம
பக்கு வத்தில் கரைத்துக் கொள்ளவும். பின்னர் அச்
காய்ந்த எண்ணெயில் மூழ்கச் செய்து எடுத்து, கரை
மாவில் அச்சின் பகுதி மட்டும் படும்டி எண்ணெ
விட்டால், முறுக்கு அச்சிலிருந்து சுழன்று எண்ணெ
விழும். முறுக்கு வெந்ததும் திருப்பி விட்டு எடுக்கவும்
இதே மாவில் உப்பு, மிளகாய்த் தூளுக்குப் பதிலாக 1
கிராம் சீனி திரித்துப்போட்டு, 2 முட்டையும் அடி
ஊற்றி மாவுடன் கலந்து மேற்கூறிய மாதிரி செய்யல
(இப்போது இனிப்பு அச்சுமுறுக்காக அது கொள்ளப்படு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப் பொருள் குற்றங்களில் 2014 ஆம் ஆண்டு 67,025 பேர் கைது

போதைப்பொருள் குற்றங்கள் தொடர்பில் கடந்த 2014 ஆம் ஆண்டு, நாடு முழுவதிலுமாக 67 ஆயிரத்து 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தேசிய அபாயகரமான மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

இந்தத் தரப்பினருள் நூற்றுக்கு 35 வீதமானோர் ஹெரோயின் சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஏனைய நூற்றுக்கு 65 வீதமானோரும் கஞ்சா போதை வஸ்து சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்விதம் கைதுகளுக்கு உள்ளாகியிருப்போரில், நூற்றுக்கு 61 வீதமானோர் மேல் மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். நூற்றுக்குப் பத்து வீதமானோர் தென் மாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

இவற்றைவிட அதே ஆண்டில் போதைப்பொருள்கள் தொடர்பாக இந்த நாட்டில் வைத்து இருபது வெளிநாட்டுப் பிரசைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர். முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிட்டு நோக்கும் போது 2014 ஆம் ஆண்டில் கஞ்சா போதைப் பொருள் சம்பந்தப்பட்ட கைதுகள் அதிகரித்துள்ளது. நாடு முழுவதிலும் மேற் கொள்ளப்பட்டிருந்த சுற்றி வளைப்புக்களில் கைப்பற்றப்பட்ட கஞ்சா போதைப் பொருளின் தொகைப் பிரமாணம் 19 ஆயிரத்து 644 கிலோ கிராமாகும்.

ஆயுள்வேத உற்பத்திகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள் மற்றும் ஆயுள்வேத வைத்தியர்களாலுமே கஞ்சா பயன்படுத்தப்படுகிறது. வருடாந்த மதிப்பீட்டின் படி இலங்கையில் ஹெரோயின் விநியோகம் 985 கிலோவாக இருப்பதோடு, நாளொன்றுக்கு 2.7 கிலோ கிராமாக உள்ளது. இதனிடையே கடந்த ஐந்தாண்டுகள் காலத்துள் இந்தியா, மாலைதீவு, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் வைத்து 27 இலங்கையர்களும் போதைப் பொருள்களுடன் கைதாகியுள்ளனர்.

போதைப் பொருள்களை எடுத்து வருவதிலும் மற்றும் அவற்றைப் பரிமாற்றம் செய்வதிலும் இலங்கை கேந்திர நிலையமாகியுள்ளது. பாகிஸ்தான் மற்றும் இந்தியாவில் இருந்து எடுத்து வரப்படும் போதைப் பொருள்கள் ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகளுக்கு கொழும்பு அல்லது மாலைதீவினூடாக பகிரப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ற-ஐ-22)


## அச்சுவேலியில் அதிஸ்டம்


26.05.2016 மஹஜன சம்பத சீட்டிழுப்பில் அச்சுவேலியில் உள்ள எனது விற்பனை நிலையத்தில் சீட்டினைப் பெற்றுக்கொணடவர் ஒரு லட்சம் ரூபா பரிசினை பெற்றுக்கொண்டுள்ளார். அதிஸ்டம் உங்களை அழைக்கின்றது.

சி. கிருஷாந்
தேசிய லொத்தர் விற்பனை முகவர்,
பஸ்நிலையம் அச்சுவேலி


## 31 ஆம் நாள் நினைவில்...

'நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகைவிட்டு தந்தையிடம் செல்லுகிறேன்' (யோ 16:28)

### அமரர் பெனடிக்ற் செபஸ்தியாம்பிள்ளை



தாய் மடியில் 12 . 01 . 1950

ஆண்டவன் அடியில் 02 . 05 . 2016

உறவுகளைத் தேடி உளம் மகிழ வைத்து
உன்னதமாய் வாழ்ந்தீர் உம்மவரின் உயர்விற்காய்
உம்மையே அர்ப்பணித்தீர்
அன்புள்ள கணவராய் பாசமுள்ள தந்தையாய்
பண்புள்ள தோழனாய் நெடுநாள் வாழ்வீர் என
நினைத்திருந்தோம்... நிழலாய்ப் போனதேனோ?
நிலைகுலைந்து நிற்கின்றோம்
நித்தியத்திற்கும் இறைவனுடன் வாழ்ந்திடுங்கள்
தந்தையே!

ஆத்ம சாந்தித் திருப்பலி 04.06.2016 சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும்.

'திரேஸ் இல்லம்'
சில்லாலை கிழக்கு,
பண்டத்தரிப்பு.

நெஞ்சம் நிறைந்த நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம் 20 . 08 . 1971

மறைவு 07 . 05 . 2016

கடந்த 07.05.2016 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம்

### அமரர் கனகரத்தினம் சுதாகர் (சுதா)

அவர்களின்
அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (04.06.2016) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அரசடி அம்மன் கோயில் வீதி,
திருநெல்வேலி மேற்கு,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.


## விற்பனைக்கு

ஒரு வயது நிரம்பிய அல்சேசன் ஆண், பெண் நாயும், பொமேரியன் ஆண், பெண் நாயும், 60 நாள் பூர்த் தியான பொமேரியன் குட்டிகளும், ஒரு வருட ஒரிஜினல் யமுனா பாறி ஆட்டுக்கிடாய்களும் மணித்தாரா விற்பனைக்கு.

மயூரன் பாம் சென்ரர்.
நீர்வேலி கந்தசாமி கோயிலடி பின் வீதி.
077 015 8690


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



### அமரர் கதிரவேலு தியாகராசா

திதி: சித்திரை அபரபக்ஷ துவாதசி

தோற்றம் 07.11.1950

மறைவு 03.05.2016

கடந்த 03.05.2016 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கதிரவேலு தியாகராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (04.06.2016) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.


குறிப்பு: தனிப்பட்ட அழைப்புக் கிடைக்கப் பெறாதவர்கள் இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

புகையிரத நிலையவீதி,
மல்லாகம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

விஸ்வப் பிரம்மனே நமஹ



தோற்றம் 16 . 04 . 1938

மறைவு 02 . 06 . 2016

### சுந்தரம் தர்மலிங்கம்

யாழ். நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சுந்தரம் தர்மலிங்கம் கடந்த (02.06.2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம்-வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் கமலநாயகியின் அன்புக் கணவரும் ஜெயவதனி (லண்டன்), ஜெயசீலன் (ஜேர்மனி), காலஞ்சென்ற ஜெயகரன் மற்றும் ஜெயகுமார் (மகிந்தன்-கனடா), ஜெயநந்தினி (ஜேர்மனி), ஜெயசுதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, அன்னபூரணம், லக்சுமி, அம்மாப்பிள்ளை மற்றும் இரத்தினம், சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் முருகானந்தம் (லண்டன்), திருஞானலோஜினி (ஜேர்மனி), பிரதீபா (கனடா), குமரேசன் (ஜேர்மனி), ராதிகா (கனடா) ஆகியோரின் மாமனாரும் இராஜேஸ்வரி, செல்வராஜா (கராஜ் துரை), தனபாலசிங்கம் (கனடா), பாலசுப்பிரமணியம் (சுவிஸ்), கோணேஸ்வரி, இராசேந்திரம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் சரண்யா, தரண்யா, கஜீபன், பிரவீன் (லண்டன்), அஜீன், சுபீன், மனுஹீ(கனடா), சுஜீனா, சுகஸ்தா(ஜேர்மனி), சஜீன், துவனா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் பரூன், சானியா, ஆரீயன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பூட்டனும் தட்சாயினி, அனுஜா, அஜிதா, அனேஸ் ஆகியோரின் பெரியப்பாவும் சபேசனின் (அப்பன்) சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி சந்தி,
நீர்வேலி.

தகவல்: குடும்பத்தினர்.
077 155 1573

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி

யத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இதில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்துகொண் டனர்.

நல்லாட்சி அரசின் கீழ் பொருள்களின் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. மேலும் நாட்டில் அனைத்துப் பொருள்கள் மீதும் அசாதாரணமான முறையில் வரி அதிகரித்துள்ளது. இதை எதிர்த்தே குறித்த கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய் யப்பட்டிருந்ததாக, ஜே.வி.பி தெரிவித்துள் ளது.

மருதானை டெக்னிக்கல் சந்தியில் இந் தக் கவனவீர்ப்பை ஆரம்பித்த போராட்டக் காரர்கள், கொழும்பு கோட்டை ரயில் நிலையம் வரை பேரணியாகச் சென்றனர். இதில் கருத்து தெரிவித்த ஜே.வி.பி.யின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினரு மான அனுரகுமார திஸநாயக்க, கடந்த அரசில் இருந்ததை விட இந்த அரசு வாக னங்கள் மீது அதிக வரி விதித்துள்ளது. சாதாரண குடிமகன் ஒரு முச்சக்கர வண் டியைக் கூட வாங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

மேலும் கடந்த அரசு செய்த ஊழல்களின் காரணமாகவே வரி அதிகரிக்கப்பட்டுள்ள தாக கூறினாலும், கடந்த அரசின் கடனை அடைப்பதற்கு இந்த அரசும் கடனையே வாங்குகிறது. இதனால் பாதிக்கப்படுவது சாதாரண மக்களே என அவர் சுட்டிக்காட் டினார். (த-வ-5)

## மண் சரிவு

ருந்து ஒரு கிலோ மீற்றர் தொலைவில் மீட் கப்பட்டுள்ளது.

மண்சரிவினால் புதையுண்ட கிராமங் களில் ஒன்றான பல்லேபாகே பகுதியிலி ருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. கடந்த மாதம் 17 ஆம் திகதி அரநாயக்க பிரதேசத்திலுள்ள சாமசர மலையிலிருந்து மண்திட்டுகள் சரிந்து விழுந்தன. இத னால் மூன்று கிராமங்கள் மண்ணில் புதையுண்டன.

இதுவரைக்கும் 49 பேர் உயிரிழந்துள் ளனர். நேற்றையதினம் பல்லேபாகே கிராமத்தில் வைத்து சடலமொன்று மீட்கப் பட்டுள்ளது. குறித்த சடலமானது மண் சரிவு ஏற்பட்ட இடத்திலிருந்து ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை மண்சரிவினால் அடித்து செல்லப்பட்டிருந்ததாக பொலி ஸார் தெரிவித்தனர்.

அரநாயக்க மண்சரிவில் சிக்குண்ட சட லங்களை மீட்பதற்கான அனைத்து நடவ டிக்கைகளையும் மீட்புக் குழு முழுமை யாக நிறுத்தியதாக இராணுவம் உத்தி யோகபூர்வமாக அறிவித்திருந்தது.

இவ்வாறு மீட்புப் பணிகள் நிறுத்தப்பட்ட நிலையிலேயே, நேற்று ஒரு சடலம் மீட்கப் பட்டுள்ளது. எனினும் அரநாயக்க மண் சரிவினால் 200 இற்கு மேற்பட்டோர் புதையுண்டு இருக்கலாம் என்று தெரி விக்கப்படுகின்றது. ஆனாலும் தற் போதைக்கு 49 சடலங்களே மீட்கப்பட் டுள்ளன. (த-வ-5)

## நல்லிணக்கம்

பான ஐ.நா.தீர்மானத்தின் முன்னேற் றம் குறித்து ஐ.நா. மனித உரி மைகள் ஆணையாளர் 29 ஆம் திகதி வாய் மொழி மூல அறிக்கையைச் சமர்ப்பிக்க வுள்ளார். அதற்கு முன்னர் இடம்பெறும் டி கிரீவ்வின் பயணம் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகக் கருதப் படுகின்றது.

இவரின் நிகழ்ச்சி நிரல் தொடர்பில் வெளி விவகார அமைச்சு உத்தியோகபூர்வத் தக வல் எதையும் வெளியிடவில்லை. ஆனால், இலங்கை அரசின் உயர் மட்டத் தினருடனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப் பினருடனும் பப்லோ டி கிரீவ் பேச்சுக்களை நடத்துவார் என்று அறிய முடிகின்றது.

வடக்கு மாகாணத்துக்கும் இவர் பயணம் மேற்கொள்வதுடன், பாதிக்கப்பட்ட மக் களைச் சந்திப்பார் என்றும் அறிய முடி கின்றது.

ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட பொறி முறையை இலங்கையில் நிறுவுவது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வால் நியமிக்கப்பட்டுள்ள நல்லிணக்கம் தொடர்பான செயலணியுடனும் இவர் கலந்துரையாடவுள்ளார்.

இதேவேளை, 11 பேர் கொண்ட மேற்படி செயலணி இன்னமும் இரண்டு வாரங் களில் தனது கடமையை ஆரம்பிக்கவுள் ளதாகத் தெரியவருகின்றது.

இந்த விசேட செயலணியின் ஆலோ சனைச் செயற்பாடானது பாதிக்கப்பட் டோரை மையப்படுத்தியதாகவும், மூன்று மாதங்களில் நிறைவடையக் கூடியதா கவும் அமையவுள்ளது. (த-வ-5)

## சீனா

வியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்ததாவது:-

எமது நாட்டில் ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சீனாவுடனான பொருளாதார உறவும், அரசியல் உறவும் முற்றாக பாதிக் கப்பட்டுள்ளதாக எதிர்த் தரப்பினர் பல விமர்சனங்களை முன்வைத்திருந்தனர். தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவை, சீனாவுக்கான பயணத்தை மேற் கொள்ளுமாறு சீன ஜனாதிபதி ஜின்பிங் அழைப்பு விடுத்துள்ளார். இதுவொரு சிறந்த சந்தர்ப்பமாகும்.

மேலும் எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்தியில் 25 வீதத்திற்கும் அதிகமாக வெளிநாட்டுக்கடன்களைச்செலுத்துவதற் குச் செலவாகின்றது. இந்த நிலை நீடிக்கா திருக்கத் தற்போது எமக்குக் கிடைத்துள்ள சீனா உள்ளிட்ட நாடுகளின் உறவை வலுப்படுத்திக் கொள்வதே சிறந்தது – என் றார். (த-வ-5)

## வாக்காளர்

வரிடமும் மன்னிப்புக் கேட்டுக் கொள் கின்றேன்.

இங்கு உரையாற்றுவதற்கு மொழிபெயர்ப் பாளர் ஒருவர் அழைத்து வரப்படவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. என்னைப் போன்ற வயது முதிர்ந்த அதிகாரி ஒருவர், இரு அரச மொழிகளையும் பேச முடி யாததை எண்ணிக் கவலை அடைகின் றேன். இங்கு வருகை தந்துள்ள இளை ஞர், யுவதிகள் அரச கரும மொழிகள் இரண்டையும் கற்கவேண்டும்.

இன்றைய நிகழ்வின் மூலமாக வாக்காளர் பதிவுகள் தொடர்பாக மாணவர்களின் பேச்சு மற்றும் நாடகங்களில் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்குப் புத்தகத் தில் பெயர் இல்லை என்றால், வாக்களிக்க முடியாது. எனவே அனைவரும் வாக்குப் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

வன்னிப் பிரதேசத்திலே அதிகளவான மாற் றுத் திறனாளிகள் இருப்பதனால், அவர் களைப் பதிவு செய்ய மாவட்டச் செயலா ளர்கள், பிரதேச செயலாளர்கள் மற்றும் கிராம சேவகர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். மாற்றுத்திறனாளிகள் அனை வரையும் வாக்காளர் இடாப்பில் உள் வாங்க நடைமுறைகளை முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன், இன்றைய தினம் அறிந்து கொண்ட விடயங்களை ஏனையவர்களுக் கும் தெரியப்படுத்துங்கள். இந்த வாக்காளர் தெளிவுபடுத்தும் செயற்பாடானது இரண்டு அம்சங்களை உள்ளடக்கியுள் ளது. அதில் முதலாவது தகைமை வாய்ந்த அனைவரையும் இதில் உள்ள டக்கவேண்டும். இரண்டாவது எவரையும் விட்டுவிடாத வாக்காளர் பெயர்ப் பட்டிய லைத் தயாரித்து கொள்ளல் என்ற அம் சங்களை உள்ளடக்கியதாக அமையப் பெற்றுள்ளது – என்றார்.

இந்த நிகழ்வில் கிளிநொச்சி, முல் லைத்தீவு மாவட்டச் செயலாளர்கள், துறைசார் அதிகாரிகள் உத்தியோகத் தர்கள், மாணவர்கள் மற்றும் பொது மக்க ளும் கலந்துகொண்டனர். (த-வ-21-ரி3)

## புலிகள்

தடையை நீடிப்பதாக அமெரிக்கா அறி வித்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தி னால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு போர் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர், இலங்கையில் எந்த விதமான தாக்குதல் களையும் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற் கொள்ளவில்லை.

எனினும், இந்தியாவில் அமைந்துள்ள அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தூதரகங் கள் மீது தாக்குதல் நடத்த முயற்சித்தவர் கள் உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் 13 பேர் கடந்த 2014 ஆம் ஆண்டு மலேசியாவில் கைது செய்யப்பட்டனர்.

மேலும், 2015 ஆம் ஆண்டில் இந்தியா மற்றும் மலேசியாவில் ஏனைய சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தனது அறிக்கையில் குறிப்பிட் டுள்ள அமெரிக்கா, இதனால் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை நீடிப்பதாகத் தெரிவித்துள்ளது. (த-வ-5)

## வாள்வெட்டு

சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை உத விப் பொலிஸ் அத்தியட்சகரிடமும், யாழ்ப் பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபரிடமும் கேட்டுள்ளதாக, இலங்கை மனித உரிமை கள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார்.

அராலி வடக்கைச் சேர்ந்த த.நடேஸ்வரன் என்பவரே, கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வாள்வெட்டுக்கு இலக்காகியிருந்தார். அவர் மிகக் கடுமையாகக் காயமடைந்தி ருந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். பின்னர் சாதா ரண விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் களைக் காப்பாற்றுவதற்கு பொலிஸார் முயற்சிப்பதாக த.நடேஸ்வரன் குற்றம் சுமத்துகின்றார். இது தொடர்பில் அவர், அவரது மனைவியூடாக முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது:-

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி அதி காலை இரண்டு மணியளவில் எமது வீட்டு வளவுக்குள் அத்துமீறிய மூவர், வீட் டுக் கதவைப் பிரித்து உள்நுழைய முயன் றனர். அந்த நேரம் நித்திரையில் இருந்த நான் விழித்தெழுந்து திருடன் என்று நினைத்து வெளியில் வந்தேன்.

வெளியில் நின்ற மூவரில் ஒருவன் என் மீது கோடரியினால் நெஞ்சில் கொத்திய பின்பு ஓடித் தப்பினான். அந்த மூவரையும் நான் நன்கு இனம் கண்டு கொண்டேன். அவர்களை எனக்குத் தெரியும். இவ்வாறு என்னைத் தாக்கியவர் மற்றும் அவருடன் கூடப் பயணித்தவர்கள் தொடர்பில் உட னடியாகவே வட்டுக்கோட்டைப் பொலிஸா ரிடம் முறையிட்டேன். இருப்பினும் இன்று வரை ஒருவரை மட்டுமே கைது செய்த பொலிஸார், ஏனைய இருவரையும் தப் பிக்க வைக்கும் நோக்கில் செயற்படுகின் றனர்.

கோடரியினால் நெஞ்சில் கொத்தப்பட்ட நிலையில் இருக்கும் என்னிடம் வந்து ஒரு வரை மட்டுமே தெரியும் என்று ஒப்பமிட்டுத் தருமாறு வற்புறுத்துகின்றனர். என்னைக் கொத்தியவனுடன் நான் கடமையாற்றும் பாடசாலையின் அதிபரும், எனது வீட்டுக் குள் வந்ததை நான் நன்கு அவதானித் தேன். தற்போது அவர் வரவில்லை எனப் பொலிஸார் கூறுவது எமக்குப் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது. எனவே இதில் உரிய தரப்பினர் தலையிட்டு எனக்கு நீதி கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என முறைப்பாட்டில் தெரிவித் துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் கைத்தொலைபேசிக்கு அழைப்பை ஏற்படுத்தியபோது, இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் மாத் திரமே. அவர் கைது செய்யப்பட்டுத் தற் போது விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக் கின்றார் என்று குறிப்பிட்டார்.

வைத்தியசாலையில் சென்று பாதிக்கப் பட்டவரை மிரட்டிப் பொலிஸார் ஒப்பமிடக் கோரியதாகத் தெரிவிக்கப்படுவது தொடர் பில் அவரிடம் கேட்டபோது, நான் தான் நேரடியாகச் சென்றேன். வைத்தியசாலை பொது இடம். அங்கு வைத்து யாராவது மிரட்ட முடியுமா? – என்றார்.

இதேவேளை, பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொலிஸார் பக்கச்சார்பாகச் செயற்படுவதாகத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பிராந்தியக் கிளையில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்த முறைப்பாட்டுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் 7 தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற் றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக் கும், யாழ்ப்பாணம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள் ளது. அத்துடன் பாதிக்கப்பட்ட நபரிடம் வைத்தியசாலைக்குச் சென்று நேரடியாக வாக்குமூலம் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்தார். (த-வ-5-101-ரி4)

## வலி.வடக்கு

றிருந்தது. இந்தக் கலந்துரையாடலில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக் களின் சொந்தக் காணிகள் உயர்பாது காப்பு வலயத்தினுள் எங்கே அமைந்தி ருக்கின்றன என்பதை அடையாளப்படுத்தி சமர்ப்பிக்குமாறு பணித்திருந்தார்.

இதற்கமைய நேற்று வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்து ரையாடல் இடம்பெற்றது. இதில் ஜனாதி பதி செயலாளர் அபயக்கோன் தலைமை தாங்கி நடத்தினார். இந்தக் கூட்டத்துக்குப் பாதுகாப்புத் தரப்பினர் அழைக்கப்பட்டி ருக்கவில்லை. மீள்குடியேற்ற அமை ச்சின் அதிகாரிகள், யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகள் அழைக்கப்பட்டி ருந்தனர்.

நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக் கள் மாத்திரம் வலி.வடக்கிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள் அல்ல. நலன்புரி நிலையங்களுக்கு வெளியேயும் இடம் பெயர்ந்த மக்கள் வசிக்கின்றனர். நலன் புரி நிலையங்களில் தங்கியுள்ள மக் களின் காணிகளை மாத்திரம், உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடையாளப் படுத்த நடவடிக்கை மேற்கொள்ளும் போது, நலன்புரி நிலையங்களுக்கு வெளியே தங்கியுள்ள மக்கள் முரண் படுகின்றனர்.

நலன்புரி நிலையங்களில் உள்ள மக் களை மாத்திரம் குடியமர்த்தி விட்டு, பின் னர் எங்களை மறந்து விடுவார்கள். எங் களை அரசு குடியமர்த்தாமல் விட்டு விடும். எங்களையும் சொந்த இடங்களில் குடியமர்த்தவேண்டும் என்று நலன்புரி நிலையங்களுக்கு வெளியில் தங்கியுள்ள மக்கள் அழுத்தம் கொடுக்கின்றனர். எனவே இதனையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எஞ்சிய காணிகள் அனைத்தையும் மக் களிடம் கையளிக்கவேண்டும். ஏனெ னில், மக்கள் தங்கள் காணிகள் விடுவிப் பதற்கு இராணுவத்தினர் தடையாகவுள் ளனர் என்ற செய்தி வந்தமையினால் அதற்கு எதிர்ப்பு வெளியிட்டுள்ளனர். எனவே சகல காணிகளையும் விடுவிக்க வேண்டும் – இவ்வாறு ஜனாதிபதியின் செயலாளரிடம் யாழ்.மாவட்டச் செயலக அதிகாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-வ-5)

## மாங்குளம்

இந்த விபத்து மாங்குளம் ஒலுமடுப் பகுதி யில் நேற்று இடம்பெற்றது. விபத்தில் புலுமச்சி நாதகுளத்தினைச் சேர்ந்த செல்லையா தங்கவேல் (வயது – 48) என் பவரே உயிரிழந்தார்.

அம்பகாமம் புலிமச்சிநாதகுளம் பகுதி யில் இருந்து மாங்குளம் நோக்கி மோட் டார் சைக்கிளில் பயணித்த வேளை, வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் உள்ள மதகுடன் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்து தொடர்பில் மாங்குளம் வைத்தி யசாலைக்கு வழங்கப்பட்ட தகவலைய டுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த அம் புலன்ஸ், படுகாயமடைந்து அசைவற்றுக் கிடந்தவரை மீட்டு மாங்குளம் வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றது. அங்கு பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

உயிரிழந்தவரின் சடலம் மாங்குளம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பில் மாங்குளம் பொலி ஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-வ-4-101-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் உப அதிபர் **திருமதி யோகேஸ்வரி இரட்ணராஜா** அவர்களின் அன்புச் சகோதரனும் எமது பாடசாலையின் நலன்விரும்பியுமான

**மாணிக்கம் சுப்பிரமணியம்**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றி ருக்கும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துக் கொள்கின்றோம்.

**யா/ உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்,**
**ஆனைக்கோட்டை** **பாடசாலைச் சமூகம்,**

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி புஸ்பவதி சண்முகம்



யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, **ச.இராஜேஸ்வரன்** (நதியா) **ச.ஜெகதீஸ்வரன்** (புதிய நதியா) ஆகியோரின் அன்புத் தாயார்

**திருமதி**
**புஸ்பவதி சண்முகம்**

அவர்கள் இறைபதம் எய்திய செய்தி கேட்டு கன்னாதிட்டி காளிகோயில் நிர்வாகத்தினரும், தொண்டர்களும் ஆழ்ந்த துயரத்தில் வருந்துகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளை வேண்டிநிற் கின்றோம். ஓம் சாந்தி!

**நிர்வாகசபையினரும், தொண்டர்களும்,**
**காளி கோவில், கன்னாதிட்டி.**

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | | ஆண்டவன் அடியில் |
|---|---|---|
| 07 . 01 . 1976 |  | 08 . 06 . 2013 |

### அமரர் சீவரத்தினம் தவசேகரன்

(Electrician யாழ் கொக்குவில் தொழிநுட்பக் கல்லூரி)
திதி: 04.06.2016

**ஆண்டுகள் மூன்று கடந்தன அப்பா!**
**ஆறவில்லை எம் மனங்கள்**
**தேடுகின்றோம் நித்தம் உங்களை நிந்திலத்தில்**
**எம்மை அன்போடு அரவணைத்த எம்**
**அப்பாவை நித்தமும் நினைத்து கண்ணீர்**
**சொரிந்து நிற்கின்றோம்.**

**குமரகோட்டம்,கோண்டாவில்.** **குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி பாக்கியம் வீரசிங்கம்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், விடத்தற்பளை மிரு சுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் வீரசிங்கம் 02.06.2016 வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், வீரசிங்கத்தின் அன்பு மனைவியும், விக்கினேஸ்வரன், பாக்கியலீலா, இரஞ்சிதமலர், இந்திராணி, யோகராணி, திருச்செல்வம் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கமலாவதி, கதிர்காமர், யோகசுந்தரம், அருந்தவராசா, இராஜமனோகரன், தேவகி ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரஞ்சன், கௌசிகா, காலஞ்சென்ற கவிதா மற்றும் யசிந்தா (பிரான்ஸ்), றூபனா ரேணுகா கபில்ராஜ் (சுவிஸ்), யசோதா, பமீதன், கிருபா (சுவிஸ்), கீர்த்தி(சுவிஸ்), டயானி, தனபாலன், மயூரன், பரஞ்சோதி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தக்சிகா, சுயன், சியானி, நிருஜா, சயினிகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சம்பாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(c/46) (11.17.18)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## விழிநீர் சொரிகின்றோம்

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 28 . 01 . 1940 |  | 02 . 06 . 2016 |

கொக்குவில் மேற்கின் கொடை வள்ளலாகிய

**திரு. மாணிக்கம் சுப்பிரமணியம்**

அவர்களின் திடீர் மறைவு கொக்குவில் சமூகத்தை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகப் பெருமானுடைய பாதார விந்தங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**மஞ்சவனப்பதி முருகப் பெருமான் ஆலயத்திற்கு அன்னாரின் சேவைகள்**

- ஆலய நுழைவாயிலில் அலங்கார வளைவு அமைத்துத்தந்தமை.
- கல்யாண மண்டபம் கட்டுவதற்காக காணி ஒன்று சொந்த செலவில் கொள்வனவு செய்தமை.
- ஆலயத்திற்கென தனது சொந்தச் செலவில் கல்யாண மண்டபம் ஒன்றை அழகுற அமைத்துத்தந்தமை.

அன்னாரின் சேவைகள் இன்னும் பல....

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**தர்மகர்த்தா சபை**
**மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,கொக்குவில்.**

### கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று


கரணவாய், ஜூன் 4

கரவெட்டிப் பிரதேச செயலக ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பிரதேச செயலக மநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப் புக்குழு இணைத்தலைவர்களான மகளிர் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சி.அகிலதாஸ் ஆகியோரின் இணைத் தலைமையில் இடம் பெறும் இந்தக் கூட்டத்தில், பிரதேசத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

(த-ஐ-108)

## 36 ஆவது பிறந்தநாளில் எட்டாம் ஆண்டு நினைவலைகள்



### யோகரட்ணம் கீதன்
### (Ceylinco Insurance)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 04.06.1980 | 31.05.2008 |

"2008 ஆண்டது சர்வதாரி வைகாசி சனிதனில்
பூண்ட துவாதசி திதி மேவ - மாண்பு நிறை
பண்பாளன் கீதன் அவன் நின்பாதம்
தானடைந்தான் கடன் முடித்தே காண்"

நிழலாய்ப் போன நிஜங்களில் இன்னமும்
- எம்மைத் தொலைத்தபடி
நிகழ்வோடு ஒட்டாமல், சகித்துச் சலித்த ஒரு வாழ்க்கை
இது வாழ்க்கையல்ல.......? வாழ்வதற்குரியதுமல்ல
எனினும் வாழ்கிறோம் - ஏன் என்று புரியவில்லை

நீயோ ஆலமரம். உன் விழுதுகளே உன் தங்கைமார். தெய்வ சக்தி கண்ணுக்குத் தெரியாது ஆனால் உணரப்படும். அதுபோலவே இன்று இப் பாவ உலகில் நீ உடம்பன்று, மனமன்று,புத்தியன்று சித்த மன்று, நீ ஆத்மா. உன் ஆத்மாவை ஒரு நாளும் தீய சக்திகளால் அழிக்கமுடியாது. இறைசக்தியோடு உன் ஆத்ம சக்தியையும் ஒன்று சேர்த்து தெய்வத் திருமகனாய் உன் குடும்பத்தினரை வழிநடத்த வேண்டும் என உன்னிடமே இறைஞ்சும் உன்

**குடும்பத்தினர்**
"யோகீத்தா வாசம்"
18/1, காட்டுக் கந்தோர் ஒழுங்கை,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(J.1823)(13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2017 ஆம் ஆண்டில் 24 நாள்கள் மாத்திரமே பொது விடுமுறை

கொழும்பு, ஜூன் 4

2017 ஆம் ஆண்டுக்கான அரச மற்றும் வங்கி விடுமுறைத் தினங்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது. இதனடிப்படையில், 2017 ஆம் ஆண்டில், 24 நாள்கள் மாத்திரமே பொது விடுமுறைத் தினங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் வருடம் ஒன்றுக்குப் பொது விடுமுறை நாள்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. இதனால், பொருளாதாரம் பாதிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகப் பொருளாதார நிபுணர்கள் ஏற்கனவே கருத்து வெளியிட்டிருந்தனர்.

ஆசிய நாடுகளில், இலங்கையிலேயே வருடம் ஒன்றுக்கு அதிக விடுமுறைகள் வழங்கப்படுகின்றன. சிங்கப்பூரில் 13 நாள்களும், ஜப்பானில் 17 நாள்களும், இந்தோனேஷியாவில் 19 நாள்களும், தாய்லாந்தில் 20 நாள்களும் மாத்திரமே பொது விடுமுறைத் தினங்களாகக் காணப்படுகின்றன. அத்துடன், அமெரிக்காவில் 9 நாள்களும், ஆஸ்திரேலியாவில் 10 நாள்கள் மாத்திரமே பொது விடுமுறைகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ஐ-5)

# வரி அதிகரிப்பினால் மக்களுக்குப் பாதிப்பு

## அரசு இதனை ஏற்கிறதாம்

கொழும்பு, ஜூன் 4

வற் வரி அதிகரிப்பு மக்களைப் பாதித்துள்ளது என்பதை அரசு ஏற்றுக் கொள்வதாக, பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹர் டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச சமூகத்தின் அழுத்தங்களில் இருந்து நாட்டை அரசு காப்பற்றியுள்ளது. சர்வதேச சமூகத்தின் செல்வாக்கால் நாடு பாதிக்கப்படுவதைத் தடுப்பதில் முன்னைய அரசு தோல்வி கண்டது.

சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தில் இருந்து நாடு பாதுகாக்கப்படாவிடின், மக்கள் பொருளாதாரத் தடைகளை எதிர்நோக்க நேரிட்டிருக்கும். அத்துடன் உணவு மற்றும் மருந்து இல்லாமல் கூட்டப் பட்டினி இருக்க நேரிட்டிருக்கும்.

எவ்வாறாயினும் இக்கட்டான தருணத்தில் இருந்து நாட்டை மீட்டெடுத்துப் பேச்சு ஊடாகச் சர்வதேச சமூகத்துடனான உறவு மீளக்கட்டியெழுப்பப்பட்டது.

இதேவேளை, அரசின் பிரதான வரிக் கட்டமைப்பின் மூலம் நேரடி வரிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. மறைமுக வரிகள் குறைக்கப்பட்டுள்ளன.

வரிகளைத் தொடர்ந்தும் அதிகரிப்பது அரசின் கொள்கை அல்ல. வற் வரி அதிகரிப்பு மக்களைப் பாதித்துள்ளது என்பதை அரசு ஏற்றுக் கொள்கின்றது. வரி அதிகரிப்புக்கு முன்னர், அத்தியாவசிப் பொருள்களின் விலைகளை அரசு குறைத்ததாகவும், சம்பளத்தை அதிகரித்ததாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (த-ஐ-5)

# சமஸ்கிருத மொழி வகுப்புக்கள் இன்று

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவுள்ள சமஸ்கிருத மொழி வகுப்புக்கள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது என இந்து சமய கலாசார பணிப்பாளர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மூன்று மாதங்கள் தொடர்ந்து சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து மதியம் 12 மணி வரை யாழ். பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள குருகுல மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த வகுப்புக்கு வயதெல்லை கிடையாது என்பதுடன் இலவசமாக நடைபெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-ரி)


## மரண அறிவித்தல்



திருமதி
**புஸ்பவதி சண்முகம்**

மண்கும்பான் மேற்கு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 321, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பவதி சண்முகம் கடந்த (02.06.2016) வியாழக் கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**321, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**
**021 222 3479**

தகவல்: **குடும்பத்தினர்.**
**நதியா நகைமாடம்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
20 . 04 . 1931



இறப்பு
03 . 06 . 2016

### திருமதி மகேஸ்வரி இரத்தினம்

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி இரத்தினம் நேற்று (03.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கந்தையா-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்காளான கந்தையா - மீனாட்சி தம்பதியரின் அன்பு மருமகளும், விக்னேஸ்வரி (கனடா), ரஞ்சிதமலர், காலஞ்சென்ற ஶ்ரீதரன் மற்றும் உதயகுமார், ஜெயக்குமார் (ஜெயந்தா மில், இணுவில்), செல்வகுமார் (துர்க்கா மிக்சர், கோண்டாவில்), காலஞ்சென்ற ராகினி மற்றும் ரஜனி, சதீஸ்குமார் (பராசக்தி மில் கொக்குவில்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சரஸ்வதி, செல்வசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப் பிர மணியம் (கனடா), சந்திரசேகரம், பத்மாவதி, ஈஸ்வரி, சாந்தினி, பாலச்சந்திரன் (பாலா மில் மானிப்பாய்), சுமதி ஆகியோரின் அன்பு மாமியும், மிறேஸ்குமார், லக்சன், சாகித்தியா, ஜெனனி ஆகியோரின் அப்பம்மாவும், வரதன் (லண்டன்), கல்பனா (கனடா), சசி கரன், கிருபாகரன் (லண்டன்), தனுசன், தர்சன் ஆகியோரின் அம்மம்மாவும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று காலை 9.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் வீதி,**
**1 ஆவது ஒழுங்கை,**
**மானிப்பாய், யாழ்ப்பாணம்.**

தகவல்: **குடும்பத்தினர்.**
**021 222 5171, 077 285 0412,**
**077 201 7807.**

## மரண அறிவித்தல்கள்

திருமதி **சொர்ணம் தங்கராசா**



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் 72, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சொர்ணம் தங்கராசா நேற்று (03.06.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கராசாவின் அன்பு மனைவியும், மாணிக்கவாசக ரின் அன்புத் தாயாரும், கனகாம்பிகையின் (இணுவில்) மாமியும், கஜலக்ஷி (யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்), சயந்திகா ஆகியோ ரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) காலை 7.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**த. மாணிக்கவாசகர்.**
**077 662 7047**

### திருமதி கலைச்செல்வி சச்சிதானந்தம்



நெடுந்தீவைப் பிறப்பிட மாகவும் கொழும்பை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி கலைச்செல்வி சச்சிதானந்தம் கடந்த (01.06.2016) புதன் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான இராமலிங்கம்-திரவியம் தம்பதியரின் மருமகளும் சச்சிதானந்தம் (ஓய்வு பெற்ற நீர்ப்பாசனத் திணைக்களம்-வவுனியா) அவர்களின் அன்பு மனைவியும் அன்புரூபனின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக ளுக் காக கிருளப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.


இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**46, மகாவில**
**பிளேஸ், கிருளப்பன.**
**கொழும்பு-06.**

தகவல்:
**இ.சச்சிதானந்தம் (கணவர்)**
**011 282 0866**

### செல்லப்பா லோகநாதன்

(ஓய்வு பெற்ற பிரதம லிகிதர், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்)



சுழிபுரம் கிழக்கு, வீரபத்திரர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா லோகநாதன் அவர்கள் நேற்று (03.06.2016) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும், காலஞ்சென்றவர்களான சபாபதி - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் நாகேந்திரம், காலஞ்சென்ற புஸ்பகுணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தவமணியின் அன்புக் கணவரும், சுகுமார் (சவுதி அரேபியா), காலஞ்சென்ற நந்தகுமார் மற்றும் சிவ குமார் (கனடா), அசோக்குமார் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணி மனை, வவுனியா), கருணாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், புஷ்பராணி (ஆசிரியை, யா/பண்ணாகம் மெய்கண் டான் மகாவித்தியாலயம்), இந்திரா, கோகில வதனி (கனடா), கோகிலதேவி (முகாமை இயக்குனர், கோபிதன் காமென்ட்ஸ் பிறைவேட் லிமிடெட்), காலஞ்சென்ற அஜந்தன் ஆகியோரின் மாமனும், சுதர்சன், பிரியதர்சன், திருக்குமரன், ஆர்த்திஜா, அனோஜா, கோபிதன், அபிதன், அபர்ணன், அருளகன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
**அசோக்குமார் - 077 670 3234,**
**சுகுமார் - 077 814 9355**

தகவல்:
**குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆமிரின் வருகை வரவேற்கத்தக்கது

–ரிச்சட்சன்




ஆட்ட நிர்ணயச் சூதாட்டத்தில் தடை விதிக்கப்பட்ட பாகிஸ்தானின் இளம் வீரரான ஆமிர், மீண்டும் களமிறங்க அனுமதிக்கப்பட்டமையும், அதிலும் குறிப்பாக இங்கிலாந்துக்கு எதிராக சேர்க்கப்பட்டமையும் வரவேற் கத்தக்கது என்று கருத்துத் தெரிவித்துள்ளார் சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவரான ரிச்சட்சன்.

இங்கிலாந்துக்கு எதிரான தொடரிலேயே ஆமிர் ஆட்ட நிர்ணயத்தில் ஈடுபட்டார். குற்றம் உறுதிபடுத்தப்பட்ட பின்னர் 5 வருடம் தடை விதிக்கப்பட்டு தற்போது மீண்டும் களமிறங்கியுள்ளார். பாகிஸ்தான் அணி அடுத்ததாக இங்கிலாந்துக்குச் செல்லவுள்ளது. இதனால் ஆமிருக்கு பழைய நினைவுகள் மூலம் அழுத்தங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையிலேயே ரிச்சட்சன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில் – ஒரு விடயத்தில் தண்டனை வழங்கப்பட்டு, அக்காலத்தை நிறைவு செய்த பின்னர், அது தொடர்பாக வாதிடுவது சிறப்பானதன்று. தனது தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளுமாறு இளைய வீரர்களைக் கேட்டுக்கொண்டதன் மூலம், சிறந்த உதாரணமாக இருப்பதற்கு அவர் விரும்பியுள்ளார். அவர் மீண்டும் விளையாடுவது சிறப்பானது. இங்கிலாந்துத் தொடரில் ஆமிருக்கு அழுத்தங்கள் ஏற்படலாம் என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அவர் தனது கடந்த காலங்களை மறக்க வேண்டும். அப்போதுதான் அவரது எதிர்காலம் கச்சிதமாய் அமையும் – என்றார். (ம)

# இந்தியாவும் பாகிஸ்தானும் திட்டமிட்டே சேர்க்கப்பட்டன

இங்கிலாந்தில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் தொடரில் இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரே பிரிவில் சேர்க்கப்பட்டமையானது திட்ட மிட்டே நடைபெற்றது என சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவர் டேவிட் ரிச்சட்சன் தெரிவித்துள்ளார்.

சமீப காலமாக இரு அணிகளும் ஒரே பிரிவில் இடம்பெறுவது இது ஐந்தாவது முறையாகும். உலகக்கிண்ணத் தொடரிலும், ரி–20 உலகக்கிண்ணத் தொடரிலும் கூட இரு அணிகளும் ஒரே பிரிவில்தான் இடம்பெற்றிருந்தன. இந்த நிலையில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள சம்பியன்ஸ் லீக் தொடரில் ஜூன் நான்காம் திகதி இரு அணிகளும் மோதவுள்ளன. இது ரசிகர்களிடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் ஒரே பிரிவில் இடம்பெற்றமை தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவரான ரிச்சட்சன் தெரிவிக்கையில் – சந்தேகமே வேண்டாம். வேண்டும் என்றேதான் நாங்கள் இரு அணிகளையும் ஒரே பிரிவில் சேர்த்துள்ளோம். இரு அணிகளும் மோதும்போது அது முக்கியத்துவம் பெறுகிறது. பெரும் பிரபலம் ஆகிறது. ரசிகர்களும் அதிக அளவில் மைதானத்துக்கு வருவார்கள். சர்வதேச அளவில் இந்த இரு அணிகளும் மோதும் ஆட்டங்களுக்கு நல்ல வரவேற்பும் கிடைக்கிறது. – என்றார். (ம)




## சதுரங்கத் தொடரின் முடிவுகள்

கரணவாய், ஜூன் 4

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு நடத்திய சதுரங்கத் தொடரில் பங்குபற்றி வெற்றிபெற்ற வீர வீராங்கனைகளது விவரம் வருமாறு.

பெண்கள் பிரிவில் முதலாமிடத்தை நல்லூர் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஏ.வானதியும் இரண்டாமிடத்தை யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ். சுமித்திராவும் மூன்றாமிடத்தை உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜி.கலையரசியும் நான்காமிடத்தை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.தரகாவும் ஐந்தாமிடத்தை கோப்பாய் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த வி.பிரவீனாவும் தமதாக்கினர்.

ஆண்கள் பிரிவில் முதலாமிடத்தை பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஜ்.நிர்மலராஜாவும் இரண்டாமிடத்தை அதே பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஆர்.மதுசனும் மூன்றாமிடத்தை உடுவில் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த ஜி.யூட்டொறிசனும் நான்காம் ஐந்தாமிடங்களைப் பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தைச் சேர்ந்த எஸ்.ஆனந்தசேயோன் மற்றும் கே.மகிந்தன் ஆகியோரும் தமதாக்கினர். (ம–108)

## போராடி வென்றது சக்தி

கரணவாய், ஜூன் 4

வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சக்தி அணி வெற்றிபெற்றுள்ளது.

தொடர் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றது. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் ஈகிள்ஸ் அணியை எதிர்த்து சக்தி அணி மோதியது. இதில் சக்தி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம–23)

## மாகாணமட்ட போட்டிகளின் திகதிகளில் மாற்றங்கள்

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் சிலவற்றின் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி இந்த மாதம் 18ஆம், 19ஆம், 20ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த 17வயது, 19வயது பிரிவு ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி, சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானங்களில் நடைபெறும்.

இந்த மாதம் 13ஆம், 14ஆம், 15 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய கல்லூரியில் நடைபெறவிருந்த 15வயது, 17வயது, 19 வயது கரப்பந்தாட்டத் தொடர் அடுத்த மாதம் 9ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் நடைபெறும். மைதானத்தில் மாற்றம் செய்யப்படவில்லை.

கடந்த மாதம் 20ஆம் திகதி நடைபெறவிருந்த 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான எல்லே தொடர் இந்த மாதம் 26ஆம், 27ஆம், 28ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் நடைபெறவுள்ளது. 19வயது பிரிவு ஆண்களுக்கான எல்லே தொடர் அடுத்த மாதம் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

ஏனைய போட்டிகள் யாவும் திட்டமிட்டபடி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம–23)

## சித்திவிநாயகர் கழகத்தின் விளையாட்டு விழா இன்று

கரணவாய், ஜூன் 4

வவுனியா புதுக்குளம் சித்திவிநாயகர் விளையாட்டுக் கழகத்தின் 68ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தத் திட்டமிட்ட விளையாட்டு விழா இன்று ஆரம்பமாகின்றது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வீரர்கள் பங்குபற்றும் 115 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி, வடக்கு, கிழக்கு மாகாணங் களைச் சேர்ந்த அணிகள் பங்கு பற்றும் கரப்பந்தாட்டத் தொடர், வவுனியா மாவட்ட வீர வீராங்கனைகள் பங்குபற்றும் மரதன் ஓட்டப் போட்டி மற்றும் பாரம்பரிய போட்டிகள் என்பன இடம்பெறவுள்ளன. (ம–23)

## சென்றலைட்ஸ் – ஸ்ரான்லி காலிறுதியில் இன்று மோதல்



கரணவாய், ஜூன் 4

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் 30 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரின் இரண்டாவது காலிறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஸ்ரான்லி அணி மோதவுள்ளது. யாழ். இந்துக் கல்லூரியின் மைதானத்தில் பிற்பகல் 1.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம–23)

# விளையாடும் பதினொருவரில் சமிந்த பண்டாரவுக்கு வாய்ப்பு

லோட்ஸில் நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் இலங்கை பதினொருவர் அணியில் வேகப்பந்து வீச்சாளரான சமிந்த பண்டாரா இணைக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் போது துஸ்மந்த சமீர காயமடைந்தார். இதனால் அவருக்கு பதில் வீரராக யாரை இணைப்பது என்ற சிக்கல் இருந்து வருகிறது. சமீர பதில் வீரராக இணைக்கப்பட அதிக வாய்ப்புக்கள் உள்ளதாகவும் கருதப்படுகிறது. இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் ஆரம்பமாவதற்கு இரண்டு நாள்களுக்கு முன்பாக இங்கிலாந்துக்குச் சென்று இலங்கை வீரர்களுடன் இணைந்திருந்தார் சமீர. பிரசாத்துக்குப் பதிலான மாற்றுவீரராக அவர் இணைக்கப்பட்டிருந்தாலும் அணியுடனும் ஆடுகளத்துடனும் இசைவாக்கம் அடையாத காரணத்தால் மத்தியூஸ் இரண்டாவது டெஸ்ட்டில் அவருக்கு வாய்ப்பு வழங்கவில்லை. ஆனால் கிட்டத்தட்ட இரு வாரங்கள் அவர் இங்கிலாந்தில் தங்கி விட்டதாலும் ஏனைய வீரர்களின் அனுப[illegible] ஆட்டத்தில் சமிந்தவைக் களமிறக்கவே மத்தியூஸ் தயாராக இருப்பதாக அறியவருகிறது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 4

**இலங்கை கிரிக்கெட் சபையின் தொடர்**

மன்னார் கிரிக்கெட் சங்கம் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் மடு பிரதேச செயலக மைதானத்திலும், அடம்பன் பிரதேச சபை மைதானத்திலும் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை அடம்பன் பிரதேச சபை மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறின்பீல்ட் அணியை எதிர்த்து இந்துமுன்னணி அணி மோதவுள்ளது. மடு பிரதேச சபை மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முத்தமிழ் அணியை எதிர்த்து சென்.அன்ரனிஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.க. தொடர்**

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழகம் நடத்தும் காட்சி கால்பந்தாட்டம் ஒன்று யாழ்ப்பாண இராணுவ அணிக்கும் பருத்தித்துறை மற்றும் வடமராட்சி தெரிவு அணிக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ளது. வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகளின் மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும்.

**யங்ஹென்றிஸ் வி.க. தொடர்**

யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை சென்.ஹென்றிஸ் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் டயமன்ஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது.

**வவு. கால்பந்தாட்டச் சங்கத்தின் தொடர்**

வவுனியா கால்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சிறுவர் பூங்கா மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அல் இக்பால் அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் யுனி பைட் அணியை எதிர்த்து கோல்டன் பிரதேர்ஸ் அணி மோதவுள்ளது. (ம-422-108-23)



# கால்பந்தாட்டத்தைத் தவிர வேறொன்றும் தெரியாது

## நீதிமன்றில் மெஸ்ஸி உருக்கம்

ஆர்ஜென்ரீனா அணியின் தலைவரும் பார்சிலோனா கழகத்தின் நட்சத்திர வீரருமான மெஸ்ஸி பண மோசடியில் ஈடுபட்டமை அம்பலமானதையடுத்து அவர் மீது பார்சிலோனா நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றுக்கு நேற்றுமுன்தினம் வருகைதந்த மெஸ்ஸி, தனக்கு கால்பந்தாட்டத்தைத் தவிர வேறொன்றும் தெரியாது என்று தெரிவித்துள்ளார்.

மேலும் தெரிவிக்கையில்; எனது வருமானம் என்னவென்றே எனக்குத் தெரியாது. இன்னும் சொல்லப்போனால் கால்பந்தாட்டத்தைத் தவிர வேறொன்றிலும் கவனத்தைச் செலுத்துவதில்லை. ஆர்ஜென்ரீனா, பார்சிலோனா அணிகளுக்கு இடையே சுற்றித்திரியவே எனது காலங்கள் சரியாகிவிடுகின்றன. சிறிய உதாரணமாக இந்த வருடத்தை எடுத்துப் பாருங்கள். இரு வாரங்களுக்கு முன்னர்தான் லா லிகா தொடர் முடிவடைந்தது. அதற்குள் கோபா அமெரிக்கத் தொடர் வந்துவிட்டது. எனவே ஒரு வாரத்துக்கு முன்பாக ஆர்ஜென்ரீனா அணியுடன் இணைந்து விட்டேன். மொத்தத்தில் ஓய்விலிருந்தது ஒரு வாரங்கள் மட்டுமே. கடந்த ஐந்து மாதங்களில் இந்த ஒரு வாரம் மட்டுமே ஓய்விலிருந்துள்ளேன். இதற்குள் வரவு – செலவுகளை எவ்வாறு பார்த்துக்கொள்வது.

இடையிடையே கிடைக்கும் ஓரிரு நாள் இடைவெளிகளை விளம்பர நிறுவனங்கள் பிடித்து விடுகின்றன. மேலும், விளம்பரம் ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது, தவிர எனது வங்கி கணக்கு, வரவு-செலவு என அனைத்தையும் தனது தந்தை மற்றும் சட்டத்தரணிகளை கவனிக்கின்றனர். எனது தந்தை மற்றும் சட்டத்தரணிகளை மிகவும் நம்புகிறேன். இதனால் வரவு – செலவுகளை அவர்களிடத்திலேயே விட்டுவிட்டேன் – என்றார்.

குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் மெஸ்ஸிக்கும் அவரது தந்தைக்கும் 22 மாதங்கள் சிறைத் தண்டனை கிடைக்க வாய்ப்புக்கள் உள்ளன. தவிர மோசடியில் ஈடுபட்ட தொகைக்கு நிகராக அபராதம் விதிக்கவும் வாய்ப்புக்கள் உள்ளன. (ம)

# இம்மாதம் நடுப்பகுதியில் செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

யாழ். கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆரம்பக் கல்வி (தரம் 3, தரம் 4) மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இந்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறவுள்ளது.

கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணத்தால் கல்வி அமைச்சின் அறிவித்தலுக்கமைய இந்தப் போட்டி பிற்போடப்பட்டது. தற்போது சீரான காலநிலையைத் தொடர்ந்து இந்த மாதம் நடுப்பகுதியில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகள் தமது பயிற்சிகளை மேற்கொண்டு போட்டியில் கலந்துகொள்ளுமாறு யாழ். கல்வி வலய ஆரம்பக்கல்வி உடற்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவகாந்தி அறிவித்துள்ளார். (ம-422)

# ஞானமுருகன் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஆட்டத்தின் ஆரம்பத்தில் ஞானமுருகன் அணி தனக்குக் கிடைத்த வாய்ப்புக்களை தவறவிட்டபோதிலும், பின்னர் கிடைத்த சந்தர்ப்பங்களைச் சரியாகப் பயன்படுத்தி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. ஆட்டநாயகனாக ஞானமுருகன் அணியின் ஜெகன் தெரிவானார். (ம-23)

# அன்ரனிஸ் அபாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 4

மன்னார் கால்பந்தாட்ட லீக்கும் ஜோசவாஸ்நகர் யுனைற்ரெட் விளையாட்டுக் கழகமும் இணைந்து நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்.அன்ரனிஸ் அணி வெற்றிபெற்றுள்ளது.

யுனைற்ரெட் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பனங்கட்டுக்கொட்டு சென்.ஜோசப் அணியை எதிர்த்து அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி மோதியது. இதில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனிஸ் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சென்.லூசியா அணிக்கும் விடத்தல் தீவு ஐக்கிய அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் எதையும் பதிவு செய்யாததையடுத்து சமநிலையில் முடிவடைந்தது. (ம-23)


# தடகளத் தொடர்

கரணவாய், ஜூன் 4

யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பரிவு பிரதேச செயலகங்களுக்கு இடையில் தடகளத் தொடர் ஒன்றை இன்று நடத்தவுள்ளது.

யாழ். மத்திய கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்தத் தொடர் இன்றும் நாளையும் காலை 7 மணிமுதல் நடைபெறும். (ம-422-108-23)

# "கவலையில்லை"



சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் தங்கள் பிரிவில் இடம்பெற்றிருக்கும் அணிகளை பற்றி கவலைப்படவில்லை என்று இந்திய அணித்தலைவர் டோனி கூறியுள்ளார்.

8 நாடுகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் அடுத்த வருடம் இங்கிலாந்தில் நடைபெறவுள்ளது. இதில் ஒரே பிரிவில் இலங்கை, தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் அணிகள் இடம்பெற்றுள்ளன. இந்தத் தொடரை இலங்கை அணித் தலைவர் மத்தியூஸ் சவாலானது என்று குறிப்பிட்டிருந்தார். தற்பொழுது இந்திய அணித்தலைவர் டோனி எதிரணிகளிடத்தில் கவலையில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

சம்பியன்ஸ் லீக் தொடர்பாக டோனி தெரிவிக்கையில் – லீக் பிரிவில் எம்முடன் இடம்பெற்றிருக்கும் பாகிஸ்தான், இலங்கை, தென்னாபிரிக்கா அணிகளைப் பற்றிக் கவலைப்படவில்லை. அரையிறுதி, இறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றால் எந்த அணிகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்றும் சிந்திக்கவில்லை. 2013ஆம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத்தை வென்ற வகையில் இந்தத் தொடர் எவ்வளவு தீவிரமானது என்பதை மட்டும் அறிந்திருக்கிறோம் – என்றார். (ம)

# குறிஞ்சிக்குமரன், விண்மீன் முன்னேற்றம்

கரணவாய், ஜூன் 4

இமையாணன் மத்தியின் கால்பந்தாட்டத் தொடரில் வலிகாமம் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகம் என்பன சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளன.

**குறிஞ்சிக்குமரன்-நக்கீரன்**

இமையாணன் மத்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வலிகாமம் குறிஞ்சிக்குமரன் அணியும் அல்வாய் நக்கீரன் அணியும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் ஆறாவது நிமிடத்தில் குறிஞ் சிக் குமரனின் சொசோய் மரி போனாய் முதல் கோலைப் பதிவு செய்தார். அடுத்த நிமிடத்தில் நக்கீரன் அணியின் வீரர் ஜெனோசன் பதிலடி கொடுக்க நிலைமை 1:1. முடிவுக்கு வந்தது முதல்பாதி. ஆட்டம் நிறைவடைய இரு நிமிடங்கள் இருந்த வேளையில் – சொசோய் மீண்டும் ஓர் கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது குறிஞ்சிக் குமரன்.

**விண்மீன் - விக்னேஸ்வரா**

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியும் புத்தூர் விக்னேஸ்வரா அணியும் மோதின. ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவுசெய்ய, சமநிலை தவிர்ப்பு உதையில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 சுற்றுக்குத் தகுதி பெற்றது விண்மீன். (ம-108)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**British College of Higher Studies**
BCHS
வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்

Settlement Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS *Life Skills*
வடக்கு மாகாணத்திலேயே அதிகப்படியான மாணவர்களை பயிற்றுவித்து பரீட்சையிலே அனைவரையும் வெற்றிபெறச் செய்யும் ஒரேயொரு நிறுவனம்.
100% பயிற்சி → 100% வெற்றி

Student, Migration Visa மூலமாக UK செல்பவர்களுக்கான
IELTS (Academic / General)
ஆரம்பத்தில் பயில சிரமப்படுபவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகள் மூலமாக கற்றல் பயிற்சிகள் வழங்கப்படும்

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

No.15 , Sirambiyady Lane (Off Stanley Road), Jaffna.
(Above Sathosa SM & Near Ariyakulam Junction)
Tel : 021-2224550
Hotlines: 0770365728, 0777585913, 0777222422

**கணக்காய்வாளர் பரீட்சகர் பரீட்சைக்கான வகுப்புகள்**

மேற்படி பரீட்சைக்கான வகுப்புகள் பிரபல ஆசிரியர்களால் வடமராட்சி மற்றும் வடபகுதி மாணவர்களின் நன்மைக்காக நெல்லியடி N.S.B. வங்கியின் மேல்மாடியில் நாளை (05.06.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறும்.
தொடர்பு: 077 876 0992

**ENGLISH PERSONAL CLASSES**
ஆங்கில பிரத்தியேக வகுப்புக்கள்

அனுபவம் மிக்க ஆசிரியர்.
வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்.
தொ.பே.இல: 077 658 9443
யாழ்ப்பாணம்.

# மேரிஸ் - நியூஸ்ரார் இன்று பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 4
இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் முதலாவது பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் காலிறுதி ஆட்டமொன்றில் கொழும்பு நியூஸ்ரார் அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.மேரிஸ் அணி இன்று மோதவுள்ளது. அரியாலை கால்பந்தாட்ட மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறும். (ம-23)

# அரையிறுதியில் ஜோகோவிக்

பிரான்ஸ் ரென்னிஸ் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளார் சேர்பியாவின் ஜோகோவிக். தரப்படுத்தலில் முதலிடத்தில்



உள்ள வீரரான ஜோகோவிக்கை எதிர்த்து மோதினார் பெர்டிச். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6:3 என்ற கணக்கில் இலகுவாகக் கைப்பற்றினார் ஜோகோவிக். ஆனால் இரண்டாவது செற்றில் பெர்டிச் சிறிது போராட்டம் காட்டினார். இருப்பினும் அந்த செற் 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஜோகோவிக் வசமானது. மூன்றாவது செற்றில் ஜோகோவிக் வென்றால் அவர் அரையிறுதிக்குத் தகுதி பெறலாம். மாறாக பெர்டிச் வென்றால் அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் நிலைநாட்டலாம் என்ற நிலை. 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றும் ஜோகோவிக்கின் வசமாக முடிவில் அவர் 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)

**வேலை வாய்ப்பு**
யாழ். நகரிலுள்ள அச்சகத்துக்கு
வேலை தெரிந்தவர்கள் / பழக
விரும்புபவர்கள் தேவை.
077 504 0714

உங்கள் துக்கம் சந்தோஷமாக மாறும். (யோவான் 16:20)
**விடுதலைப் பெருவிழா**

04,05 யூன்
சனி, ஞாயிறு – 2016
இடம் :-
நாற்சதுர சுவிசேஷ சபை
முத்திரைச் சந்தி, நல்லூர்.
தினமும் மாலை 4.30
சிறப்பு சாட்சி–
மனம் மாறிய சினிமா நடிகை
சகோதரி.சாந்தி கனேஷ்–(இந்தியா)
தேவ செய்தி–
சகோதரி.சுகந்தி தங்கேஸ்வரன்
(கிறிஸ்துவின் சுவிசேஷ சபை–இந்தியா)

சினிமா நடிகையின் அனுபவ சாட்சி,
விடுவிக்கும் தேவ செய்தி,
வாருங்கள் ஆண்டவரின்
ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்
அனுமதி இலவசம்

**இலங்கை தமிழ் அரசுக் கட்சி வட்டுக்கோட்டை கிளை அலுவலகத்தின் ஓராண்டு பூர்த்தி நிகழ்வும் க.பொ.த உயர்தர சாதனையாளர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும்**

காலம் : 04.06.2016 சனிக்கிழமை
நேரம் : மாலை 5.00 மணி
இடம் : இலங்கை தமிழ் அரசுக்கட்சி அலுவலகம் அத்தியடிப்பிள்ளையார் கோயில் முன்பாக, வட்டுக்கோட்டை.

தலைமை
**ஈ.சரவணபவன் பா.உ**
மீள்குடியேற்றம், பொருளாதார அபிவிருத்தி துணைச் செயலாளர்
இலங்கை தமிழ் அரசுக்கட்சி
(நிர்வாக இயக்குநர் உதயன் குழுமம்)

பிரதம அதிதி
**இரா.சம்பந்தன் பா.உ**
எதிர்க்கட்சித் தலைவர் – இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு,
தலைவர் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு

சிறப்பு அதிதி
**மாவை.சோ.சேனாதிராசா பா.உ**
தலைவர் – இலங்கை தமிழ் அரசுக்கட்சி

கௌரவ அதிதிகள்
**பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா**
பீடாதிபதி விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்
**வைத்திய கலாநிதி S.கண்ணதாசன்**
துறைத்தலைவர், நோயியல்துறைமருத்துவபீடம்,
யாழ். பல்கலைக்கழகம்

நிகழ்ச்சி நிரல்
- ஆலய வழிபாட்டினைத் தொடர்ந்து அதிதிகள், சாதனையாளர்கள் விழா மேடைக்கு அழைத்து வரப்படுதல்
- மங்கல விளக்கேற்றல்
- தமிழ் அரசுக்கட்சியின் கொடியேற்றுதல்
- அகவணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்பு நடனம்
- வரவேற்பு உரை - திரு.வெ.கனகசபாபதி
  பொருளாளர் -இலங்கை தமிழ் அரசுக்கட்சி
- ஆசி உரைகள் - கலாநிதி ஆறுதிருமுருகன்
  தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
  சிவபூமி அறக்கட்டளை
  அருட்தந்தை செபஸ்டியன் அன்ரனி
  தென்னிந்திய திருச்சபை ஆலயகுரு
- தலைமையுரை
- கௌரவ அதிதிகள் உரை
- சிறப்பு அதிதி உரை
- பிரதம அதிதி உரை
- சாதனையாளர்களை கௌரவித்தல்
- வட்டுக்கோட்டையில் நாடாளுமன்ற உறுப்பினரால் மேற்கொள்ளப் படுகின்ற செயல் திட்டங்கள் பற்றிய விளக்கமளித்தல்.
- கலைநிகழ்வுகள்
- நன்றியுரை
  அ.ஜெயநேசன்
  (உப செயலாளர்: மானிப்பாய் தொகுதி)
- கொடியிறக்கம்

இலங்கை தமிழ் அரசுக்கட்சி வட்டுக்கோட்டை கிளை அலுவலகம்,
சரவணபவன் அறக்கட்டளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.